# நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தின்

# புதிய கட்டடத் திறப்பு விழா
# சிறப்பு மலர்



இலண்டன் நல்லை ஆதீன திருப்பணி நிதிக்குழு

ஞாயிறு 23.06.2013

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.

# நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தின்

# புதிய கட்டடத் திறப்பு விழா
# சிறப்பு மலர்

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.

தொகுப்பாசிரியர்:

**நடராசா சச்சிதானந்தன்**


09 JUL 2013

## இலண்டன் நல்லை ஆதீன திருப்பணி நிதிக்குழு

## ஞாயிறு 23.06.2013

6951 PL/Arch

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.



நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன

முதலாவது குருமுதல்வரும்

ஸ்தாபகருமாகிய

# ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள்

(மணி பாகவதர்)

அவர்களின் பாதக் கமலங்களை

நினைந்து

வணங்குகின்றோம்.

உ
குருபாதம் துணை

# நல்லை திருஞான சம்பந்த ஆதீன குரு முதல்வரின் அருளாசிச் செய்தி



**தேவாரம்**

**திருச்சிற்றம்பலம்**

**மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் வைகலும்**
**எண்ணில் கதிற்கு யாதுமோர் குறைவில்லை**
**கண்ணினல் லகுதுறும் களுமவ வளநகர்**
**பெண்ணிள்ளாளொடும் பெருந்தகையிருந்ததே.**

**திருச்சிற்றம்பலம்**

மெய்யடியார்களே, குருவருளாலும் திருவருளாலும் எமது ஆதீனத்தின் புதிய மடாலய திறப்பு விழா குறித்து வெளியிடப்படும் மலருக்கு ஆசிச் செய்தி வழங்குவதில் ஆனந்தமடைகிறோம். எங்கள் குருநாதர் ஏற்றி வைத்த தீபம் தொடர்ந்து பிரகாசித்துக் கொண்டிருக்கிறது. ஈழத்திருநாட்டில் சைவஆதீனம் உருவாக வேண்டுமென்று அர்ப்பணிப்போடு சேவையாற்றிய சுவாமிகள் சமாதி நிலையில் நின்று நல்லை ஆதீனத்தின் இன்றைய வளர்ச்சி கண்டு பூரண மகிழ்வெய்துவார் என்பதில் ஐயமில்லை. சுவாமிகளின் கட்டளைப்படி ஆதீனப் பணிகள் யாவும் கடந்த 32ஆண்டு காலமாக எவ்வித குறையுமின்றி நிறைவாக நடைபெற்று வருகின்றன. உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வாழுகின்ற சைவ அன்பர்களின் பூரண ஒத்துழைப்பே அதற்குக் காரணம்.

நல்லை திருஞான சம்பந்த ஆதீனம் 150 வருடங்கள் பழமை வாய்ந்த மாப்பாண முதலியார் பரம்பரை வாழ்ந்த வீட்டில் புத்தூர் மழவராயர் அறக்கட்டளை வழங்கிய ஆதனத்தில் இயங்கி வருவது யாவரும் அறிவோம். போர்ச் சூழலில் ஆதன மடாலயம் பாதிக்கப்பட்டதுடன் காலம் கடந்த கட்டிடம் என்ற காரணத்தினால் பாவிக்கமுடியாத சூழ்நிலை ஏற்பட்டது. இந்நிலையை போக்குவதற்கு லண்டன் வாழ் சைவ அன்பர்கள் முன்வந்தார்கள். கடந்த சில ஆண்டுகளாக லண்டன் வாழ் சைவஅன்பர்கள் ஒருங்கிணைந்து நல்லூர் ஆதீன கட்டிட குழுவை உருவாக்கினர். இவர்களது கடின முயற்சியால் நிதி சேகரிக்கப்பட்டு அகில இலங்கை இந்து மாமன்றத்தின் மேற்பார்வையில் புதிய மடாலயம் இரு மாடிகளைக் கொண்ட அமைப்பில் சிறப்பாக கட்டி முடிக்கப்பட்டது. இப்பணியில் ஈடுபட்ட அனைவருக்கும் திருவருள் நிறைவாகக் கிடைக்க பிரார்த்திக்கின்றோம். பல லட்ச ரூபா செலவில் சகல வசதிகளும் உள்ளடக்கிய மடாலயம் எழுச்சி பெற்றுள்ளது. இப்பணியில் ஈடுபட்ட ஒவ்வொருக்கும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம். எவ்வளவோ சிரமங்களுக்கு மத்தியில் லண்டன் ஆதீனக் கட்டிட குழு நிதி சேகரித்தனர். லண்டனில் உள்ள சைவ திருக்கோயில்களும் பொதுமக்களும் தம்மால் ஆன பங்களிப்பை வழங்கியுள்ளனர்.


ஒரு வரலாற்று கைங்கரியத்தை அனைவரும் ஒன்றிணைந்து நிறைவேற்றியுள்ளனர். ஆதீன வரலாற்றில் இக்கைங்கரியம் என்றும் நன்றியோடு பேசப்படும் என்பதில் ஐயமில்லை. இக்கட்டிட நிர்மாணப் பணியில் ஈடுபட்ட கட்டிடக் கலைஞர்களையும் இவ்வேளையில் வாழ்த்துகிறோம். ஆதீன சம்பிரதாயம் அனைத்தும் குருவருளோடும் அன்பர்களின் ஆதரவோடும் நல்ல முறையில் தொடர பிரார்த்திக்கின்றோம். ஆதீன வளர்ச்சிக்கு இந்நாள் வரை அயராது உழைக்கும் அன்பர்கள் அனைவருக்கும் நல்வாழ்த்துக்களையும் நன்றிகளையும் கூறி அமைகின்றோம்.

**என்றும் வேண்டும் இன்ப அன்பு**

**சுவாமிகள்**
**குருமுதல்வர், நல்லை திருஞானசம்பந்த ஆதீனம்.**



உ
சிவபெருமான் பேரருள்



தொலைபேசி : 0452 : 4377116
4381005

புனித மிக்க
மதுரை ஆதீனம்
292 ஆவது குருமகாசன்னிதானம்
& ஆதீனகர்த்தர்
ஸ்ரீலஸ்ரீ அருணகிரிநாத
ஸ்ரீ ஞானசம்பந்த தேசிக
பரமாசாரிய சுவாமிகள்

தெற்காவணி மூல வீதி,
மதுரை - 625 001.

நமது பேரன்பிற்குரிய திரு. தேவசகாயம் அவர்களுக்கு, எல்லாம் வல்ல எம்பெருமானைப் பிரார்த்தித்து ஆசீர்வதித்து எழுதுவது.

யாழ்ப்பாணம் நல்லூர் ஆதீனத் திருமடாலயம், கடந்த நாற்பத்தைந்து ஆண்டுகளுக்கு மேலாக சைவசமயப் பிரச்சாரம் மேற்கொண்டு சிறப்பாக இயற்கி வருவது மகிழ்ச்சிக்குரியதாக இருக்கிறது. எமது குருநாதராக வீற்றிருந்தருளிய 291ஆவது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஸ்ரீ ஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள், நல்லூர் ஸ்ரீமத் சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகளுக்கு விசேட தீட்சை, மந்த்ர காஷாயம், ஆசார்ய அபிஷேகம் முதலான மதுரை ஆதீனச் சம்பிரதாயச் சடங்குகளைச் செய்வித்து, ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத ஸ்ரீ ஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள் என்ற தீட்சா நாமம் சூட்டி, நல்லை ஆதீனத்தின் முதல் பீடாதிபதியாக பட்டம் சூட்டியருளினார்கள்.

ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத ஸ்ரீ ஞானசம்ந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள், தேவாரம், திருவாசகம், திருப்புகழ், திருமந்திரம் கந்தரலங்காரம், கந்தரனுபூதி போன்ற நமது சமய நூல்களில் ஆழ்ந்த நுணுக்கமும், புலமையும், பேச்சாற்றலும் மிக்கவராகத் திகழ்ந்தார்கள் என்பதை நாம் நன்கறிவோம். அவர்களது வழியைப் பின்பற்றி இரண்டாவது பீடாதிபதியாக விளங்குகின்ற ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஸ்ரீ ஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள், சமயப் பற்றும் உற்சாகமும் கொண்டு விளங்கி வருவதை அறிய மன நிறைவு ஏற்படுகிறது. நல்லூார் ஆதீனத்தில் புதிய பிரமாண்டமான கட்டிடம் எழுப்பி அதனைத் திறந்து வைத்து ஆசீர்வதிக்க வேண்டும் எனக் கேட்டது, எமக்கு மிக மகிழ்ச்சியே. எனினும் சூழ்நிலைகள் சரியாக இல்லை என்பதால், அவ்விடம் நேரில் எழுந்தருள்வதைத் தவிர்த்துள்ளோம். அப்புதிய கட்டிடம் எழுப்புவதற்கு எல்லாவகைகளிலும் உதவிகளையும், ஒத்துழைப்பையும் நல்கிய பல்வேறு நாடுகளில் வாழும் இலங்கைத் தமிழ்ச் சகோதரர்கள், சகோதரிகள் அனைவருக்கும் நமது நல்லாசிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். நல்லூர் ஆதீனம் மென்மேலும் நமது சைவத்தையும், தமிழழையும் பரப்புகின்ற பெரும் பணியைத் தொய்வின்றிச் செய்துவர எமது நிரந்தரத் தாய் தந்தையாகிய சிவபெருமான் - பார்வதி தேவியாரைப் பிரார்த்தித்து ஆசீர் வதிக்கின்றோம். எல்லோர்க்கும் ஆசீர்வாதம்.

13.06.2013

**ஸ்ரீ ஞானசம்பந்த தேசிகர்.**

உ
சிவ சிவ

"கயிலைமாமுனிவர்"
ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள்,
அதிபர்.

ஸ்ரீ காசிமடம்,
திருப்பனந்தாள் - 612 504,
தஞ்சை மாவட்டம், தமிழ்நாடு.

Email : srikasimutt@gmail.com.

நாள்: 15.6.2013





வாழ்த்துரை

தாயினு நல்ல தலைவரென் றடியார்
தம்மடி போற்றிசைப் பார்கள்
வாயினு மனத்து மருவிநின் றகலா
மாண்பினர் காண்பல வேடர்
நோயிலும் பிணியுந் தொழிலர்பால்
நீக்கி நுழைதரு நூலினர் ஞாலம்
கோயிலுஞ் சுனையுங் கடலுடன் சூழ்ந்த
கோணமா மலையமர்ந் தாரே

'நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்', யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ளது. ஈழத்தமிழர்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு. காலத்தின் கட்டுப்பாட்டால், புலம்பெயரந்து பல்வேறு நாடுகளிலும் வாழ்ந்துவரும் சைவத்தமிழ்பேசும் மக்கள், மனமுவந்து செய்துள்ள உதவியால் இவ்வாதீனத்திற்குப் புதிய கட்டிடம் கட்டப்பெற்று, அதன் திறப்புவிழா 23-6-13 தேதி நடைபெறவிருப்பது அறிந்து மகிழ்ச்சி.விழாச் சிறப்புற நிகழ்ந்து அனைவரும் மனமகிழ்வெய்திடவும், விழாவையொட்டி வெளிவரவுள்ள சிறப்பு மலர், சீரிய செய்திகளைத் தாங்கிப் படிப்போர்க்கு உறுபயன் விளைத்திடவும் செந்திற்கந்தன் சேவடிகளைச் சிந்தித்து வாழ்த்துகிறோம்.

ஜெ.

-சுபம்-


டாக்டர் திரு அப்பையா தேவசகாயம்
இணைப்பாளர்,
நல்லை ஆதீனக் கட்டிடக் குழு
இலண்டன்

உ

குருபாதம்

தந்தை தாயும் நீ : என்னுயிர் துணையும் நீ
சஞ்சல மதுதீர்க்க
வந்த தேசிக வடிவும் நீ : உனையலால்
மற்றொரு துணை காணேன் :
அந்தம் ஆதியும் அளப்பெருஞ் சோதியே!
ஆதியே அடியார்தம்
சிந்தை மேவிய தாயுமா னவன்எனும்
சிரகிரிப் பெருமானே!

- ஸ்ரீ தாயுமான சுவாமிகள்



உ

## முனைவர் ஸ்ரீமத் மௌன குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள்

**கட்டளை விசாரணை**
**தருமையாதீனம் ஸ்ரீ மௌனமடம் - மலைக்கோட்டை**
**திருச்சிராப்பள்ளி - 620 002. போன் : 0431 - 2702472**

---

பண்டு நால்வருக்கு அறம் உரைத்து அருளிப் பல உலகினில் உயிர் வாழ்க்கை
கண்டநாதனார் கடலிடம் கைதொழக் காதலித்து உறை கோயில்
வண்டு பண்செயும் மாமலரப் பொழிலஞ்சை நடம்இடு மாதோட்டம்
தொண்டர் நாள் தோறும் துதிசெய் அருள் செய் கேதீச்சரம் அதுதானே

- திருஞானசம்பந்தர்.

யாழ்ப்பாணம் நல்லை ஆதீன புனருத்தாரண ஒருங்கிணைப்பாளரும் இலண்டன் ஸ்ரீ கனக துர்க்காம்பிகா கோயில் அறங்காவலருமான டாக்டர் ஏ.தேவசகாயம் அவர்களுக்கு திருவருளையும் குருவருளையும் சிந்தித்து எழுதியது.

ஈஸ்வரங்கள் ஐந்து கொண்டு அதில் இரண்டு பாடல் பெற்ற தலங்களையும் நான்கு திருப்புகழ் பாடல் பெற்ற தலங்களையும் கொண்டு திருமூலரால் சிவபூமி எனப் போற்றப் பெறும் ஈழநாட்டில் திருஞான சம்பந்தர் பெயரில் நல்லூரில் "நல்லையாதீனம்" ஸ்தாபிக்கப்பெற்று சைவசமய பணிகளை செம்மையாகச் செய்து வருகிறது.

இதனை மதுரை 291 ஆவது ஆதீனம் அவர்கள் தாம் அவதரித்த பூமியாதலின் சுவாமிநாத தேசிக பரமாசாரிய சுவாமிகளை வைத்து துவக்கினார்கள்.

அந்த ஆதீனத்தின் இரண்டாவது பட்டம் சோமசுந்தர பரமாசாரிய சுவாமிகள் ஒல்லும் வகையான அறநெறிகளை போதித்தும் சாதித்தும் வருகிறார்கள்.

இவ்வாதீனம் சமீபத்தில் நடந்த கலவரத்தில் சிதிலமடைந்ததை எண்ணி புலம்பெயர்ந்த ஈழநாட்டு தமிழர்கள் அந்தந்த நாட்டிலிருந்து பொருளுதவியளித்து புனருத்தாரணம் செய்து செம்மையாக வடித்து அமைத்துள்ளார்கள். இது பாராட்டவும் போற்றவும் கூடியது.

இவ்வாதீன குருவருளுக்கு பாத்திரமான லண்டன் பாரிஸ், தவிர இலங்கை, மலேசியா என பல நாட்டு அன்பர்களுக்கும் இப்புனருத்தாரண கமிட்டி அன்பர்களுக்கும் நல்வாழ்த்துக்கள். ஆதீனத் தலைவருக்கு நமது போற்றுதல்கள், விழாவும் விழா மலரும் சிறக்க நமது வாழ்த்துக்கள்.

**மௌன குமாரசுவாமித் தம்பிரான்.**

திருக்கயிலாய மரபு மெய்கண்டார் வழிவழி
கயிலைக்குருமணி சீர்வளர்சீர்
**சாந்தலிங்க இராமசாமியடிகள்**
பேரூராதீனம், பேரூர்,
கோயமுத்தூர்-641 010, தமிழ்நாடு
தொலைபேசி : 0422-2607995, 2608678, நகலி : 2607994
webpage: www.sivasiva.in,
peruratheenam.blogsopt.com

உ



Holy Kailasa heritage Meikandar
heritary - Kailai Guru Mani - Seervalarseer
**Santhalinga Ramasamy Adigal**
Peruraatheenam, Perur,
Coimbatore -641 010, Tamilnadu.
Telephone:0422-2607995,2608678, Fax : 2607994
Email : peruradigal@yahoo.com
: perurmutt@yahoo.com



(தவத்திரு சாந்தலிங்க இராமசாமியடிகள்)

# சான்றோரைப் போற்றும் ஆதீனம்

ஓம்

இலங்கையில் தமிழ்ப்பெருங் கடவுளாம் முருகப்பெருமான் வீற்றிருக்கும் தலங்களுள் சிறந்து விளங்குவது யாழ்ப்பாணம் நல்லூர். இங்கு குடிகொண்டிருக்கும் முருகக்கடவுள் வேண்டுவார்க்கு வேண்டுவன நல்கும் பெருமான் ஆவான். அத்திருக்கோயிலுக்கு மிக அருகில் அமைந்துள்ளதும் நீண்ட நெடிய வரலாற்றை உடையதும் சைவமும் தமிழும் போற்றும் பங்குடையதுமான ஆதீனம் நல்லூர் ஆதீனம். வாழையடி வாழையாக வரும் திருக்கூட்டத்திருமரபில் தொண்டாற்றி வருவது. தமிழ் வளர்த்த தன்னேரில்லாச் சான்றோர்கள் பலரையும் ஏற்றிப் போற்றி ஆதரித்த பெருமைக்குரியது. சூழல்கள் நிமித்தமாக மண்ணிண் மைந்தர்கள் புலம்பெயர்ந்து சென்ற இடங்களுக்கெல்லாம் சீர்வளர்சீர் சந்நிதானங்கள் எழுந்தருளி அவர்தம் மேன்மைகொள் சைவநீதியை வளர்த்தி வரும் அரும்பணி ஆற்றி வருகிறார்கள். உலக சைவப் பேரவையின் மாநாடுகளில் கலந்து கொண்டு சைவ எழுச்சிக்கு உழைத்து வருகிறார்கள்.

பலமுறை திருக்கயிலாய மரபு மெய்கண்டார் வழிவழி பேரூராதீனத்திற்கு எழுந்தருளியுள்ளார்கள். சீர்வளர்சீர் கயிலை குருமணி முதுமுனைவர் பேரூரடிகளாரிடம் உழுவல் அன்பு கொண்டு ஒழுகுபவர். நாமும் நல்லூர் ஆதீனம் சென்று வந்துள்ளோம். காலத்தாலும் போர்ச்சூழலாலும் பழமையான ஆதீனக் கட்டடங்கள் பழுதடைந்திருந்தன. இந்நிலையில் திருமடத்தைப் புதுப்பிக்க அன்பர்கள் அடியார்கள் தாய்மண்ணிலிருந்தும் புலம்பெயர்ந்த இடங்களிலிருந்தும் முன்வந்துள்ளது பாராட்டுக்குரியது. இலண்டன் தேவசகாயம் அவர்கள் தொலைபேசியில் தொடர்புகொண்டு வாழ்த்துரை கேட்டார்கள். அவர்களுக்கும் இவ்வரிய திருப்பணியில் பங்கு பெற்றோர்க்கும் எல்லாம் வல்ல அம்பலவாணப் பெருமான் இன்னருளும் திருக்கயிலாய மரபு மெய்கண்டார் வழிவழி பேரூராதீன ஆதி குருமுதல்வர் சாந்தலிங்கப் பெருமான் தண்ணருளும் கயிலைக் குருமணி முதுமுனைவர் சீர்வளர்சீர் பேரூரடிகளாரின் குருவருளும் கிடைக்க நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**மருதாசல அடிகள்.**

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்

NALLAI THIRUGNANASAMBANDAR ADHEENAM

பிரித்தானியக் கிளை

5 Chapel Road, West Ealing, Middlesex, W13 9AE




நல்லை திருஞானசம்பந்த ஆதீனம் புதிய கட்டிடம் கட்டப்பட்டு திறந்து வைப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். 16.6.2011 திரு.யோகநாதன் அவர்கள் தொலைபேசியில் என்னிடம் ஒரு வேண்டுகோள் விடுத்தார் நல்லை ஆதீன கட்டிட திருப்பணி பல நபர்களால் 2005 ஆம் அண்டில் தொடக்கப்பட்டு ஒன்றுமே நடைபெறாத நிலையில் 6 வருடகாலமாக பாழடைந்த நிலையில் இருப்பதாக கூறினார். 19.6.2011 அன்று சுவாமியின் தலைமையில் ஒரு கூட்டம் நடப்பதாகவும் என்னை தலைமைப்பதவி எடுத்து கட்டிட பணியை ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டார். நான் பணம் தந்து உதவி செய்கிறேன். ஆனால் எனக்கு பதவி வேண்டாம் என்று கூறினேன். நீங்கள்தான் தலைமைப்பதவிக்கு தகுந்தவர், நீங்கள் தலைமை ஏற்றால் நிச்சயம் கட்டிடம் கட்டி முடிக்கப்படும் என கூறினார்.

திரு.யோகநாதனின் வேண்டுகோளுக்கிணங்க எழுபதிலும் கூடிய பொதுமக்கள் சைவ திருக்கோயில் அறங்காவலர்கள் கூடிய கூட்டத்தில் 11.6.2011 ல் ஏகமனதாக தெரியப்பட்டு தலைமைப் பதவியை ஏற்றுக் கொண்டேன். எனது திட்டம் ஒரு வருடத்திற்குள் ஆதீன கட்டி டம் கட்டப்பட வேண்டும் என்பதே.10 நாட்களுக்குள் நான் கொழும்பு சென்று திரு நீலகண்டனின் உதவியுடன் வரைபடம் முடிக்கப்பட்டது. இரண்டு கட்டட கலைஞர்களிடம் மதிப்பீடு எடுக்கப் பட்டது. திரு.சண்முகநாதன் தெரிவு செய்யப்பட்டு ஒப்பந்தம் செய்யப்பட்டது. அகில இலங்கை இந்து மாமன்றத்துடன் மேற்பார்வை செய்வதாக M.O.U கையெழுத்து இடப்பட்டது. திரு.ஆறு திருமுகனின் உதவியுடன் மேயர் திருமதி யோகேஸ்வரி ஆதீனத்துக்கு அழைக்கப்பட்டு சுவாமி யின் தலைமையில் வரைபடம் மேயரிடம் கையளிக்கப்பட்டது.

அடுத்த நாள் நானும் எனது மனைவியும் மேயரின் காரியாலயம் சென்று வரைபடத்துக்கு அங்கீகாரம் பெறப்பட்டது. தான் யோகர் சுவாமியின் பக்தர் எனவும் நல்லூரில் பிறந்து வளர்ந் ததாகவும் கூறி தான் எந்தவித உதவியும் ஆதீனத்துக்கு செய்ய தயார் நிலையில் இருப்பதாக கூறினார் மேயர் திருமதி யோகேஸ்வரி. அவர்களின் உதவிக்கு நானும் யாழ் மக்களும் என்றும் நன்றியுடையவர்களாக இருப்போம். கட்டிட கலைஞர் திரு. சண்முகநாதன் அவர்கள் மிகவும் துரித கதியில் கட்டிடத்தைக் கட்டியிருக்கிறார். அவர் வரைபடத்தில் ஒப்புக் கொண்டதற்கு மேலாக கட்டிடத்தை தனது சொந்த செலவில் அழகுபடுத்தியுள்ளார். கட்டிடப் பொருட்கள் விலை உயர்ந்த பொழுதும் அந்த விலை உயர்வைத் தானே ஏற்றுக் கொண்டார். அவருக்கு நானும் இலண்டன் சைவ பெருமக்களும் நன்றி கூறிக் கொள்கின்றோம். நான் திரு. ஆறு திருமுருகனிடம் எங்கள் சைவ சமயத்தின் சின்னமும் கடைசி யாழ் தமிழ் மன்னன் சங்கிலியனின் சின்னமுமாகிய நந்தி ஒன்று இந்த ஆதீனத்தின் முன் இருக்கவேண்டுமென கேட்டுக் கொண்டேன். அவர் ஒன்றுக்கு இரண்டாக அழகான நந்திகளை கட்டிடத்தின் மேலே வைத்து அழகுசேர்த்திருக் கின்றார். அவரின் அயராத உழைப்புக்கு லண்டன சைவ பெருமக்களின் சார்பில் நன்றி கூறிக் கொள்கின்றேன். இந்த மணிமண்டபத்துக்கு லண்டன் திருக்கோயில்களும் லண்டன சைவ பெருமக்களும் 200 லட்சம் ரூபா வரை பங்களிப்பு செய்துள்ளார்கள். மிகுதி ரூபா 17 லட்சத்தை லண்டன் கட்டிட குழு ஒரு சிலரின் நடவடிக்கையினால் கடைசி நேரத்தில் சேகரிக்க

முடியாமல் போய்விட்டது. நான் திருமுருகனிடம் அவர்களை இந்த மிகுதிப்பணம் ரூ.17 லட்சத்தை இந்து மாமன்றம் பொறுப்பேற்று கட்டிடத்தை பொறுப்பேற்றுத் தருமாறு கேட்டேன். அவர் இந்து மாமன்றத்தின் ஊடாக ரூ.17 லட்சம் தந்து கட்டிடத்தை கட்டி முடிக்க உதவி செய்தார். இந்த பங்களிப்புக்கு நானும் லண்டன் சைவ பெருமக்களும் இந்து மாமன்றத்துக்கு நன்றி உடையவர்களாக இருப்போம். பெரும் வேலை மத்தியிலும் திரு. நீலகண்டன் அவர்கள் எந்த நேரத்திலும் ஆதீன கட்டட வேலைக்கு மேற்பார்வை உதவி செய்தார். எப்பிரச்சினைகளை எதிர்கொண்ட போதிலும் கட்டிடம் பூர்த்தியாக வேண்டும் என்ற ஒரே கொள்கையுடன் அயராது பாடுபட்டனர் திரு. ஆறு திருமுருகன், திரு.நீலகண்டன். அவர்களின் பணி தொடர்ந்தும் ஆதீனத்துக்கு கிடைக்க வேண்டுமென இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஈழத்தில் உள்ள சைவ ஆதீனத்துக்கு லண்டன் சைவ பெருமக்கள் ஒரு சபை அமைத்து தொடர்ந்தும் பல உதவிகளை செய்தார்கள். ஆதீன முதல்வரும் யாழ். சைவ பெருமக்களும் இந்த ஆதீனத்தினுாடாக தமிழையும் சைவத்தையும் அகில இலங்கையிலும் வளர்க்க வேண்டுமென வாழ்த்தி விடைபெறுகின்றேன்.

**சூரிப்பிள்ளை பாலசிங்கம்**
156 KENSINGTON AVENUE
LONDON E12 3N UK

---

# நல்லை ஆதீனம்


தமிழ் கூறும் நல்லுலகின் யாழ்ப்பாணத்துச் சைவத் தமிழ்ச் சமூகம் பக்தர்களின் நல்வாழ்வு வேண்டி பணிகள் பலவற்றைச் செய்துள்ளது. அவர்களது தெய்வ பக்தி சிறக்கவேண்டி பலப் பல தேவாலயங்களையும் கல்வி சிறக்க வேண்டி வித்தியாலயங்களையும் கண்ட அச் சமூகம் அவர்கள் பண்பாடு மேலோங்க ஆதீனங்களை அமைக்க பலநூறு ஆண்டுகள் காத் திருக்க வேண்டியதாயிற்று.

தனிமனிதராகவும் குழுவினராகவும் பலர் இக்குறையைத் தீர்க்கத் தொண்டு செய்தனர். குறிப்பிடத்தக்க பலருள் நல்லை ஆறுமுக நாவலரும் ஒருவர். சென்ற நூற்றாண்டில் C.S.S. மணிஜயர் என விளங்கிய பெருமகனார் மதுரை திருஞானசம்பந்தர் ஆதீன கர்த்தரின் ஆசீர் வாதத்தோடு நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீனம் என்னும் நாமத்தோடு ஆதீனம் அமைந்து அதன் ஆதி கர்த்தாவாகவும் தொண்டு செய்து இளவரசாக இயங்கி வந்த சோமசுந்தர பரமாசாரியரை ஆதீன கர்த்தராக்கி இறைபதம் அடைந்தார். புத்தூர் மழவராயர் அமைத்திருந்த மடாலயம் ஆதீன தலைமைக் காரியாலமாயிற்று. பழமை மிக்க அம்மடாலயம் புதுக்கப்பெற்று பணி செய்யத் தொடங்குவது நம் தவப்பேறே. இலங்கை நாட்டில் மட்டுமன்றி உலகின் பல் வேறு நாடுகளிலும் பயன்தரும் பணிகள் புரியப்போகின்றது. திருவருள் துணை நிற்க வேண்டுவோமாக!

என்றும் வேண்டும் இன்ப அன்பு.

**மு.சிவராசா**
இலண்டன்.

# Anbe Sivam



I have immense pleasure in sending this message of felicitation and well wishes on the occasion of the ceremonial opening of the monastery (Madalayam) building on 23rd June 2013 which was constructed with the blessings of the Shrila Shri Somasunthara Thesiga Gnanasambantha Paramachariya Swamigal of Nallai Aatheenam, Jaffna with the financial assistance of Saivites and the Trustees of temples in the United Kingdom with the magnanimous support and co-operation of the All Ceylon Hindu Congress in Sri Lanka.

Nallai Atheenam was founded in 1966 by the present Swamigal's Guru His Holiness Shrila Shri Swaminatha Desiga Gnanasambatha Paramachariya Swamigal. This Atheenam is the only one of its kind in Sri Lanka and is modelled on the lines of the traditional monasteries of South India.

In fact, the head of Nallai Atheenam is considered to be as the spiritual leader of the Hindu Saivites in Sri Lanka. Nallai Atheenam's Swamigal renders his blessings to the Hindu community to enhance and enrich Hindu traditions and cultural values.

Indeed, this new monastery (Madalayam) building for Atheenam's Swamigal will immensely help Hindus in Sri Lanka to participate in several religious activities and community service with greater vigour.

The All Ceylon Hindu Congress and several individuals of eminence and erudition in Sri Lanka and abroad will continue to render their fullest support for the betterment and upliftment of humanity in their sphere of religious activities.

Further, the opening of this building is indeed timely and well deserved gesture on the part of the saivites and undoubtedly will give added strength and source of encourgement to the Hindu Community globally.

May the Almighty Lord Shiva shower His Divine blessings to Swamigal abundantly and grant him good health, strength and peace of mind to continue with his Divine service to humanity

**Dr. S. T. S. Somasegaram**
Vice President- London Nallai Aatheenam Building Committee
Vice President- London Sivan Kovil

AUM

அகில இலங்கை இந்து மாமன்றம்

(இலங்கை இந்துமன்ற அமைப்புகளினதும் ஆலய நம்பிக்கை பொறுப்புகளினதும் கூட்டமைப்பு)

**ALL CEYLON HINDU CONGRESS**

(Federation of Hindu Religious Associations and Temple Trusts in Sri Lanka)

| நம்பிக்கைப் பொறுப்பாளர் சபைத் தலைவர் | தலைவர் | பொதுச் செயலாளர் | பொருளாளர் |
|---|---|---|---|
| **Chairman of the Board of Trustees** | **President:** | **Hony. General Secretary:** | **Hony. Treasurer:** |
| *V.Kailasapillai* | *Kandiah Neelakandan* | *Muttiah Kathirgamanathan* | *V. Kandasamy* |
| *Phone:2575566 (Res)* | *Phone: 2580807 (Res)* | *Phone: 2582139 (Res)* | *Phone: 2586620 (Res)* |
| *Fax : 2575472* | *2371100 (Off) - Fax : 2371111* | *Fax: 2361381* | *Mobile: 071-5349150* |
| *hariomak@gmail.com* | *neela@mnlaw.lk* | *mknathan21@yahoo.com* | *vkandasami@gmail.com* |




# அகில இலங்கை இந்து மாமன்ற அறக்கட்டளைத் தலைவரும் இலங்கை மனித நேய அமைப்பின் தலைவருமான மனித நேயர் உயர்திரு வி. கைலாசபிள்ளை அவர்கள் வழங்கிய வாழ்த்துச் செய்தி

சைவத் தமிழர்களின உன்னத வாழ்வுக்கு வழிகாட்டிகளாக விளங்கு பவர்கள் ஆதீன குரு முதல்வர்கள். பாரத தேசத்தின் பல சைவ ஆதீனங்கள் தோன்றி சைவ சமய வளர்ச்சிக்கு பெருந்துணை செய்து வருகின்றன. எங்கள் நாட்டில் நல்லூர் திருஞான சம்பந்த ஆதீனம் தோற்றம் பெற்று கடந்த 47 ஆண்டுகளாக சிறப்பாக இயங்கி வருகின்றது. தனது சொல்வன்மையால் பல்லாயிரக்கணக்கான சைவ மக்களை கவர்ந்தவர் மணிபாகவதர் அவர்கள். ஈழநாட்டின் சைவ ஆதினத்தை தோற்றுவித்து தன் வாழ்வை துறந்து துறவியாகி அருஞ் சேவையாற்றிய அப் பெருமகனாரின் கனவு வீண்போக வில்லை. அவரின் வாரிசாக பதவியேற்ற இன்றை சுவாமிகள் குருவின் நெறியில் நின்று வழுவாது ஆதீனத்தை நெறிப்படுத்தி வருகிறார்கள்.

பொதுமக்களாகிய நாம ஆதீனங்கள், மடங்கள், சமய நிறுவனங்கள் சிறப்பாக இயங்கு வதற்கு எம்மாலான உதவிகளை செய்ய வேண்டியது கடமையாகும். இலண்டன் வாழ சைவ மக்கள் நல்லை ஆதீனத்தின் மீது கொண்ட அக்கறை காரணமாக கோடிக்கணக்கான ரூபா செலவில் பிரமாண்டமான மாடிக்கட்டடத்தை உருவாக்கி கையளிப்பது நன்றிக்குரிய கைங்கரியமாகும். அகில இலங்கை இந்து மாமன்றம் இப்பணியில் இணைந்து செயற்பட்டி ருப்பது எமக்குப் பெருமையளிக்கிறது. ஆதீன வளர்ச்சியில் அனைவரும் மிகவும் அக்கறை யாக இருப்பது எதிர்காலம் பற்றிய நம்பிகையை தருகின்றது. இத்தெய்வீகப் பணியில் ஈடுபட்ட அனைவரையும் வாழ்த்துகிறேன். நல்லை திருஞானசம்பந்த ஆதீனம் சைவ சம யத்தவரின் உன்னதமான உயிரோட்டமான பீடமாக விளங்கப் பிரார்த்தித்து அமைகிறேன்.

Head Office: No 91/5, Sir Chittampalam A. Gardiner Mawatha, Colombo – 02, Sri Lanka.

Phone : 2434990 www.hinducongress.lk Fax : 2344720

hinducongress@gmail.com

AUM

அகில இலங்கை இந்து மாமன்றம்


(இலங்கை இந்துமன்ற அமைப்புகளினதும் ஆலய நம்பிக்கை பொறுப்புகளினதும் கூட்டமைப்பு)

**ALL CEYLON HINDU CONGRESS**

(Federation of Hindu Religious Associations and Temple Trusts in Sri Lanka)

| நம்பிக்கைப் பொறுப்பாளர் சபைத் தலைவர் | தலைவர் | பொதுச் செயலாளர் | பொருளாளர் |
|---|---|---|---|
| **Chairman of the Board of Trustees** | **President:** | **Hony. General Secretary:** | **Hony. Treasurer:** |
| *V.Kailasapillai* | *Kandiah Neelakandan* | *Muttiah Kathirgamanathan* | *V. Kandasamy* |
| *Phone:2575566 (Res)* | *Phone: 2580807 (Res)* | *Phone: 2582139 (Res)* | *Phone: 2586620 (Res)* |
| *Fax : 2575472* | *2371100 (Off) - Fax : 2371111* | *Fax: 2361381* | *Mobile: 071-5349150* |
| *hariomak@gmail.com* | *neela@mulaw.lk* | *mknathan21@yahoo.com* | *vkandasami@gmail.com* |


# மாமன்றத்தின் செய்தி



ஈழத்திரு நாட்டில் சைவத்தமிழர்களின் பெரும் சொத்தாக விளங்குவது, நல்லை திருஞான சம்பந்த ஆதீனம். நல்லை ஆதீனத்தை நிறுவிய முதலாவது குரு மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தம்பிரான் (மணி பாகவதர்) அவர்களின் திருவடியை நினைத்து வணங்குகிறேன். அப்பெருமானார் செய்த பெருந்தொண்டினால் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம் இன்று எழுச்சி பெற்று விளங்குகின்றது. இவ் ஆதீனத்தின் வளர்ச்சியில் அகில இலங்கை இந்து மாமன்றம் அன்றுதொட்டு இன்றுவரை தன்னாலான பங்களிப்பினை செய்து வருகின்றது. இன்றைய ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் தன் வாழ்வை அர்ப்பணித்து ஆதீனத்தை வளர்த்து எடுத்து வருகிறார்கள். அவர்களுக்கு சைவ உலகம் என்றும் கடமைப்பட்டிருக்கின்றது. அகில இலங்கை இந்து மாமன்றத்தின் புரவலராக விளங்கும் ஆதீன சுவாமிகள் மாமன்றத்தால் நடாத்தப்படும் சகல வைபவங்களிலும் தவறாது கலந்து கொள்வார். இந்து மாமன்றம் நடத்திய சைவமாநாடுகள் மற்றும் வரலாற்று நிகழ்ச்சிகள் அனைத்திலும் ஆதீன முதல்வர் பங்குபற்றி சிறப்பித்து ஆசி நல்கி வருவது நாம்செய்த பாக்கியம் எனலாம்.

யாழ் மண்ணில் எமது சமயத்தின் மகத்துவத்தைச் சான்று பகரும் நல்லூர் சிவபூமியில் இருக்கும் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தின் மடாலயக் கட்டடத்தின் நிலைமையைக் கண்டு சைவமக்கள் கவலைப்பட்ட தருணத்தில் இலண்டன் வாழ் எமது உடன் பிறப்புக்கள் கடமை உணர்வுடன் செய்த நற்கைங்கரியத்தால் இன்று நாங்கள் எல்லோரும் பெருமைப்படும் வகையில் புதிய மடாலயக் கட்டடம் நிர்மாணிக்கப்பட்டுத் திறந்துவைக்கப்படுகின்றது.

திரு. சூரிப்பிள்ளை பாலசிங்கம் தலைமையிலான இலண்டன் நல்லை ஆதீனக் கட்டடக் குழு இக் கட்டடத்தைக் கட்டுவதற்காக பெருந்தொகையான நிதியினை தங்களின் தளரா முயற்சியால் சேர்த்து மாமன்றத்திற்கு அனுப்பி, புதிய கட்டடத்தை நிர்மாணிக்க, மாமன்றத்திற்கு அவர்கள் வாய்ப்புத்தந்தது திருவருளே.

இப்பணியை எம்மாலானமட்டும் சிறப்பாக நிறைவேற்றி இருக்கிறோம். அதற்கு மாமன்றக் குழுவில் பணியாற்றிய சகலருக்கும் குறிப்பாக கடந்த இரு தசாப்தங்களாக எங்களை

Head Office: No 91/5, Sir Chittampalam A. Gardiner Mawatha, Colombo – 02, Sri Lanka.
Phone : 2434990 www.hinducongress.lk Fax : 2344720
hinducongress@gmail.com

வழிநடத்தி வரும் மாமன்ற நம்பிக்கை பொறுப்பாளர் சபைத்தலைவர் இறைசிரோரத்தினம், மனிதநேய மாமணி வி.கயிலாசபிள்ளை ஐயா அவர்களுக்கும், மற்றும் பிரதித்தலைவர் திரு. மா.தவயோகராஜா, உபதலைவர் திரு.சின்னத்துரை தனபாலா, உபதலைவர் திரு.சி த.சி. அருளானந்தன், பொருளாளர் திரு.வே.கந்தசாமி, பொதுச் செயலாளர் கலாநிதி முத்தையா கதிர் காமநாதன் ஆகியோருக்கும் நன்றி கூறும் அதேசமயம் எமது யாழ்.பணிமனையிலிருந்து இக் கட்டட வேலைகளைக் கண்ணும் கருத்துமாய் கவனித்து வந்த மாமன்ற உபதலைவரும், இந்து ஆராய்ச்சி நிலையக் கௌரவ இயக்குநருமான கலாநிதி சைவஞானபானு செஞ்சொற் செல்வர் ஆறு. திருமுருகன் அவர்களுக்கும் அவருக்கு பல வழிகளில் ஒத்தாசை தந்த யாழ். பணிமனை நிர்வாக அலுவலர் திரு. வீ. ஜெயசிங்கம் அவர்களுக்கும் எமது பழுவைக் குறைத்தமைக்கு சிறப்பான நன்றி கூறவேண்டும்.

இந்த மடாலயக் கட்டடத்திற்குக் காணி தந்த மழவராயர் நம்பிக்கைப் பொறுப்பின் சார்பில் எமது குழுவுடன் நம்பிக்கைப்பொறுப்பளர்களில் ஒருவரான திரு. ஸ்ரீபுருஷோத்தமன் மழவராயர் இணைந்து ஒத்துழைத்தமைக்கும் நன்றி கூற வேண்டும்.

நல்லை ஆதீனத்தின் எதிர் கால நன்மை கருதி சுவாமிகளின் ஆணைப்படி ஆதீன அறக்கட்டளை உருவாக்கப்படுகின்றது. ஆதீன வளர்ச்சிக்கு அறக்கட்டளை உறுப்பினர்கள் தொடர்ந்து அரணாக நின்று செயற்படுவார்கள் எனக் கருதுகின்றோம். இந்தியாவில் உள்ள ஆதீனங்களுக்கு ஏராளமான சொத்துக்கள் உண்டு. இவ் ஆதினத்துக்கு நிரந்தர வருவாய்க்கான சொத்துக்கள் ஏதும் இதுவரை இல்லை. ஆதீன செயற்பாடுகள் அனைத்தும் எவ்வித குறைபாடுகள் இன்றி நடைபெற இவ் அறக்கட்டளை சீரிய முறையில் செயற்பட வேண்டும் என்பது அனைவரது விருப்பமாகும். அறக்கட்டளை சிறப்பாக இயங்குவதும் இலண்டன் வாழ் எமது சகோதரங்களின் உதவியில் தங்கி இருக்கும். அதற்கு நிச்சயம் அவர்கள் உதவுவார்கள் என்பதில் எமக்குப் பலமான நம்பிக்கையிருக்கிறது.

இவற்றுக்கும் மேலாக எமது யாழ். பணிமனை மூன்று மாடிக்கட்டடம், கீரிமலை மடம் முதலிய கட்டட வேலைகளைப் பொறுப்பேற்று வெறும் வர்த்தகரீதியில் நோக்காமல் சேவையுணர்வுடன் எமது பணிகளில் பங்காளராக உதவிவரும் ஜெயசன்யன் நிறுவன உரிமையாளர் திரு. க. சண்முகநாதன் இக்கட்டட வேலையையும் அதேபாணியில் பொறுப்பேற்று நிறைவேற்றிய சேவையை மனதாரப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்.

மறவாது, ஆனால் முக்கியமாக, தனிப்பட்டமுறையில் சிறியேன் குறிப்பிடவேண்டியதும் ஒன்று இருக்கின்றது. இலண்டன் நல்லூர் ஆதீனக் கட்டடக்குழுத் தலைவர் திரு. சூ. பாலசிங்கம், பொருளாளர் திரு. வே சிவசுந்தரம் ஆகியோருக்குக் கடந்த சில மாதங்களாகச் சிறியேன் கொடுத்த தொந்தரவை அவர்கள் பொறுமை காத்து, ஒத்துழைத்து, இக்கட்டடப் பூர்த்திக்கு தந்த ஆதரவுக்கு அவர்களுக்கும் அவர்களின் குழுவிற்கும் என்றும் கடமைப் பட்டிருக்கிறேன்.


புதிய மடாலயத் திறப்பு விழாவிற்கு மிளிர் ஊட்டும் வகையில் அன்பர் திரு. ந. சச்சிதானந் தன் மற்றவர்களில் குறிப்பாக அன்பர் கலாநிதி அ. தேவகாயம், கலாநிதி ஆறுதிருமுருகன் ஆகியோரின் உதவியுடன், இத்திறப்பு விழாவையொட்டி சிறப்பு மலரை இலண்டன் ஆதீனக் கட்டடக் குழு சார்பில் தயாரித்து வெளியிட எடுத்துவரும் முயற்சிகளையும் மெச்ச விரும்புகிறேன்.

ஒரு சிலரை பெயர் குறிப்பிட்டுப் பாராட்டினாலும் எந்த ஒரு தனிநபரும் இக்கட்டடப் பூர்த்

திச் சாதனைக்குரிய பெருமையை கோரமுடியாது. ஏன் என்றால், எல்லோரும் சேர்ந்து எடுத்த கூட்டுமுயற்சியில் திரண்டபலன் இது. அதற்கு அருள்பாலித்துக் கொண்டிருக்கும் ஸ்ரீ சிவகாமி சமேத ஸ்ரீ நடராஜப் பெருமானை என்றும் பிரார்த்தித்துக்கொண்டேயிருப்போமாக.

**கந்தையா நீலகண்டன்**
தலைவர்
அகில இலங்கை இந்து மாமன்றம்.
விஜய வருடம் ஆனித் திங்கள் 9ம் நாள்
23 யூன் 2013

---



உ
சிவமயம்
"மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்"

# சைவ பரிபாலன சபை
# SAIVA PARIPALANA SABHAI


**Founded and Eastablished in 1888 Incroporated Under Ordinance No. 17 of 1931**

66, கல்லூரி வீதி,
நீராவியடி,
யாழ்ப்பாணம்.

தொ.பே. இல: 021 2227678
021 3202191

*66,College Road,*
*Neeraviyady,*
*Jaffna.*

## வரலாற்றுப் பணியை ஆற்றும் ஆதீனம்



ஈழத் திருநாட்டில் சைவமும், தமிழும் தழைத்தோங்க விளங்கிய இராஜதானி நல்லூரில்தான் அமைந்திருந்தது.

சமய ஒழுக்க விழுமியங்களோடு சைவத்தையும் தமிழையும் பேணி வளர்க்கும் அரிய நிறுவனமாக இப்போது திகழ்கிறது நமது நல்லைத் திருஞானசம்பந்தர் ஆதீனம்.

இன்று நலிவுற்றிருக்கும் நமது மக்களின் மத்தியில் - குறிப்பாக இளம் சந்ததியினர் மத்தியில் - சமய, சமூக வழிகாட்டலையும் ஆன்மீக நெறிப்படுத்தலையும் முன்னெடுக்க வேண்டிய ஒரு கட்டாய கடப்பாடு நம் மீது சுமர்த்தப்பட்டிருக்கின்றது. இந்த வரலாற்றுப் பொறுப்பை தாங்கி முன்னெடுக்கும் பல்வேறு மதக் கட்டமைப்புக்களில் - குறிப்பாக சைவ நிறுவனங்களுள் - நல்லை ஆதீனம் முக்கிய மானதாகும்.


ஆதீனத்தின் பங்குபணியை விஸ்தரிக்க வழிசெய்யும் விதத்தில் மடாலயக் கட்டிடம் விரிவுபடுத்தப்பட்டு, புதுப்பொலிவுடன் புனரமைக்கப்பட்டு, திறப்பு விழாக் காண்பது ஈழத்து சைவத் தமிழ் அன்பர்களுக்கு மகிழ்வும் பெருமையும் தரும் செய்தியாகும்.

அந்த மகிழ்வில் நாமும் பங்குகொள்கின்றோம். நல்லைக் கந்தனின் திருவருளை வேண்டி வாழ்த்துகின்றோம்.

யாழ்ப்பாணம்
18.06.2013

**ந.வித்தியாதரன்**
**தலைவர்.**

# செஞ்சொற்செல்வர் வழங்கிய வாழ்த்துரை



நல்லை திருஞான சம்பந்த ஆதீனம் புதுப் பொலிவு பெற்று மிளிர்வது கண்டு மிகவும் ஆனந்தமடைகிறேன். நீண்ட நாள் கனவு இன்று நனவாகி விட்டது. எங்கள் சமயத்தின் உன்னத பீடமாக விளங்கும் நல்லை ஆதீனம் என்றும் சிறப்பாக விளங்கவேண்டும். நல்லை ஆதீனத்தை உரு வாக்கிய முதலாவது குரு மகா சந்நிதானத்துக்கு சைவ உலகம் என்றும் நன்றிக்கடன் பட்டது. இரண்டாவது குருவாக தன் வாழ்வை அர்ப்பணித்து இன்றுவரை நன்முறையில் காத்து வருகின்ற சுவாமிகளுக்கு யாம் என்றும் போற்றுதல் செய்து இவர் பணி தொடர உதவ வேண்டும். அவ்வகையில் நல்லை ஆதீனத்துடன் மிக நீண்ட காலமாக தொடர்புபட்ட அடியவனாக விளங்கும் பாக்கியம் எனக்கு கிடைத்தது. முதலாவது குரு சமாதியடைந்த வேளை அவரை சமாதி வைக்கும் பணியில் ஈடுபடும் வாய்ப்பு அன்று கிட்டியது. ஆதீனத்துக்கு அருகில் மலேயன் பெஞ்சனியர் அம்பலவானர் வீட்டில் தங்கியிருந்து படித்த காலத்தில் ஆதீனத்தின் விழாக்களில் பங்குபற்றத் தொடங்கிய நாள் முதல் இன்றுவரை ஆதீன விருத்தி தொடர்பாக மிக ஆவலுடைய அன்பர்களில் யானும் ஒருவனாக தொண்டுசெய்யும் பாக்கியம் இறையருளால் தொடர்கின்றது.

லண்டன் வாழ் சைவ அன்பர்கள் எடுத்த மாபெரும் முயற்சியால் மிகப் பெரிய மடாலயம் கட்டப்பெற்றுள்ளது. லண்டன் வாழ் சைவ மக்களின் தாயகப் பற்றின் அடையாளச் சின்னமாக நல்லை நகரில் பிரமாண்டமான இரு மாடிக்கட்டடம் காட்சியளிக்கிறது. இப்பணிக்குழுவின் தலைவராக விளங்கும் லண்டன் திரு சூ.பாலசிங்கம் அவர்களின் அயராத முயற்சிக்கு அவரது நிர்வாகத்தில் பங்கு கொண்ட ஏனைய பெருந்தகைகளின் தொண்டுக்கும் நாம் என்ன கைமாறு செய்வோம்....!

நல்லை ஆதீனத்தை தம் அரணாக கருதி மதிப்பளித்து உதவும் அகில இலங்கை இந்து மாமன்றம் செய்து வரும் தொண்டும் என்றும் பாராட்டுக்குரியது. ஆதீன சுவாமிகளுக்கு கார் வண்டி அன்பளிப்பு செய்து கௌரவப்படுத்தியதோடு சுவாமிகளின் தேவைகளையும் பூர்த்தி செய்வதில் மாமன்றம் பெருந் துணையாக விளங்குவது பாராட்டுக்குரியது. புதிய கட்டடம் சிறப்பாக வருவதற்கு மாமன்றம் ஆலோசனை வழங்கி மேற்பார்வை செய்தமை மெச்சத்தக்க விடயமாகும். ஆதீனத்தில் வட்ட மேசை மகாநாடு நடாத்துவதற்கும் மற்றும் சாதுக்கள் தங்குவதற்குரிய தளபாடத் தேவைகளை மாமன்றத் தலைவர் திரு கந்தையா நீலகண்டன் அவர்கள் உடனடியாக பூர்த்தி செய்துள்ளமை சிறப்புக்குரிய விடயமாகும்.

நல்லை ஆதீனம் சூரியர் சந்திரர் உள்ளவரை நிலைபெற்று சிறக்க நல்லைக் கந்தனைப் பிரார்த்தித்து வாழ்த்தி அமைகிறேன்.

**கலாநிதி ஆறு.திருமுருகன்**
*தலைவர்,*
*ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,*
*தெல்லிப்பழை.*

உ
சிவமயம்

# WORLD SAIVA COUNCIL
## உலக சைவப் பேரவை

Secreatariat: 3 Deblyn Drive, Toronto, Ontario M1S 1J4 CANADA.

அன்புடையீர்,

நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனம் இன்று புதிய பொலிவுடன் திருவருளாலும் குருவருளாலும் அமைக்கப் பெற்றுள்ளமை அனைவருக்கும் மகிழ்ச்சியைத் தருவதாகும். அதனைச் சிறப்புறச் சீரமைக்கும் பெருமுயற்சிகள் எடுத்த சகல அமைப்புகளும் தனிப்பட்டவர்களும் மக்களும் போற்றுதலுக்குரியவர்களாவர்.

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகளின் ஆசியுடன் சைவசமயத்தையும் அதன் கொள்கைகளையும் இன்று நலிந்திருக்கும் மக்களிடையே குறிப்பாக இளஞ்சந்ததியினரிடம் நிலை நிறுத்தவும் வளர்க்கவும் புதிய திட்டங்களுடன் செயற்பட உலக சைவப்பேரவை நல்லைக் கந்தனின் திருவருளை வேண்டி வாழ்த்துகின்றது.

நன்றி.

இவ்வண்ணம்

சிவத்திரு யோகானந்த அடிகள்
தலைவர்

டாக்டர் சண் அ. சண்முகவடிவேல்
பொதுச் செயலாளர்



# உலக சைவப் பேரவை
# World Saiva Council
(UK-Branch)

Address - 49, Bycroft Road, Southall, Middlesex, UB1 2XQ






*Patron* - Yogananda Adikal
*President & Chief Executive*
*World Saiva Council*
*(UK Registered Charity - 293007)*


*President* - S. Manoharan
*Secretary* - S. Premchandra
*Treasurer* - G. Jeyaraj


சைவத்தின் மேல் சமயம் வேறிலை அதிற்சார் சிவமாம்
தெய்வத்தின் மேல் தெய்வம் இல்லெனும் நான்மறைவாய்
மெய்வைத்த சீர்த் திருத்தேவாரமும் திருவாசகமும்
உய்வைத்தரச் செய்த நால்வர் பொற்றாள் எம் உயிர்த்துணையே.

தேவார பாடல் பெற்ற திருக்கோணேஸ்வரமும், திருக்கேதீச்சரமும், கதிர்காமக் கந்தனும், நல்லூர்க் கந்தனும் அருள் தரும் இலங்கை நாட்டில் பிறந்து ஒரு சைவ ஆலயம் இல்லையே என்ற ஏக்கம் தீர நல்லூர் கந்தனுக்கு அங்கு ஒரு சைவ ஆலயம் அமைந்து விட்டதை நினைக்கும் போது உள்ளம் குதூகலம் அடைகிறது. இவ்வாலயம், சைவம் வளர்த்த ஆறுமுகநாவலர் ஆற்றிய தொண்டு போல் இவ் ஆலயமும் சைவ சமய வளர்ச்சிக்கு பெரும் துணையாக இருக்கும் என நம்புகின்றோம். இவ் ஆலயம் சைவத் தொண்டுகள் பல புரியவும், சைவத்தை வளர்க்கவும், சைவச் சிறார்களுக்கு சமய அறிவை வளர்க்கவும் ஒரு அருள் நிலையமாக இருக்க வேண்டுமென உலக சைவப் பேரவையின் பிரித்தானியக் கிளை நிர்வாகிகள் சார்பாகவும் சைவ மக்கள் சார்பாகவும் மனதார வாழ்த்துகின்றோம்.

பிரித்தானியா வாழ் தமிழ் சைவ மக்களின் முயற்சியால் ஏற்பட்டுள்ள இவ் ஆலயம் பல்லாண்டு, பல்லாண்டு நிலைத்து நின்று சைவத்தை வளர்க்கவும், இவ் ஆலய கும்பாபிஷேகம் சிறப்பாக நடை பெற இறைவன் அருள் கிடைக்க வேண்டுமென எல்லாம் வல்ல பெருமானை வணங்கி எமது வாழ்த்துக்களை மீண்டும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்.



சி. மனோகரன்
தலைவர் - உலகசைவப் பேரவை
பிரித்தானியாக் கிளை.



# SHREE GHANAPATHY TEMPLE

**125 – 133 Effra Road, London SW19 8PU**

Tel: +44 (0)20 8542 7482 / 20 8542 2267

**www.ghanapathytemple.org.uk**

9th May 2013

On behalf of the devotees of the Shree Ghanapathy Temple, we would like to send our warmest congratulations and best wishes on the successful completion of the rebuilding of the Nallai Thirugnana Sambandar Adheenam.

In times of great suffering, people turn to the comfort of prayer and spiritual support to help them survive, recover and blossom once again. Thus it was even more important for the Nallur Adheenam to be rebuilt at this time of great trauma - to stand as a beacon, shining a light through the darkness, to bring hope to the community and uphold our great Saiva traditions.

We feel blessed that we have been able to support this special project from its inception, as it has provided a link of spirituality from the devotees in the UK to the devotees in Nallur. It has allowed our devotees, who are helping to provide centres of spiritual excellence here in the UK, to be able to support such a great institution in the land of their birth, providing vital spiritual guidance to the Hindu community in the North of Sri Lanka.


We cannot imagine the difficulties that you have had to face, as a community, over the past many decades. But faith in the Lord has kept you focussed on the need to provide the foundations of our great Saiva heritage in order to allow the present and future generations of children to know their spiritual identity and to grow within the shelter of our beloved Lord.

Taking on the responsibility of rebuilding the Adheenam has been a brave and courageous act of devotion and dedication. Our most heartfelt congratulations, love and support go to those individuals within the Adheenam who have dedicated their time and energy to this sacred cause. The opening ceremony of rededication will mark the beginning of a new phase of faith and spirituality in Nallur, and in the North, that will help to focus the mind of all on the higher goals of mankind – of family, of community and spirituality. Our fullest support, prayers and blessings go to those who have helped to make this wonderful day a reality. May they continue to blossom and grow and may our beloved Lord Ghanapathy continue to shower His choicest blessings upon them and guide them in their wonderful work in the future.

In humble service to our Lord,

Dr. S. Maheshwaran,

Co-ordinator, Shree Ghanapathy Temple.



Aum Muruga

**BRITTANIA HINDU (SHIVA) TEMPLE TRUST**

**உயர்வாசற்குன்று முருகன் கோவில்**

Established 1974, Registered Charity No : 269067

200A Archway Road, London N6 5BA.

Tel : 020 8348 9835. Fax : 020 8482 6508.

E-mail : admin@highgatehillmurugan.org

Web : www.highgatehillmurugan.org

09.05.2013

# ஆசிச் செய்தி

தாய் நாட்டிற் பல்வேறுபட்ட ஆதீனங்கள் உருவாகி, சமயப்பணி, கலை கலாசாரப்பணி ஆகியவற்றினை மக்களிடையே பரப்பி அருந்தொண்டாற்றி வரும் நிலையில் இன்று ஈழமணித் திருநாட்டில் நாவலர் பெருமானின் இடத்தினிலே, நல்லூர்க் கந்தன் எழுந்தருளி இருக்கும் பூமியிலே நல்லை ஆதீன தாபகர் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள், முதலாவது குருமகா சந்நிதானம், அவர்கள் "நல்லை ஞானசம்பந்தர் ஆதீனத்தை" யாழ்.நகர் நல்லூரில் நிறுவி சைவத்திற்கும் தமிழிற்கும் அளப்பரிய சேவையாற்றிய ஆதீன மண்டபம், தற்போது அதில் வாழ முடியாத நிலையேற்பட்டபடியால், பிரித்தானியாவில் வாழும் நல்லுள்ளங்கள் ஒன்றுபட்டு பணம் திரட்டி, இன்று புதிய கட்டிடம் ஒன்றினை அமைத்து, அதன் திறப்பு விழாவின் போது மலரொன்று வெளியிடவும், அம் மலருக்கு எங்கள் உயர்வாசற்குன்று முருகன் ஆலயத்தின் அறங்காவற் குழுவின் செயலாளர் என்ற முறையில் அக்குழுவினர் சார்பாக ஆசிச் செய்தியொன்றினை வழங்குமாறு கேட்டுக்கொண்டதற்கிணங்க இந்த ஆசிச் செய்தியினை வழங்குவதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

இரண்டாவது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள் ஒரு முறை இலண்டன் மாநகர் வந்து எங்கள் ஆலயத்திலே தங்கி இருந்த போது, அவர் வதிந்த யாழ்நகர் இடம், இடிந்து தூர்ந்த நிலையில் உள்ளதாகவும் அதனை இடித்துப் புதியதொரு மண்டபம் கட்ட வேண்டிய இக்கட்டான நிலையில் இருப்பதாகவும் தெரிவித்திருந்தார். மீண்டுமொருமுறை இலண்டன் மாநகருக்கு வந்த போது, அவருடன் இலண்டன் மாநகரில் எழுந்தருளி அடியார்களுக்கு அருளாட்சி செய்யும் பெரும்பாலான கோயில்களின் உறுப்பினர்கள், மண்டப வளர்ச்சிக்கு வாரிவழங்கும் பெரியோர்கள் பலரும் ஒன்று கூடி ஓர் அமைப்பினை உருவாக்கி நிதி திரட்ட முன்வந்தனர். எங்கள் ஆலயமும் அன்பளிப்புச் செய்ததுடன் அடியார் களிடமிருந்தும் நிதியினைப் பெற்றுக் கொடுத்து ஊக்குவித்தது. ஒரு செயலைச் செய்யத் தொடங்குவதற்குப் பணம், அடியார்களின் உதவி இருந்தாலும் குருவருளும் திருவருளும் இல்லையென்றால் எதுவும் கைகூடியிருக்க முடியாது. இன்று குருவருளுடன் ஆண்டவன் அருளினாலும் இது கைகூடியிருக்கின்றது.

இன்று யாழ்.நகர் இருக்கும் சூழ்நிலையில் இத்தகைய மண்டபத்திற்குப் பணத்தினைச் செலவழிக்கவேண்டுமா எனக் கூறுபவர்களும் இருக்கின்றார்கள். ஈழநாட்டில் மட்டுமன்றி உல கெங்கும் மடங்களைப் பற்றியும், மடாதிபதிகள் பற்றியும் நல்லபிப்பிராயம் இல்லை. அந் நிலைமாறி நல்ல பெயரோடு புனிதமான தொண்டினைத் தொடரவும் அன்பே சிவம் என்று எல்லோரும் நினைத்து வாழ்வில் முன்னேறவும் இந்த மண்டபம் வழிவகுக்க வேண்டும்.

இந்த உடம்பு நிலையற்றது. 'அரிது அரிது மானிடராய்ப் பிறப்பது அரிது' என்பது அவ்வை மூதாட்டியின் கூற்று. மக்களாய்ப் பிறந்தவர்கள் நிலையற்ற இன்பத்திற் சிக்கி உழலாமல், நிலையான இன்பம் எது என்பதனைப் போதித்து நல்லவர்களாக வாழச் செய்தால் இந்த மண்டபம் கட்டியதற்குப் பலன் உண்டு என்று கூறலாம். இந்தப் பணியினை இரண்டாவது குருமகா சந்நிதானம் தொடர்ந்து செய்து வருதல் சாலச்சிறந்தது.

இம்மடத்தில் சுவாமிகள் தங்கியிருந்து சிவதீட்சைகள், சிறுவர்களுக்கான சமய வகுப்புகள், சமயச் சொற்பொழிவுகள், யோகாசன வகுப்புகள, சிவராத்திரி, நவராத்திரி விழாக்கள, கூட்டு வழிபாடுகள் அதனோடு தொடர்புபட்ட கலை நிகழ்ச்சிகள் நடாத்தவும் தமிழ் மக்களிற்கு இன்றைய சூழ்நிலையில் மன அமைதியும் சமய அறிவும் ஏற்பட வேண்டுமெனவும் எல்லாம் வல்ல உயர்வாசற்குன்று முருகப்பெருமானை வேண்டி விடை பெறுகின்றோம்.

'எல்லோரும் இன்புற்றிருப்பதன்றி வேறொன்றும் அறியேன் பராபரமே'

**க.நாகராசா**
**செயலாளர்**
**உயர்வாசற்குன்று முருகன் கோயில்**
**அறங்காவற்குழு, செயற்குழு, அந்தணப்பெருமக்கள்,**
**ஊழியர்கள், அடியார்கள் சார்பில்.**




**யாழ். நல்லை ஆதீன மடலாய**
**திறப்பு விழாவின் போது**


**வெளிவரும்**

**சிறப்பு மலருக்கு**

**எமது வாழ்த்துக்களைத்**
**தெரிவித்துக் கொள்கின்றோம்.**

**சிவாச்சாரியார்கள், அடியார்கள்,**
**நிர்வாகிகள், அறங்காவலர்கள்,**
**ஸ்ரீசக்தி விநாயகர் ஆலயம்.**

**HARROW WEALD**
**ENGLAND.**



**SRI RAJARAJESWARY AMMAN TEMPLE**
**ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்மன் ஆலயம்**
Parasakthi Hindu Temple Trust
No 4 Dell Lane, Stoneleigh, Surrey KT17 2NE
Tel: 020 8393 8147

ஓம்
சிவமயம்
பிள்ளையார் துணை

# வாழ்த்து செய்தி

பல நூற்றாண்டுகளாக காலத்தால் அழியாத பெரும் சேவைகளை ஆற்றும் நல்லைநகர் ஆதீனத்தை உலகெங்கும் பரவிவாழும் இந்துக்கள் நன்கு அறிவர். சைவசமயத்தினரின் சமய, சமூக, கல்வி சார்ந்த பல பிரச்சினைகளிலும் மட்டுமல்லாது, அரசியல் ரீதியாக இலங் கையில் மட்டுமல்லாது உலகநாடுகளில் வாழும் இந்துகளுக்கு ஏற்படும் பிரச்சினைகளில் சுதந்திரமாக குரல் எழுப்பிய பெருமை நல்லை ஆதீனத்தையே சாரும். அப்படி அரும்பணிகளை ஆற்றிவரும் நல்லை ஆதீனம் தனது புது இல்லத்தில் குடியேறப் போவதை எண்ணி நாம் பெருமகிழ்ச்சி அடைகிறோம்.

ஆண்டாண்டு காலமாக நல்லை ஆதீனம் யாழ். வாழ் மக்களின் சமய விழுமியங்களையும், சமயச் சடங்குகளையும், சமய வைபவங்களையும், சமய அடையாளங்களையும், அவர்களின் மொழியை, பண்பாட்டை, அவர்கள் வாழ்வாதாரங்களையும் காப்பாற்றி வந்த பெருமையுடையது. சமயத்தை வாழ்வோடு கலக்கவேண்டிய பொறுப்பும் தகுதியும் இந்த ஆதீனங்களையே சார்ந்தவை. மனித வாழ்வில் தொண்டுசெய்வது முக்கியமானது. அதிகமான தொண்டுகள் ஊதியத்தை நம்பியே செய்யப்படுவை. தெய்வப் பணியே தொண்டாகவும், மனிதகுல நல்வாழ் வுக்காக காலநேரம் பாராது அறப்பணியாகவும் ஆற்றுபவை இந்த ஆதீனங்களே.

மனித வாழ்க்கையில் நாம் தர்மம் செய்யவேண்டும். அந்த தர்மம் சைவசமயத்திலே கூறப்பட்ட ஒரு ஒழுங்கு. ஒரு மனிதனுடைய வளர்ச்சி, ஒரு சமூகத்தின் வளர்ச்சி, அது அந்த நாட்டின் வளர்ச்சி. அந்த வளர்ச்சிக்கு அடிகோலுவது இந்த ஆதீனங்களே. ஆதீனங்களின் நோக்கம் மனிதனை பரிபூரணமாக பரம்பொருளிடம் இட்டுச் செல்வதாகும். ஆதீனங்களின் கோட்பாடு மனித நேயப்பண்புகளை வளர்த்து, மனிதனை நாகரீகம் அடையச்செய்து பிறவிப் பயனை துய்யச் செய்வதே. சமயங்கள் அனைத்தும் எல்லாம் கடந்த இறைவனை தேடுகின்றன. சைவநெறி மனிதனை பக்குவப்படுத்தி எதிர்வரும் காலங்களில் மனிதநேயப் பண்பாடுகள் நிறைந்தவனாக பரிமளிக்கச் செய்வதேயாகும். ஆதீனங்களின் கோட்பாடும் இதுவே. சமய நம்பிக்கை, சமய பக்தி, சேவை ஆகியவற்றை மனிதவாழ்க்கையோடு இணைத்து, அவர்களை அறநெறியில் இட்டுச்செல்லும் பணியை ஆதீனங்கள் கால காலமாகச் செய்து வருகின்றன.

யாழ்.மண்ணில் சைவநெறியையும், தெய்வ வழிபாட்டையும் வளர்த்தும் அன்னிய பிறசமய ஊடுருவலைக் காலாகாலமாக தடுத்து நிறுத்தியும் வந்தவர்கள் நல்லை ஆதீனமே. இது உண்மை வெறும் புகழ்ச்சியல்ல. தங்கள் கஷ்டங்களையும் பாராது ஒரே குறிக்கோளுடன்

ஒற்றுமையையுடன் உழைத்தபடியால்தான் இன்று இலங்கையில் சைவம் மாத்திரம் அல்ல இந்து மதமே தழைத்து ஓங்கியுள்ளது என்று சொன்னால், அது உண்மையே; பொய்யல்ல.

பிரித்தானியாவில் வாழும் மக்களுக்கும் பல வழிகளில் நல்லைநகர் ஆதீனம் சமயப்பணி, சமூகப்பணி மூலம் உதவி வருகிறது. கல்விப்பணி மூலம் இளம் சிறார்களுக்கு சைவமத அறிவை மாத்திரம் அல்ல இந்துமத வருணாச்சிர தருமநெறிகளையும் உணர்த்தி வருகிறது. பல்லாண்டுகளாக மக்களுக்காக மனிதநேயப் பணிகளை ஆற்றிவரும் நல்லைநகர் ஆதீனத்து கட்டிட திறப்புவிழாவில் கலந்துகொள்ள முடியாமைக்கு மனம் வருந்துகிறோம். கட்டிட திறப்புவிழா மிகவும் சீரும் சிறப்புமாக நடைபெற எல்லாம் வல்ல ஆடற்பெருங்கூத்தன், நீல மிடற்றுடையான் திருவடிமலர்களையும் இராஜராஜேஸ்வரி அன்னையையும் போற்றி வாழ்த்து கிறோம்.

**இ.குணசிங்கம்,**
**தலைவர்,**
**ஸ்ரீ இராஜ ராஜேஸ்வரி ஆலயம்,**
**ஸ்ரோன்லி திருப்பதி.**


**இளம் பிராயத்தில் நாம் வாழ்ந்த**
**வீட்டிற்கு அண்மையாக இருக்கும்**

# நல்லை ஆதீனம்

**புதுப் பொலிவுற்று திறப்பு விழாக் காண**
**இருக்கும் சமயம் அதில் கலந்துகொள்ள**
**இயலாமைக்கு மனம் வருந்துகின்றேன்.**
**அதேநேரத்தில் இவ் ஆதீனம்**
**இந்த உயர்வுக்கு வருவதற்கு**
**உழைத்த அனைத்து உள்ளங்கட்கும்**
**எமது மனப்பூர்வமான வாழ்த்துக்கள்.**

**சதாசிவம் லோகேஸ்வரன்**

**BANANA LEAF (RESTAURANT)**
**LEY STREET, NEWBURY PARK**
**LONDON.**



*"Ammanai Saran Addainthal Athika Varamperalam"*

**SHRI KANAGATHURRKAI AMMAN (HINDU) TEMPLE TRUST**

*5, CHAPEL ROAD, LONDON. W13 9AE.* *TEL:* 0208 - *810 0835*

Founded on 10-08- 1991 Charity No: 1014409 0208 - *840 0485*

www.ammanealing.com Email: info@ammanealing.com

**EXECUTIVE COMMITTEE**

**Chairman**
Mr.S Ramachandran

**Vice Chairman**
Dr Mrs S Radhakrishnan

**Secretary**
Mr.K Baskeran

**Joint Secretary**
Mr.Raj Paramakumar

**Treasurer**
Mr. K Sarvananthan

**Asst Treasurer**
Mr. S Ragunathan

**Elected Comm. Member**
Mr. P Kanapathippillai

**Committee Members**
Mr.J.A.Rajakariar
Mr.S Thedchanamoorthy

**BOARD OF TRUSTEES**

**Chairman**
Mr. S. Premachandra

**Secretary**
Dr. V. Paramanathan

Mr. S. Abayalingam
Mr. R. Kaneshrajah
Mr. Pon Theivendram
Mr. T. Thevaraajan
Mr.. A. Thevasagayam
Mr. S. Sri Rangan

**Accountants**
TAMSONS
177, Kingsley Road
TW3 4AS. Hounslow,
Middlesex

**" மெல்லிய நுண்ணிடை மின்னனையாளை விரிசடையோன்
புல்லிய மென்முலைப் பொன் அனையாளைப் புகழ்ந்து மறை
சொல்லிய வண்ணம் தொழும் அடியாரைத் தொழும் அவர்க்குப்
பல்லியம் ஆர்த்தெழ வெண்பகடு ஊரும் பதம் தருமே. "**



நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனக் கட்டிடப் பணியானது நிறைவு கண்டு கட்டிடத் திறப்பு விழாவும், அதனையொட்டி மலர் வெளிவருவதும் அறிந்து அகமும், புறமும் மகிழ்கின்றோம். அதுமட்டுமல்லாமல் இந்தப் புனிதப் பணிக்கு வித்திட்ட பெருமை எங்கள் அன்னை லண்டன் ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் ஆலயம் என்றால் மிகையாகாது. வரலாற்றை எண்ணிப்பார்க்க வேண்டும் என்பதற்காக அவைதனை இங்கு குறிப்பிடுவது சாலச்சிறந்தது. எத்தனையோ ஆண்டுகளுக்கு முன்பாக பலரும் இப்பணிக்கு முயன்றும் முடிவில்லாதிருந்த, கைவிடப்பட்ட நிலையிலிருந்த ஆதீனக் கட்டிடப்பணியானது

**" எண்ணிய எண்ணியாங்கு எய்துப,
எண்ணியார் திண்ணியர் ஆகப் பெறின் "**

என்ற வள்ளுவர் வாக்கிற்கு அமைவாக எங்கள் ஆலயத்தின் முன்னாள் தலைவரும், பணி ஆரம்பகால பொருளாளருமான திரு. தமோதரம்பிள்ளை யோகநாதன் அவர்கள் தாயகம் சென்ற சமயம் ஆதீன சுவாமிகளின் வேண்டுதலுக்கு அமைவாக மீண்டும் இங்கு வருகை தந்து என்னிடமும், என்னோடு சார்ந்த உறுப்பினர்களுடனும் கலந்துரையாடி ஆதீன குரு மகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த சுவாமிகளை லண்டன் வரவழைத்து ஆலயங்கள் தோறும் அவரை அழைத்துச் சென்றது மட்டுமன்றி ஒருங்கிணைப்பாளராக இருந்து லண்டனிலுள்ள ஆலய உறுப்பினர்களையும், இப்பணியை முன் ஆரம்பித்தவர்களையும் ஒருங்கினைத்து 19-06-2011ஆம் திகதி எங்கள் ஆலயத்தில் சுவாமிகள் தலைமையில் கட்டிடக் குழுவையும், அதன் உறுப்பினர்களை ஒருமுகமாக அறிவித்து அப்பணியை நிறைவுற

ஆற்றிய பணியானது இன்று நல்லைக் கந்தன் மேற்கு வீதியில் புதுப்பொலிவுடன் கம்பீரமாக ஆதீனமானது மிளிரக் காரணமாயிற்று.

அன்று கட்டிடக் குழு தலைவராக திரு. சூ. பாலசிங்கம் அவர்கள் பொறுப்பேற்றமையும், பணிக்காக தாயகம் சென்றும், இங்கும், அங்கும் ஆற்றிய பணியும் இன்று நாம் பெருமிதம் கொள்ள வைக்கின்றது.


கட்டிட ஆரம்ப காலம் முதல் நிறைவு காணும் இக்காலம் வரையும் இவ்வாலயத் தலைவராக இருந்து இப் பணியில் நானும் பங்கு கொள்ள திருவருள் அமைந்தமையை எண்ணி புளகாங்கிதம் அடைகின்றேன். எங்கள் ஆலயத்துடன் இணைந்து இப்பணிக்கு பேருதவி புரிந்த மற் ய ஆலயங்களுக்கும், அன்பர்களுக்கும், அடியவர்களுக்கும் இத்தருணத்தில் பாராட்டுக்களையும் நன்றிகளையும் தெரிவிப்பது சாலச்சிறந்தது.

தாயகத்தில் இன்றைய கால கட்டத்தில் ஆதீனத்தின் ஊடாக ஏராளமான பணிகள் ஆற்றப்படவேண்டியுள்ளமையை யாவரும் அறிவர். அந்தவகையில் புலம் பெயர்ந்த நாமும் ஆதீன நிருவாகமும் ஒருங்கிணைந்து வரும் காலங்களில் தாயகபணி எடுக்கப்பட வேண்டுமென விரும்புவதுடன், அங்கும், இங்கும் இப்பணிக்காக தம்மை இட்டு செயலாற்றிய அனைத்து உள்ளங்களிலும் அம்பிகை நிறைந்திருந்து அருள்பாலிக்க பிரார்த்திப்பதுடன், திறப்பு விழாவையொட்டி மலரும் மலர் மணம் பரப்பி சிறந்திட அன்னை ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் பாதம் வேண்டி அமைகின்றேன்.

**“ மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம் “**

தலைவர்
செ. இராமச்சந்திரன்
லண்டன் ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் ஆலய நிருவாகசபை

# ஆதீனப் பணிகள் பரவுக



சைவசமயத்தின் தொன்மைகளையும் உண்மைகளையும் நன்மைகளையும் வேத சிவாகம மரபுகளையும் பாதுகாத்து வரும் பல தளங்களில் ஆதீனங்கள் முதன்மை பெறுகின்றன. இந்தியாவில் பல ஆதீனங்கள் இருந்தாலும் இலங்கையைப் பொறுத்த அளவில் நல்லை ஆதீனம் ஒன்றுதான் உள்ளது.

ஆரம்ப காலத்தில் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தம்பிரான் பரமாச்சாரிய சுவாமிகள் தொடக்கி வைத்து சமய கதாப் பிரசங்கம் மூலம் பல பணிகளை ஆற்றி வந்தார்கள். அவருக்குப் பின் தற்போதைய ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சார்ய சுவாமிகள் ஆதீனப் பணிகளை செவ்வனே நடாத்தி வருகிறார்கள். புராண படனங்கள், சொற்பொழிவுகள், இசை நிகழ்வுகள், சைவ சித்தாந்த வகுப்புக்கள் என்பவற்றுடன் சைவ மக்களுக்கு அவசியமான சமயதீட்சை வைப்பதிலும் ஆதீன முதல்வர் மிகுந்த அக்கறையுடன் செயற்பட்டு வருகிறார்கள்.

மிக நீண்ட காலமாக பழைய கட்டிடத்தில் இயங்கி வந்த ஆதீனம் பலரது முயற்சியால் மெல்ல மெல்ல புதிய கட்டிடங்களாக மாறத் தொடங்கியது. எமது சமய மக்கள் உலகெங்கும் பரவி இருக்கிறார்கள். இதனால் ஆதீன சுவாமிகளும் சைவ மகாநாடு போன்ற பல காரணங் களுக்காக லண்டன், கனடா, சுவிஸ், அவுஸ்திரேலியா போன்ற நாடுகள் சென்றும் எமது சமய வழிபாட்டு நெறிகளை எடுத்து விளக்கி வந்துள்ளார்கள்,

இதனால் வெளிநாட்டு மக்களும் ஆதீனத்தின் அவசியத்தையும் அதன் தேவைகளையும் நன்கு புரிந்து பல உதவிகளைத் தொடங்கினார்கள். அத்துடன் நல்லை ஆதீன நலன் விரும்பி கள் பலர் நிதி உதவி மிகப் பெரிய அளவில் சேர்த்துக் கொடுத்து இன்று உள்ள பெரிய கட்டிடத்தை நிறைவேற்றி முடித்துள்ளனர். பலநாடுகளில் இருந்து நிதிகள் பெறப்பட்டன. குறிப் பாக லண்டன் மாநகரில் மிகப் பெரியதொகை சேகரிக்கப்பட்டு ஆதீன கட்டிடம் புதுப் பொலிவு பெற பேருதவி புரிந்தது.

அனைவரது உதவியாலும் புதுப்பொலிவு பெற்ற ஆதீனத்தின் பணிகளும் புதுப்பொலிவு பெற்று சைவ மரபைக் காக்க பரவட்டும்.

**சைவப் புலவர் சைவ சித்தாந்த பண்டிதர்**
**சிவஸ்ரீ பா.வசந்தக்குருக்கள்**

om murugu

# இலண்டன் ஸ்ரீ முருகன் கோயில்

# LONDON SRI MURUGAN TEMPLE


REGISTERED CHARITY NO : 271097

78 CHURCH ROAD, MANOR PARK, LONDON E12 6AF

TEL : 020 8478 8433 FAX : 020 8478 0407

www.londonsrimurugan.org


உ

முருகன் துணை

## வாழ்க நல்லை ஆதீனம்! வளர்க அதன் தொண்டுகள்!!

உலகின் பழம்பெரும் சமயமாகிய இந்து சமயத்தில் மாதா பிதா குரு தெய்வம் இவர்களின் நிலை மிகவும் போற்றுதலுக்குரியதாக வைக்கப்பட்டிருக்கிறது. இதில் மூன்றாவதாக இருக்கின்ற குருவினுடைய பெருமை அளவிட முடியாதது. மாயா பாச பந்தங்களால் கட்டுண்டு அதனின்று வெளியேற வழிதெரியாமல் தவிக்கின்ற ஆன்மாவிற்கு இருளை விலக்கி ஒளியின் வழியாக இறைவனை சரணடைந்து பேரின்ப நிலையடைய உறுதுணையாக இருப்பவர் குரு.

கிடைத்தற்கரிய மனிதப்பிறவியை அடைந்த ஆன்மாக்களுக்கு கர்ம வினையகல ஞானத்தை போதித்து தர்மவழி நடக்க தூண்டும் கருமார்களின் வழியில் ஆதீனங்கள் வாயிலாக சமய சமூகச் சேவையாற்றும் குருமகா சந்நிதானங்கள் நம்மால் போற்றப்பட வேண்டியவர்கள்.

தென்னகத்தில் புகழ்பெற்ற தர்மபுரம், திருவாவடுதுறை, திருப்பனந்தாள், குன்றக்குடி, சூரியனார் கோயில், மதுரை, காஞ்சிபுரம் மற்றும் அனேக ஆதீனங்களும், மடாலயங்களும் இந்து சமயத்திற்கும் தமிழ் மொழிக்கும் பெரும் தொண்டாற்றி வந்துள்ளன.

இலங்கை திருநாட்டின் யாழ்ப்பாணம் நல்லூர் நகர்தனில் அமைந்திருக்கும் நல்லையாதீனம் மிகவும் புகழ்பெற்ற ஆதீனமாகும். இந்த ஆதீனத்தின் சந்நிதானமாக விளங்கும் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிக பரமாசாரிய சுவாமிகள் உலகெங்கும் யாத்திரை சென்று சைவ சமய சிறப்புகளை அனைவரும் உணரும் வண்ணம் சொற்பொழிவாற்றி வருகிறார்கள். ஐரோப்பா யாத்திரையின் போது இலண்டன் ஸ்ரீ முருகன் கோயிலில் தரிசனம் செய்து அன்பர்களுக்கு அருளாசி வழங்கினார்கள்.

இவருடைய பெரும் முயற்சியினாலும் அடியார்களின் ஆதரவினாலும் நல்லை ஆதீனத்திற்காக புதிய மடாலயம் அமைக்கப்பட்டு திறப்பு விழா நடைபெறுவது அறிந்து மிகவும் மகிழ்ச்சி அடைகிறோம்.

இவ்விழா இனிதே நடைபெற்று சிறப்புறவும், நல்லையாதீன பணிகள் இன்னும் பரந்து விரிந்து மக்களை சென்றடையவும் ஆதீனகர்த்தர் பல்லாண்டு வாழ்ந்து சமயத் தொண்டாற்றி பேரின்பமடைய வேண்டியும் எல்லாம் வல்ல இலண்டன் ஸ்ரீ முருகப் பெருமானை வணங்கி வாழ்த்துகிறோம்.

ஆசிகளுடன்

கயிலை இரா நாகநாதசிவம் குருக்கள்
கயிலை கி சங்கர குருக்கள்
சிவஸ்ரீ சு செல்லப்பா குருக்கள்
சிவஸ்ரீ மு சந்தானசிவம் குருக்கள்
சிவஸ்ரீ சு கணபதிசுந்தர குருக்கள்
கயிலை க சோமாஸ்கந்த குருக்கள்
சிவஸ்ரீ க கணேச குருக்கள்
சிவஸ்ரீ கி கல்யாணசுந்தர குருக்கள்
சிவஸ்ரீ செ கௌரிசங்கர குருக்கள்
சிவஸ்ரீ மு ஜனார்த்தனசர்மா குருக்கள்

திரு து ஆனந்தசேகர் மேலாளர்
இலண்டன் ஸ்ரீ முருகன் கோயில்

**ENFIELD NAGAPOOSHANI AMBAAL TEMPLE**
என்பீல்ட் நாகபூசணி அம்பாள் ஆலயம்
HINDU TAMIL CULTURAL ASSOCIATION (ENFIELD)
இந்து தமிழ் கலாச்சார சங்கம் (என்பீல்ட்)
61-65 Church Lane, Edmonton, London, N9 9PZ
Tel: 020 8884 3333/4333 info@ambaal.org www.ambaal.org CHARITY REG NO: 1143043

# நல்லை ஆதீன புதிய கட்டிட திறப்பு விழா வாழ்த்துரை

வட இலண்டன் என்பீல்ட் நாகபூசணி அம்பாள் துணைநிற்க.

கந்தபுராண கலாசாரம் என போற்றப்படும் யாழ் நகரில் மட்டுமின்றி இலங்கை முழுவதுமாக உள்ள ஒரே ஆதீனம் நல்லை ஆதீனம் மட்டுமே என்பது யாவரும் அறிந்த விடயமாகும்.

நல்லைக் குமரனின் மேற்கே நல்லூர் சிவன் ஆலயத்திற்குக் கிழக்கே அமைந்ததுதான் நல்லை ஆதீனம். மணி ஐயா என்று அழைக்கப்பட்ட சுவாமிநாத தம்பிரான் சுவாமிகளால் ஆரம்பிக்கப்பட்ட நல்லை ஞானசம்பந்தர் ஆதீனம் இன்று அருள்திரு சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகளால் நன்கு நிர்வகிக்கப்பட்டு வருகின்றது.

நல்லை ஆதீனம் சமயப் பணிகள் மட்டுமன்றி நாட்டில் ஏற்பட்ட அசாதாரணமான சூழ்நிலை காலத்திலும் துன்பப்பட்ட மக்களின் தேவைகளை அறிந்து கால தேச காலம் அறிந்து தன்னலமற்ற சேவை ஆற்றிவருகின்றது. தமிழகத்தில் பல ஆதீனங்கள் உள்ளன. ஆனால் ஈழத்தில் ஒரே ஒரு ஆதீனம் யாருடைய உதவியுமின்றி இறையருளால் நடைபெற்று வருகின்றது. இத்தகைய சூழ்நிலையில் ஆதீனத்தை புனரமைக்க வேண்டிய தேவை ஏற்பட்டு புலம் பெயர் மக்களின் அளப்பெரிய பங்களிப்பினால் இன்று மீண்டும் பொலிவுற்று விளங்குகின்றது.

இலண்டனில் உள்ள ஆலயங்கள், அமைப்புக்கள் நிதிகளை வழங்கி இவ்வரிய புண்ணிய கைங்கரியங்களில் ஈடுபட்டுள்ளன. ஆதீன புனரமைப்பு பணிக்காக எமது ஆலயம் 2,000 பவுண்களை வழங்கியுள்ளது.

ஆதீனப் பணி தொடர வாழ்த்துகின்றோம்.

அன்புடன்
**சிவஸ்ரீ இரகு கமலநாதக்குருக்கள்**
**என்பீல்ட் நாகபூசணி அம்பாள் ஆலயம்.**
**ஆலய பிரதமகுரு இந்து தமிழ்க் கலாசாரச் சங்கம்.**



சிவமயம்

**இலண்டன் ஸ்ரீசெல்வ விநாயகர் ஆலயம்**

**SRI SELVA VINAYAGAR TEMPLE**

299-303, Ley Street, Ilford Essex IG1 4BN

**Tel : 0208 9118 934**

www.sriselvavinayagar.org.uk | e-mail:- info@sriselvavinayagar.org.uk






## நல்லை ஆதீனம் நலம்பெற வாழ்த்துக்கள்

சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த நல்லை ஆதீனம் சைவத்தையும் தமிழையும் மீண்டும் ஒரு தடவை தலை நிமிர வைத்துள்ளது.

நீண்ட காலமாக நல்லை ஆதீனம் என்ற பெயரில் ஒரு ஓலைக் குடில் கவனிப்பாரற்றுக் கிடந்தது. ஒரு முறை சுவாமி அவர்கள் எமது ஆலயத்திற்கு வந்திருந்த போது, சுவாமி! தமிழர் பிரச்சனை பற்றி அறிந்து கொள்ள வெளி நாட்டில் இருந்து வரும் வேற்றின மக்கள் ஏன் உங்களிடம் வந்து குறைகளைக் கேட்பதில்லை என்று நான் கேட்டேன். அப்போது அவர் கண்கள் பனித்தபடி அந்தக் கட்டிடத்தின் நிலை பற்றி எடுத்துரைத்த போது என் மனம் கலங்கியது. எப்படியாவது இதற்கு ஒரு நல்ல முடிவு எடுக்க வேண்டும் என்று நினைத்திருந்த போது துர்க்கை அம்மன் ஆலயத்தில் இருந்து எனக்கு ஒரு அழைப்பு வந்தது.

அங்கு சென்ற போது நல்லை ஆதீனத்தை மிக உயர்ந்த நிலையில் கட்டுவதற்கான ஆலோசனைக்கூட்டம் நடாத்துவதற்கான ஒழுங்குகள் நடைபெற்றுக் கொண்டிருந்தது.

எனது மனம் நிம்மதி பெற என்னால் ஆன பங்களிப்பைச் செய்தேன். இன்று நல்லை ஆதீனக்கட்டிடம் வானளாவ உயர்ந்திருப்பது கண்டு உள்ளம் பூரிப்படைகின்றது.

நான் உட்பட இதை முன்னின்று நடாத்திய அத்தனை பேர்களுக்கும் இலண்டன் ஸ்ரீ செல்வ விநாயகப் பெருமானின் பேரருளும் அவன் தம்பி நல்லூர் முருகனின் நல்லாசியும் கிடைக்க வேண்டிப் பிரார்த்திக்கின்றேன்.

மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்.

நன்றி

**செல்வா செல்வத்துரை**
**ஸ்தாபகர் - அறங்காவலர்**

**பிரித்தானிய சைவத் திருக்கோயில்கள் ஒன்றியம்**

**THE FEDERATION OF SAIVA (HINDU) TEMPLES U.K**

299-303, Ley Street, Ilford Essex IG1 4BN

**Tel : 0208 9118 934**

Web: www.saivafedaration-uk.org | Email: admin@saivafedaration-uk.org



**Chairman:**
Mr. S. Selvarajah

**Secretary:**
Mr. D. Rabindramohan

**Treasurer:**
Dr. S. Maheswaran

**Vice Chairman**
Mr. S. Rajeev

**Asst. Secretary**
Mr. K. Nagarajah

**Asst.Treasurer:**
Mr. R. Kunasingam

**Members**
Mr. C. Sithamparapillai
Dr. S. Maheswaran
Mr. R. Ramachandran
Mr. S. Sothilingam
Mr. T.G.V. Sritharan
Mr. K.V. Kanesamoorthy
Dr. T. Sriskandarajah
Mr. K. Kumarathas
Mr. M. Mohanadas
Mr. M. Gopalakrishnan

**AFFILIATED TEMPLES**

SRI GHANAPATHY TEMPLE
123-125 EFFRA ROAD
WIMBLEDON
LONDON SW19 8PU.

SRI KANAGA DURKA AMMAN KOVIL
5 CHAPEL ROAD
WEST EALING
LONDON W13 9AE.

200 A ARCHWAY ROAD
LONDON N65BA.

SRI RAJARAJESWARI AMMAN TEMPLE
4 DELL LANE
STONELEIGH
SURREY KT17 2NE.

LONDON SIVAN KOVIL
4A CLARENDON RISE
LEWISHAM
LONDON SE13 5ES.

CRAWLEY SRI SWARNA KAMADCHI
AMMAN TEMPLE
6 UNIT, 1B STEPHENSON WAY
THREE BRIDGES, CRAWLEY
WEST SUSSEX RH10 1TN.

SRI KATPATGA VINAYAGAR TEMPLE
2-4 BEDFORS ROAD
WALTHAMSTOW
LONDON E17 4PX.

ARULMIGU SRI SIVAGAMI SAMETHA
SITHAMBARESWARAR SANNITHI
2 SALISBURY ROAD
MANOR PARK
LONDON E12 6AB.

LONDON SRI SELVAVINAYAGAR TEMPLE
299-303 LEY STREET
ILFORD
Essex IG1 4BN.

SRI SITHI VINAYAGAR THEVASTHANAM
CARISMA BULDING
59B REAR OF STATION ROAD
HARROW
MIDDLEX HA1 2TY.




## மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

தமிழை வளர்க்க முச்சங்கம் உருவாக்கினான் தமிழன். சமயம் வளர்க்க அறச்சாலைகள் உருவாக்கினார்கள் சைவர்கள். ஆனால் ஈழத்தில் மட்டும் எதையுமே உருவாக்க முடியாமல் போனது மிகவும் துரதிஷ்டவசமே.

ஆனால் இன்று வானுயர்ந்த கட்டிடத்தில் சமயத்துக்கான அறச்சாலை ஒன்றை உருவாக்கி வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சாதனை ஒன்றை நிகழ்த்திருக்கிறார்கள் இலண்டன் வாழ் சைவ சமயத்தினர்கள்.

மிகச் சிரமத்தின் மத்தியிலும் தேவையான நிதியை சேகரித்து கொடுத்த இலண்டன் நல்லை ஆதீனக் கட்டிடக் குழுவினருக்கும், அதற்கு சற்றும் சளைக்காமல் தேடிய நிதியை சரியான முறையில் பயன்படுத்தி எமது சைவ மக்களின் சமய வளர்ச்சிக்கு முக்கிய பங்காற்றப்போகும் நல்லை ஆதினத்தை முன்னின்று கட்டுவித்த அகில இலங்கை இந்து மாமன்ற நிர்வாகிகளுக்கும் எமது மனம் நிறைந்த நல் வாழ்த்துக்கள்.

நன்றி

**D.இரவீந்திரமோகன்**
**செயலாளர்.**

உ
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்
# சைவ முன்னேற்றச் சங்கம் (UK)
# Saiva Munnetta Sangam (UK)
*2 Salisbury Road, Manor Park, London E12 6AB.*
Tel / Fax: 020 8514 4732 Fax: 01268 5618
E.mail: smsuk77@yahoo.co.uk **Registered Charity No: 292085**

**நல்லை ஆதீனம்**
**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசாரிய சுவாமிகள்**
**நல்லூர்**
**யாழ்ப்பாணம்**
**இலங்கை**

வணக்கத்திற்குரிய நல்லை ஆதீன ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் திருப்பாதங் களுக்கு வணக்கம். உங்களின் அருளாளும் ஆசியினாலும் இவ்விடம் இறை பணிகள் தொடர்கின்றன.

நல்லதொரு பணி உங்களின் பெருவிருப்பத்தால் நிறைவேறி நல்லை ஆதீனம் தனக்கென ஒரு கட்டிடத்தை தக்க வைத்துக் கொண்ட வெற்றி சைவ மக்களுக்குக் கிடைத்த வெற்றியே. இதில் ஐயமில்லை. ஆலயங்களும் ஆதீனங்களும் சைவ சமய வளர்ச்சிக்காக இருக்கின்ற இறை அமைப்புகள். இவற்றினூடாக மக்கள் சமய, சமூக நன்மைகளைப் பெற்று வாழ வழி கிடைக்கின்றது. ஆதீனம் என்ற சொல் உரிமை, வசம் (owenership. possession) என்கின்ற கருத்தைச் சுட்டிக்காட்டுகிறது. எங்கள் சமயத்தைப் பாதுகாக்கவும், முன்னேற்றவும் அதிகார முள்ள அவசியமான அமைப்பு ஆதீனமாகும்.


ஆதீனங்களைப் பற்றிய அறிவும் தெளிவும் இல்லாத காரணத்தால் சிலர் அலட்சியமாக இருக்கின்றார்கள். 16ஆம் நூற்றாண்டில் போர்த்துக்கேயர் யாழ்ப்பாணத்து சைவ மக்களுக்கு இழைத்த துன்பத்தினால் கரணவாய் வரணிப் பகுதியில் வாழ்ந்த தில்லைநாதத் தம்பிரான் என்பவர் தமிழ் நாட்டின் திருமறைக்காடு (வேதாரண்யம்) ஆலயத்திற்குக் கப்பலேறிப் போனார் என்றும், ஆதீனங்களுக்குள்ளேயே மிகப் பெரும் நிலப்பரப்பைச் சொத்தாக உடைய வேதாரண்ய ஆதீனத்திற்கு யாழ்ப்பாண வரணி ஆதீனத்தார் பரம்பரை அறங்காவலர்களாக இருக்கிறார்கள் என்பதையும் ஊரன் அடிகள் தனது ‘சைவ ஆதீனங்கள்’ இரண்டாம் பதிப்பு 737ஆம் பக்கத்தில் எழுதியுள்ளார்கள்.

இவ்வாறு ஆதீனங்களைப் பற்றிய செய்திகளும் அவை ஆற்றி வரும் பணிகளும் மக்க ளுக்குத் தெரிய இந்தத் திறப்பு விழா வழி செய்யப் போகிறது. அத்துடன் கடந்த பல ஆண் டுகளாக நலிவடைந்துள்ள இலங்கை மக்களின் வாழ்க்கைக்குத் தேவையான சமூக சமயப் பணிகளுக்கு ஒரு தலைமைப் பீடமாகவும் நல்லூர் ஆதீனம் அமையும் என்பது எல்லோரதும் எதிர்பார்ப்பு. இறைவனின் பெயரால் நீங்கள் மேற்கொள்ளும் இந்த நல்ல பணி மூலமாக சமூகத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவியும், அதேவேளை ஆன்மிக விழிப்புணர்வும் கிடைக்கும். எம் போன்ற சங்கங்களும் சபைகளும் ஆதீனங்களின் அடிச்சுவட்டைப் பின்பற்றிப் பணி செய்ய விழையும் விழுதுகள். உங்களின் நிலைப்பாடும் வளர்ச்சியும் திடமாக அமைந்து விட்டால் கிளைகளாக உள்ள சைவ அமைப்புகளின் எதிர்காலமும் வளமாகவே இருக்கும். இந்த முன்னேற்றத்திற்கு வழிவகுக்கும் நல்லை ஆதீனத்தின் வெற்றியை எண்ணி மகிழ்கின்றோம்.

இத்தனை ஆண்டுகளாக நல்ல பணி செய்து, அவை எதிர் காலத்திலும் தொடர திட்ட மிட்டு வழிவகுத்துச் செயலாற்றும் ஆதீனத்தின் திருக்கூட்டத்தினரை இவ்வுலகம் பாராட்டும். இப்பாரியப் பணியை முன்னின்று நடத்தியுள்ள சேவை மனமுள்ள நல்ல உள்ளங்களுக்கும், அவர்களின் குடும்பத்தினருக்கும், இறைவனின் திருவருள் கிடைத்து வாழ்வு மனவமை தியுள்ளதாக அமைய நாங்கள் பிரார்த்திக்கின்றோம். இத்தொண்டினைப் பாராட்டுகின்றோம்.

சைவ ஆதீனங்களும், ஆலயங்களும் இவற்றைச் சார்ந்த குழுவினரும் சமுதாய எண்ணத் துடன் செயற்பட்டு எங்கள் சமயத்தின் அன்பு வழியை அடிப்படையாகக் கொண்டு மக்களுக்கு வளமான வாழ்க்கை அமைய தொண்டாற்ற வேண்டுமென்பதே இன்றைய சைவ உலகத்தின் நோக்கம். இதையே செயற்படுத்தி வெற்றிகாணும் உங்களது பணி மேலும் மேலும் வளர இறைவன் துணையிருப்பான் என்பது உறுதி.

**இப்படிக்கு பணிவுடன்**
**சதாசிவம் ஆனந்ததியாகர்**
**பொதுச் செயலாளர்.**



# இலண்டன் ஸ்ரீ முருகன் கோயில்

# LONDON SRI MURUGAN TEMPLE

**REGISTERED CHARITY NO: 271097**
**78 CHURCH ROAD, MANOR PARK, LONDON E12 6AF**
**TEL: 020 8478 8433 FAX: 020 8478 0407**
**www.londonsrimurugan.org**


---

**13.05.2013**

**குருமஹா சன்னிதானம்**
**நல்லை ஆதீனம்**
**நல்லூர்**
**யாழ்ப்பாணம்**
**இலங்கை**

**இலங்கை யாழ்ப்பாணம் நல்லையாதீன மடாலய புதுக்கட்டிடத் திறப்புவிழா நடைபெறுவது அறிந்து மிகவும் மகிழ்ச்சி அடைகிறோம்.**

**சமய வழிப்பாட்டு நெறிகளிலும் சமூகசேவை தொண்டுகளிலும் சிறந்து விளங்கும் நல்லை ஆதீனத்தின் குருமகா சந்நிதானம் அவர்கள் தாய் நாட்டில் மட்டுமல்லாது பல வெளிநாடுகளுக்கும் சென்று சமயப்பணி ஆற்றிவருவது மிகவும் போற்றத்தக்கது. ஐரோப்பா யாத்திரையின் போது இலண்டன் ஸ்ரீ முருகன் ஆலயத்திற்கும் வருகை தந்து தரிசனம் செய்து உலக நன்மைக்காக வழிபாடு நடத்தினார்கள்.**

**நல்லை ஆதீன புதிய மடாலய கட்டிடத் திறப்புவிழா இனிதே நடைபெற்று சேவைகள் தொடரவேண்டியும் ஆதீனகர்த்தர் பல்லாண்டு வாழ்ந்து சேவையாற்றவும் வேண்டி எல்லாம் வல்ல இலண்டன் ஸ்ரீ முருகப் பெருமானை போற்றிப் பிரார்த்திக்கிறோம்.**

**இங்ஙனம்**

**சீனி சம்பத்குமார்**
**தலைவர்**
**இலண்டன் ஸ்ரீ முருகன் கோயில்**
**அறங்காவலர்கள், நிர்வாகக் குழுவினர் சார்பாக**

om muruga

# இலண்டன் ஸ்ரீ முருகன் கோயில்

# LONDON SRI MURUGAN TEMPLE

REGISTERED CHARITY NO : 271097

78 CHURCH ROAD, MANOR PARK, LONDON E12 6AF

TEL : 020 8478 8433 FAX : 020 8478 0407

www.londonsrimurugan.org

## வாழ்த்தி வணங்குகின்றோம்

இன்றைய ஈழத்தின் சைவத்தமிழ்ப் பேரொளியாக விளங்கும் அற்புதமான நிலையங்களுள் நல்லைத் திருஞானசம்பந்தர் ஆதீனம் முதன்மையானது. இலங்கையில் இத்தகு சிறப்பு மிக்க ஆதீனத்தை ஸ்தாபித்தவர் நல்லைக்குருமணி என்று போற்றப்படும் ஸ்ரீலஸ்ரீ ஸ்வாமிநாததேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய ஸ்வாமிகள் ஆவார்.

1918ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 17ஆம் திகதியன்று யாழ்பாணத்து வண்ணார்பண்ணையில் சிவப்பிராம்மண மரபில் அவதரித்தவர் இக்குருநாதர். சிவப்பிராம்மணியஐயர் என்பது அவரது இயற்பெயர். மஹாவித்வான் கணேசையர் அவர்களின் அன்பைப் பெற்றதாலும், சிவயோக சுவாமிகளின் ஆசியைப் பெற்றதாலும் ஆசிரியப்பணியுடன் வண்ணை வைத்தீஸ்வர ஸ்வாமி திருக்கோவிலில் கதாப்பிரசங்கம் என்ற உபந்நியாசமும் செய்யத் தொடங்கினார்.

அவரது பிரசங்கவன்மையும், அறிவாற்றலும், சமயஞானமும் அவரை மணிபாகவதர் என்ற பெயரில் இலங்கையிலும், இலங்கைக்கு அப்பால் தமிழ் நாட்டிலும் மலேசியா, சிங்கப்புர் முதலிய நாடுகளிலும் பிரபலமடையச் செய்தது. சங்கீத கதாகாலட்சேபத்தில் சிறப்புற்றிருந்த மணிபாகவதர் அவர்கள் இல்லறவாழ்விலும் சிறப்புற்றார். எனினும் அவருக்கு துறவறம் ஏற்கவேண்டும் என்ற அவாவும், யாழ்ப்பாணத்தில் முதன்முதலாக ஆதீனம் ஒன்றை ஸ்தாபிக்க வேண்டும் என்ற ஆசையும் விருப்பும் அதிகரித்த வண்ணமே இருந்தது.

இசைத்தமிழ், இயற்றமிழ், நாடகத்தமிழ் என்ற முத்தமிழிலும் சிறந்த ஞானம் கைவரப் பெற்றிருந்ததாலும் மணிபாகவதர் முத்தமிழ்மணி என்றும் போற்றப்பட்டார். இந்த முத்தமிழ்மணி சி.எஸ் மணிபாகவதர் அவர்கள் 1966ஆம் ஆண்டு ஆடிமாதம் கார்த்திகை நன்நாளில் அப்போதைய மதுரை திருஞானசம்பந்தர் ஆதீன மஹாசந்நிதானமாக விளங்கிய ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிகரால் சந்நியாசம் வழங்கப்பெற்று ஸ்ரீலஸ்ரீஸ்வாமிநாத தேசிகஞானசம்பந்த பரமாச்சார்ய ஸ்வாமிகள் என்ற திருநாமமும் சூட்டப்பட்டார். அதே ஆண்டு ஆவணித்திங்களில் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தை ஸ்வாமிகள் ஸ்தாபித்தார். ஆதனை ஸ்தாபித்ததுடன் அந்த ஆதீனத்தை மையப்படுத்தி பல அறப்பணிகளை மேற்கொண்டார். மேலும் ஆன்மீ சொற்பொழிவுகள், கருத்தரங்குகளை நடத்தி ஆன்மீக நூல்களை வெளியிட்டார்.

இந்த ஆதீன முதல்வர் சித்தி பெற அவரால் தம்பிரானாக வரித்துக்கொள்ளப்பட்ட இன்றைய ஆதீன குருமஹாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிக பரமாச்சார்ய ஸ்வாமிகள் என்ற பட்டத்துடன் பீடமேறினார். அவரும் பல்வேறு நற்பணிகளைச் செய்துவருவதுடன் சைவத்தமிழ் காவலராயும், பிரச்சாரகராயும், அறிஞராயும் எல்லாவற்றிற்கும் மேலாக நல்லதொரு துறவியாயும் விளங்கி செம்மை மிக்க சைவச்செங்கோல் நடாத்தி வருகிறார். இவ்விரு மஹா சந்நிதானங்களையும் கண்டும் அவர்களின் பேச்சைக் கேட்டும் களிகூர வணங்கி ஆசி பெற்றும் மிகவும் மகிழ்ந்தவன் யான். இந்த ஆதீனம் இன்றைக்கு மிகவும் சிறப்பாகப் புனரமைக்கப்பட்டு வளர்ச்சி பெற்றிருக்கின்றதைப் பார்க்கிறபோது மிகுந்த மகிழ்வையும் மனநிறைவையும் அளிக்கிறது. இத்தகு பணிகளை விதந்து வாழ்த்தி நிற்கிறோம். எல்லாம் வல்ல இலண்டன் ஸ்ரீ முருகப் பெருமனின் திருவடிகளையும், குருபாதத்தையும் எம் மனம், மொழி, மெய்களால் வாழ்த்தி வணங்குகின்றோம்.

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரன் நாமமே
சூழ்க வையகம் முந்துயர் தீர்கவே

திரு இராஜதுரை அன்பானந்தர்
அறங்காவலர்
இலண்டன் ஸ்ரீ முருகன் கோயில்

# ஆதீனத்தின் வளர்ச்சி - ஆதீனத்தின் பணியில்

உலக ஈழத் தமிழர்களுக்குப் பெருமைதரும் ஒரேயொரு ஆதீனமாக ஈழத்து நல்லூரில் நிலை கொண்டிருக்கும் "நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்" புதிய கட்டிடத்தில் தனது எதிர்காலப்பணிகளை மேற்கொள்ள இருப்பது மகிழ்ச்சிக்குரியது.

தாயகத்துத் தமிழ் நாட்டில்தான் பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் ஆதீனங்கள் அமைக் கப்பட்ட வரலாறுகள் உள்ளன. களப்பிரர்கள், முகலாயகர்கள், உட்பட அந்நியர்கள் படை யெடுப்பும், அந்நியர்களது ஆதிக்கமும் தமிழர்களது சமய வளர்ச்சிக்கு குறுக்கிட்ட காலமாகும். சமயத்துக்கு ஏற்பட்டுவரும் ஆபத்தை எதிர்த்துப் போராடத் தலைமறைவாக ஆரம்பிக்கப்பட்ட இயக்கங்களுக்குத் தலைதாங்கிய சமயப் பற்றாளர்களினால் மக்களை முன்னிலைப்படுத்தி அவர்களின் மனதோடுமனதாக நிறுவப்பட்டவைகளே பின்னர் ஆதீனங்களாகப் பரிணாமம் பெற்றன.

கி.பி 5,6,7 ஆம் நூற்றாண்டுக் காலப் போராட்டமும், சரித்திரமும் இதுவாகும். சமயத்தை அன்றே முன்னிலைப்படுத்தி மக்கள் வாழ்ந்தார்கள் என்பதற்கு இது ஒரு சான்றாகும் என்பதை இங்கு குறிப்பிடுவது பொருத்தமாகும். உண்மையில் இக்காலத்தை ஒரு "இருண்டகாலம்" எனச் சரித்திர ஆய்வாளர்கள் கூறியுள்ளனர்.

சமயத்தோடு மக்கள் உறவாடி வாழ்ந்து வந்தார்கள் என்பதற்கும் இது ஒரு சான்றாகும். ஆலயங்களுக்கும் மக்களுக்கும் உள்ள உறவும் வலுப்பெற்றிருந்த காலமாகவும் இருந்துள்ளன. "மக்களோடு ஆலயங்களும், ஆலயங்களோடு மக்களும் ஒன்றாக உறவாடி வந்தமையும், அதனால் ஆலயங்கள் சமுதாய நலன்பேணும் சமுதாய மையங்களாக விளங்கின" என்பதும் தெரிகிறது.

இடைப்பட்ட காலத்தில் இந்நிலையில் ஏற்பட்ட தளர்ச்சியை நிரவல் செய்வதற்கான பணியில் ஆதீனங்கள் செயல்பட ஆரம்பித்தன. மக்கள் மத்தியில் சமயப் பிரசாரம், அறிவு வளர்ச்சிப் பிரசாரம், ஆடல், பாடல் கலைகளின் பிரசாரங்களையும் இவைகள் தாமாக மேற்கொண்டு மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தின.

அன்று நமது சமயத்துக்கு ஏற்பட்ட தாக்கத்தின் ஒரு கூறு இன்று நமது ஈழ நாட்டுக்கு ஏற்பட்டுள்ளது. சமீபத்திய போரின் காரணமாக சைவ ஆலயங்கள் அழிக்கப்பட்டும், சிதைக்கப்பட்டும், விக்கிரகங்கள் திருடப்பட்டும் - சீரழிக்கப்பட்ட நிலையில் உள்ளன.

ஈழத்தின் சைவ ஆலயங்களின் சீரழிவுகள்பற்றித் தயாரிக்கப்பட்ட அறிக்கை ஒன்று 1500 சைவ ஆலயங்கள் அழிவுற்றன எனக் கூறுவதைக் காணலாம். இவற்றில் பெரும்பாலான ஆலயங்களும் காலாதிகாலமாக மக்களின் குலதெய்வங்களாகப் போற்றிப் பேணி உயிருக்கு உயிராகப் பாதுகாக்கப்பட்டு வந்தவை.

ஆலயங்கள் சீரழிக்கட்ட நிலை ஒரு புறமிருக்க, குடிபெயர்ந்து தமது குலதெய்வங்களை இழந்து நிற்கும் மக்களும் ஏராளம். இதனால் சமய உணர்வை இழந்து வாழ்வோரும் உள்ளனர்.

இவற்றை எல்லாம் சீர்செய்ய வேண்டிய கடமையும், பொறுப்பும் நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனத்துக்கு உண்டு. அரசியல்வாதிகள் "பேச்சோடு" நின்றுவிடுவார்கள். அரசாங்கம்

"உறுதிமொழியோடு" ஒதுங்கிவிடும். அதனால் பொதுமக்களும், ஆதீன கர்த்தரும்தான் இக்கைங் கரியத்தை மேற்கொள்ளவேண்டும்.

மாடிக்கட்டிடம் அமைந்துவிட்டதனால் எல்லாப் பணிகளும் நிறைவேறிவிட்டதாக ஆதீனமும், இந்தக் கட்டிடப் பணிக்கு தாராள மனதுடன் உதவியவர்களும், இன்னும் மற்றத் துறைகளில் பங்களித்தவர்களும், சிறு அளவிலாவது தம்மால் முடிந்த அளவிற்குத் தோள் கொடுத்தோரும் நினைத்து ஒதுங்கிக்கொள்ள மாட்டார்கள் என்பதே என்னைப் போன்றோரின் நம்பிக்கையாகும்.

"ஆதீனத்தின் எதிர்காலப் பணி என்ன?", "அதன் வேலைத்திட்டம் என்ன?" என்பது போன்றவற்றை மக்கள் முன் வைத்து ஆதீனம் செயல்படவேண்டும் என்பதையே மக்கள் எதிர்பார்க்கிறார்கள். எல்லோருடைய எதிர்பார்ப்பும் இதுவாகத்தான் இருக்கும்.

ஆதீனத்தின் செயற்திட்டங்களை நிறைவு செய்வதற்குத் துணைநிற்க ஈழத்தில் அறிவாற்றல் நிறைந்த பலர் உள்ளனர். அரச ஊழியர் உள்ளனர். ஆசிரியப் பெருந்தகைகள் இருக்கிறார்கள். ஈழப் போரின்போது ஏற்பட்ட கஷ்டங்களின்போது தாங்கிய உள்ளங்கள் இனி வருங்காலத்திலும் துணை நிற்பார்கள் என்பது உறுதி. ஆலயங்களின் சீரமைப்புப் பணி, சமயப் பிரசாரம், கிராமங்களில் சமய வகுப்புக்கள், தொண்டர்களை உருவாக்குதல் போன்ற விடயங்களுக்குத் தனித்தனியான குழுக்களை அமைத்து இனியும் தாமதிக்காமல் செயலில் ஆதீனம் செயற்படவேண்டும் என்பது எனது தாழ்மையான அபிப்பிராயமாகும்.

கிராமங்கள் தோறும் சமய – கல்வி அறிவு வளர்ச்சிக்கான முகாம்களை நடத்தி சமயத் தோடும், அதன்மூலம் ஆதீனத்தோடும் நெருங்கிய உறவை வளர்ப்பது முக்கிய பணிகளில் ஒன்றாக இருக்கவேண்டும். தமிழ்நாட்டிலுள்ள ஆதீனங்கள் இதில் மிகவும் கவனம் செலுத்து வதைப் பார்க்கலாம். மடாதிபதிகளே இந்த முகாம்களுக்குச் சென்று அங்கு தங்கியிருந்து உற்சாகப்படுத்துவதும் சமீபகாலமாக நடைபெற்றுவருகிறது. இப்படியான அணுகுமுறை எமது ஈழத்து ஆதீன வளர்ச்சிக்கும் நல்லது.

இன்று ஆலயங்களைத் தாங்கிநிற்பவர்கள் ஏராளமானோர் இருக்கிறார்கள். இவர்கள் ஆதீனத்தைத் தாங்கவும், அதன் செயற்திட்டங்களில் பங்காளிகளாகவும் வருவார்கள் என எதிர்பார்க்கலாம்.


இந்திய ஆதீனங்களுக்குச் சொந்தமாக ஆலயங்கள் உள்ளன. உதாரணத்துக்கு மதுரை ஆதீனத்தையும், தருமபுர ஆதீனத்தையும் எடுத்துக்கொண்டால் தமிழ் நாட்டில் பிரபல்யமான ஆலயங்கள் இவற்றின் பராமரிப்பில்தான் உள்ளன. இந்த ஆலயங்களிலிருந்து போதியளவு வருவாய் கிடைப்பதால் சமயப் பாடசாலைகளையும், கல்வி நிறுவனங்களையும், சமயப் பிர சாரங்களையும், சமய வெளியீடுகளையும் மேற்கொள்ள வசதியாக உள்ளது.

இந்த வாய்ப்பு எமது நல்லை ஆதீனத்திற்கு இல்லை என்பதை நாம் அறிவோம். ஆனால் அதற்கு வெளிநாடுகளில் வசிக்கும் நல்லை ஆதீனப் பற்றாளர்கள் துணை நிற்பார்கள் என்ப தில் ஓரளவு உறுதியாக இருக்கலாம். ஆனால், இதற்கும் நல்லை ஆதீனத்தின் நிர்வாகத் திறமைதான் துணைநிற்கவேண்டும். ஆதீனம் மாடிக் கட்டடத்துக்குள் முடங்கிவிடாமல் வடக்கு - கிழக்கு ஈழத்துடனும் நின்றுவிடாமல் நாடு முழுவதையும் தனது பணிக்குள் கொள்வது நல்ல எதி காலத்திற்கு வாய்ப்பளிக்கும். ஆதீனம் வளர்ச்சியும், மலர்ச்சியும் காணும்.

**கலாநிதி பொன் பாலசுந்தரம்**
**இலண்டன்**

உ

சிவமயம்



Thiru Saba Mahesan,
65A, Eagle Road, WEMBLEY
Middx HA0 4SL
Tel: 0044 208 795 3586

# நல்லை ஆதீன கட்டிடத் திறப்பு விழா
# வாழ்த்துச் செய்தி

"அடியவர் இச்சையில் எவைஎவை உற்றன
அவை தருவித்து அருள் .. பெருமாளே"

இங்கிலாந்து நாட்டில் புலம் பெயர்ந்த இலங்கை சைவத் தமிழர்கள் நிதி திரட்டி ஆதீனக் கட்டிடத்தை வெகு சிறப்பாகச் சீரமைத்துள்ளார்கள். இந்தப் புதிய வளாகம் இம்மாதம் சைவ ஆகம முறைப்படி திறக்கப்பட உள்ளது.

தமிழ்நாட்டில் பற்பல ஆதீனங்கள் செயற்படுகின்றன. இவற்றுள் சில மடங்கள் ஐந்நூறு ஆண்டுகளுக்கு மேல் பழமை வாய்ந்தவை. இதுவரை இலங்கையில் ஆதீனம் என்று கூறும் வகையில் ஒன்று கூட இல்லாதது கவலைக்குரியதாக இருந்தது. இங்கு ஒன்று அமைக்க வேண்டும் என்று பிள்ளையார் சுழி போட்டவர் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய ஸ்வாமிகள் ஆவார். இவரை ஊக்குவித்தவர் மதுரை ஆதீன கர்த்தர்.

தொடர்ந்து இப்பணியை செம்மையாக ஆற்றுபவர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த பரமாச்சாரிய ஸ்வாமிகள். அன்னாரது தலைமையில் இந்த ஆதீனம் மேன்மேலும் வளம்பட எம்முடைய நல்லூர் கந்தனும், அருகிலுள்ள சிவபெருமானும் அருள் புரிய மனமார வேண்டுகிறோம்.

எனது சார்பிலும், இங்கிலாந்தில் வதியும் இலங்கைச் சைவத் தமிழர்கள் சார்பிலும் இனிய வாழ்த்துக்களை சமர்ப்பிக்கிறோம்

முருக அடிமை
சபா மகேசன்

தமிழ்மொழி கலைக்கழகம்
Tamil Academy of Language and Arts
Based: Sydenham School, Dartmouth Road, Sydenham, London SE26 4RD
Correspondence: 15 Bowmead, Mottingham, London SE9 3NL

European Award for Languages 2007 Winner

TALA (Estd: 1984)
Director Siva Pillai
email: pillaisiva@gmail.com

Chairperson: email: jpremila@aol.com

**நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்**

யாழ்ப்பாணத்தில் ஆரம்பித்த முதல் ஆதீனம் நல்லூர் மேற்கு வீதியில் தற்போது உள்ள நல்லை ஆதீனம் ஆகும். சமயப்பிரசங்க வித்துவான் மணி ஐயா அவர்கள் மதுரை மகா சந்நிதானந்தின் ஆசியுடன் நல்லை ஆதீனம் முதன் முதல் யாழ்ப்பாணத்தில் 1966-ல் ஆரம்பிக்கப்பட்டது. ஐயா அவர்கள் சமயப் பிரசங்கத்தால் சேர்த்த பணத்தை இம்மடம் உருவாக்க உபயோகித்தார். மணி ஐயா அவர்கள் தன் வாழ்க்கையை மடத்திற்கே அர்ப்பணித்தார்.காலத்தின் கோலத்தால் கடந்த காலங்களில் நல்லை ஆதீனம் உருக்குலைந்திருந்தது.

சமயப் பெரியார்களின் உதவிகளுடன் தற்போது புத்துயிர் பெற்று புதிய கட்டிட வேலை முடிவுற்று திறப்புவிழா நடக்க இருப்பது அறிந்து மட்டற்ற மகிழ்ச்சி.

அன்று சமயவகுப்புகள் சமயநெறிகள் எல்லாம் எமது சைவப்பள்ளிகளில் போதிக்கப்பட்டது, சமயபாடம் என்று ஒரு கற்கை நெறி அன்றைய பாடத்திட்டத்தில் இருந்தது,. ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் சைவமும் தமிழும் வளரவேண்டும் என ஆறுமுகநாவலர், சேர்·பொன் இராமநாதன் சைவப்பள்ளிகள் சபை (Hindu board schools) என சைவசமயத்தை முன்வைத்துப் பள்ளிகள் ஆரம்பிக்கப்பட்டன். மக்களுக்கு நன்நெறி ஒழுங்கங்கள் சைவ உணவு முறை ஆகியனவற்றைத் தெரியப்படுத்த வேண்டும் என்ற ஆதாங்கத்துடன் பள்ளிகள் ஆரம்பித்து நடத்தப்பட்டது. கோயில்களில் திண்ணைப் பள்ளிகள் நடந்தன. இன்று பள்ளிகள் அரசாங்க பாடத்திட்டத்தை கற்கை நெறிகளாக்கி உள்ளது. இதனால் சைவசமயம் தெரியாத ஒரு வருங்கால மக்களை உருவாக்கக் கூடிய கற்கை நெறிகள் இன்று பாடத்திட்டத்தில் உள்ளது. அதிக மதிப்பெண்களை மாணவர்கள் பெற வேண்டும் என்ற புள்ளிபெறும் அடிப்படையில் கற்கை நெறி மாறிவிட்டது.

சைவ ஆதீனங்கள் பல தென்இந்தியாவில் உண்டு. மதுரை ஆதீனம், திருவாவடுதுறை ஆதீனம், தர்மபுர ஆதீனம் ஆகியவை மிக முக்கியமானவை ஆகும். இவர்களின் சமயப் பங்கு எண்ணில் அடங்காதவையாகும்.

ஆதீன மடாதிபதிகள் இருக்கும் மடங்கள் இலவச உணவு வழங்குவதற்காகவே ஆக்கப்பட்டன என்ற எண்ணம் எம்மில் பலருக்கு உண்டு. பசியைப் போக்க வேண்டியது மடாதிபதிகள் கடமைகளில் ஒன்று. அதே நேரம் மக்களைச் சோம்பேறிகளாக்காது இருப்பதும் அவர்கள் பணிகளில் ஒன்று. மடத்தின் சமூகப் பணிகள் பல. கோயில்களைப் பராமரித்தல் சமூகநலத்திட்டங்களை மேற்கொள்ளல், சமய சாதனைகள், சமய நூல்களை ஆவணப்படுத்தி வைத்தல், அவற்றை

மின்புத்தமாக (e-books) உருவாக்கல் போன்ற பல பணிகளை இவ்ஆதீனங்கள் மேற்கொண்டு வருகின்றன.

மதுரை ஆதீனம் தமிழகத்தின் தொன்மையான சைவசமயத் திருமடங்களில் ஒன்றாகும். இப்பழைமையான மதுரை ஆதீனம் திருஞான சம்பந்தர் காலத்தில் ஆரம்பிக்கப்பட்டது. 292ஆவது குருமகா சந்நிதானம் தற்போது கடமையில் உள்ளார். சந்நியாசனப் பயிற்சி பெற்று சந்நியாச வாழ்க்கையை மேற்கொண்டு அன்றைய மதுரை ஆதீனத்தின் ஆசீர்வாதத்துடன் **சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் மணி ஐயா** அவர்களால் ஆரம்பித்தது தான் இன்று நல்லூர் மேற்கு வீதியில் உள்ள திருஞானசம்பந்தர் மடம் (நல்லைஆதீனம்) ஆகும்.

ஊரார் பணத்தைக் கொண்டு புனருத்தாரணம் செய்யப்பட்ட யாழ்ப்பாணம் நல்லூரில் உருவாக்கப்பட்ட திருஞனசம்பந்த ஆதீனம் என்றழைக்கப்படும் நல்லைஆதீனம், வருங்காலத்தில் ஆற்றவேண்டிய பணிகள் பல உண்டு.

- சமய பயிற்சி வகுப்புகள், சமய கதாப்பிரசங்கங்கள் யோகா வகுப்புகள் நடைபெறுவதற்கான வழி வகைகளை உருவாக்கல்
- சைவத்தையும் தமிழழையும் மக்கள் கற்றறிவதற்கு வழிவகை செய்தல் வேண்டும்.
- பண்ணிசை வகுப்புகள் ஒழுங்காக நடத்தப்பட வேண்டும்.
- சொற்பொழிவுகள் சத்சம்பாஷணை (Sat sang) வாராவாரம் நடத்தப்பட வேண்டும். இதை வருங்கால சந்ததியினர் ஏற்றுக் கொள்ளும் வகையில் அமைக்க வேண்டும்.
- இளைஞர்கள் கருத்தை உள்வாங்கி அவர்கள் விரும்பும் வகையில் வகுப்புகள் நடத்தப்பட வேண்டும்.
- இணைய இணைப்புகள் ஏற்படுத்தி அவற்றின் மூலம் சமயத் தகவல்களை உலகெங்கும் இருந்து பெற ஒழுங்கு செய்யப்பட வேண்டும். மின்அஞ்சல் வசதி
- சைவசமயக் கோப்புகளை, புராணங்களை, கட்டுரைகளை தரவுகளின்படி ஒழுங்கு படுத்தி பலரும் கண்டறியும் வகையில் வைத்திருக்க வேண்டும்.
- சைவசித்தாந்த நூல்கள், சிவவடிவங்கள், சிவ விரதங்கள், சிவத் தொண்டர்கள், சிவதாண்டவங்கள், சைவசமய விழாக்கள் போன்ற விவரங்கள் தரவுகள் ஆகியனவற்றைப் பலரும் அறியும் வகை செய்ய வேண்டும்.
- நல்லூர் திருவிழாக் காலங்களில் புக்தர்கள் தங்கிப்போக வசதிகள் செய்து கொடுக்கப்பட வேண்டும்.
- வெளிநாட்டுச் சமயத் தொண்டர்களை வருடா வருடம் அழைக்க வேண்டும். தொண்டர்களை இனம் கண்டு பாராட்டி பட்டமளித்து மக்களுக்கு அவர்களது சேவையைத் தெரியப்படுத்த வேண்டும்.
- கிராமங்கள் தோறும் உள்ள கோயில்களில் ஆதீன சுவாமிகள் தொடர்பாடலை ஏற்படுத்தி ஆதீனத்தின் தொண்டுகள் பற்றி எடுத்துக் கூறவேண்டும். மக்களை ஆதீனத்திறகு வரும் படி அழைக்க வேண்டும் மக்களுக்கு இவற்றினால் கிடைக்கும் பலாபலன்களை எடுத்துக் கூறவேண்டும்.

இன்று வாழ்க்கைய இழந்து கதியற்று ஆறுதல் கூற யாரும் இன்றித் தவிக்கும் மக்களுக்கு மன அமைதியையும் தன்நம்பிக்கையையும் உருவாக்குவது ஆதீனத்தின் கடமையாகும்.

வாழ்க வளமுடன்

**க சிவருகுநாதபிள்ளை.**
**லண்டன்**

# திருமடங்களும் ஆதீனங்களும் சைவ சமய காப்பகம்

ஆதியும், அந்தமும் இல்லாத பெரும் சமயம் நம் சைவசமயம், உலகத்திலே இருக்கின்ற அனைத்து சமய சூட்சுமங்களும் எங்களின் சமய வரையறைக்குள் அடங்குகின்றன. பரந்து விரிந்து நிற்கின்ற சமுத்திரம் போலவே எமது சமயத்தின் தத்துவங்கள் அமைகின்றன. இவை அனைத்தையும் கற்றுத் தேர்ந்தவர்கள் யாருமிலர். தமது தேவை கருதி தாம் இருக்கும் சம யத்தின் தகுதி கருதி அதற்கு ஏற்ப அதன் தொடர்புடைய விடயங்களிலேயே எல்லோரும் ஆர்வலர்களாய் இருக்கின்றோம். காரணம் "லௌகீகம்" எனப்படும் இகபர இன்ப துன்பங்களோடு இணைந்த வாழ்வியல் தர்மத்தில் நின்றே சமயத்தை நேசிக்கின்ற செயற்படுத்துகின்ற மரபு முறையை எமது சமயம் தந்து இருக்கின்றது. அதேசமயம் அறத்தோடு வாழவேண்டும் என் கின்ற அருந்தத்துவத்தையும் எமக்கு எடுத்துச் சொல்கின்றது. அதனால்தான் "இல்"+"அறம்" ***இல்லத்திலே அறம் செய*** என்கின்ற தாற்பரியத்தை இல்லறம் என்று கூறி வைத்தார்கள். மூன்று நிலையில் இல்லறம் மேன்மை பெறுகின்றது என்பதை வள்ளுவர் மிக அழகாக கூறுவார்.

***"துறந்தார்க்கும் துவ்வாதவர்க்கும் இறந்தார்க்கும்***
***இல்வாழ்வான் என்பான் துணை!"***

எனவே எல்லாத் தர்மங்களையும் சரிவரச் செய்கின்ற நிலை வரும் போது அங்கே சமயம் எம்மோடு பின்னிப் பிணைகின்றது என்பதே மெய். சரியை, கிரியை, யோகம் என்கின்ற மூன்று பதநிலையில் இல்வாழ்வான் சமயத்தை தனக்குள்ளே ஈர்த்துக் கொள்கின்றான். இதிலே "ஞானம்" என்கின்ற நாலாவது நிலை தனித்துவமானது "லௌகீகங்கள்" எனப்படும். வாழ்வியல் சுகங்களைத் துறந்து "துறவறம்" பூண்டு இறைவனை நாடும் நிலை மிகவும் மோசமானது. இதற்கு "ஆன்ம" பலம் மிகவும் முக்கியமானதும், தேவையானதும் ஆகும். இவர்கள்தான் சமயத்தை அலசி ஆராய்ந்து அதன் தாற்பரியத்தை தவநிலையில் காக்கும் சிவசீலர்கள் என்றே கூறவேண்டும். அன்பு, அறம், சாந்தம், சாத்வீகம், சிவபூஜை, சிவசிந்தனை, கருணை, காருண்யம் என்கின்ற எண்தர்மமும் இவர்களிடம் குடிகொண்டு இருக்கவேண்டும். அதன் சிறப்பே தனித்துவமானது. ஏனெனில் நாம் எதிலே அதிக பற்று வைக்கின்றோமோ அதனாலேயே அதிக துன்பதையும் அடைவோம். உலகிலே இருக்கும் அனைத்து விடயங்களும். எமக்கு துன்பம் தருகின்ற இன்பப் பொருட்கள். இறையின்பமே போரானந்தம் தருகின்ற துன்பமில்லா இன்பச் சுவை. இதை ஞான நிலையிலே உள்ளவர்களால்தான் நன்கு உணர முடியும். அத்தகைய அற்புத நிலையே "துறவறம்" எனும் தூய்மை வாசம். இகம், பரம் ஆகிய இரண்டிலும் மனிதன் எதற்குத் தகுதி வாய்ந்தவனாக, தன்னை செய்து கொள்கின்றானோ அது தானாகவே அவனுக்கு வந்து வாய்கின்றது. இவ்வுண்மையை உணர்வது அறிவு முக்தி வேண்டும் என இறைவனை கேட்பதை விட அந்த முக்திக்கு தன்னை பக்குவப்படுத்துவது அறிவுடையோர் செயல்.

*"யா நிசா ஸர்வபூதானாம் தஸ்யாம் ஜாகர்தி ஸம்யமீ!*
*யஸ்யாம் ஜாக்ரதி பூதானி ஸா நிஸா பச்யதோமுனே!!"*
*(பகவத்கீதை)*

உயிர்கள் அனைத்திற்கும் எது இரவோ அதில் யோகி விழித்திருக்கின்றான். உயிர்களெல் லாம் தூய்த்துணரும் நிலை தத்துவஞானிக்கு இரவு என்பது மேலே உள்ள கீதா உபதேச சுலோகத்தின் பொருள். உலகில் துறவறம் என்பது கடுமையான தவம். அதை நேர்மையாக

செய்பவர்களுக்கு அதன் பலன் பூரணத்துவமாக கிடைக்கும். இதை எமது ஆன்றோர்கள் அனுபவித்து, செயல்நிறுத்தி, வழிகாட்டி சென்றுள்ளனர். மரபுவழி தொடரும் ஆதீன குரு பாரம்பரியமானது சமயத்தையும், சமூகத்தையும், இணைத்து அதிலே ஆன்ம ஈடேற்றத்தின் நிலையை நிறுத்தச் செய்கின்ற அற்புத செயற்பாடாகும். அதற்கு குருவழி நிற்கும் தன்மையை, மனோபலத்தை, நிறைவாக கொள்ளவேண்டும். இதை அழகாக கூறுகின்றார் திருமூலர்.

*"தெளிவு குருவின் திருமேனி காண்டல்*
*தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்*
*தெளிவு குருவின் திருநாமம் செப்பல்*
*தெளிவு குரு ரூபம் சிந்தித்தல் தானே."*

இந்த திருமந்திரம் குருவழி வரும் சீடர்களுக்கும், குருவழி நிற்கின்ற பக்தர்களுக்கும் நன்கு பொருந்துவனவாக அமைகின்றது. தனது குரு எவ்வழியில் ஆன்ம ஈடேற்றத்திற்கு வழிகாட்டி ஆதீன மரபுநெறி வழுவாது துறவறம் மேற்கொள்ள உபதேசம் செய்தாரோ, அதே நிலையில் குருவழியில் சீடனாய் ஆதீனம் காப்பதே அது சார்ந்தவர்களின் மிகத் தலையாய கடமையாகும். ஒவ்வொரு ஆதீனங்களிலும் அவர்களின் நாமங்கள் (பெயர்கள்) சூட்டப்படும் போது பெயரின் நிறைவு, சுவாமிகள், அடிகளார், தேசிகர் என்கின்ற தெய்வீக பெயரினிலேயே அமைகின்றது. ஏனெனில் பெயரில்கூட இல்லற சுக இன்பங்கள், பந்த, பாச, பற்றுநிலைகள், என்பன இருக்கக்கூடாது என்பதேயாகும். ஆன்ம தத்துவம், வித்தியா தத்துவம், சிவதத்துவம் எனும் மூன்று நிலைகளிலே முப்பத்தாறு (36) தத்துவம் அடக்கம். சுத்த மாயை, அசுத்த மாயை, பிரகிருதி மாயை எனப்படுகின்ற மூன்று வித மாயைகளிலும் இந்த மூன்று தத்துவமும் உண்டு. எனவே இதைப் பிரித்து அறிகின்ற ஞானம் துறவறத்திற்கே உரிய தனித்துவமாகும். இதை வள்ளுவர் அழகாகக் கூறி நிற்கின்றார்.

*"வேண்டின்உண் டாகத் துறக்க துறந்தபின்*
*ஈண்டு இயற் பால பல."*

இதன் பொருள். துன்பமில்லாத நிலமை வேண்டுமானால் எல்லாப் பொருள்களும் உள்ள காலத்திலேயே துறக்கவேண்டும். துறந்த பின் இங்கு பெறக்கூடும் இன்பங்கள் பல என்கின் றார். எனவே மனித வாழ்வின் இன்பங்களை புறம் தள்ளி ஆன்ம ஈடேற்றம் கொள்ள இகபர சுகத்தில் இருக்கும் இல்லற வாழ்வியல் மனித உள்ளத்தை அவன் சார்ந்த சமயத்தின் அறநெறி வாழ்வில் வழுவாது செல்வதற்கு, ஆதீன துறவிகளின் பங்கானது மிக முக்கிய மானதாகவும் முதன்மையானதாகவும் அமைகின்றது. இதை முன்மாதிரியாக செய்து ஆதீன மரபில் பசுஞ்சாணம் மெழுகிய தரையில் ஓலைக்குடிசையில் இயற்கை நதிகளும், பூக்களும் ததும்புகின்ற இறையின்ப மலையோரம் தன் ஆன்மீக துற வறத்தை அழகுற தொடங்கிய மாபெரும் ஞானமுனி ஆதி சங்கரர் அம்பாளே அனைத்தும் என வாழ்ந்தவர்.

*சித்தியும் சித்தி தரும் தெய்வம் அகித் திகழும் பரா*
*சக்தியும் சுத்தி தழைக்கும் சிவமும், தவம் முயல்வார்*
*முத்தியும் முத்திக்கு வித்தும் வித்தாகி முளைத்து எழுந்த*
*புத்தியும் புத்தியின் உள்ளே புரக்கும் புரத்தை அன்றே.*

என்கின்ற அபிராமி பட்டரின் கூற்றின்படி **பராசக்தியும் சக்தி தழைக்கும் சிவமும் தவம் முயல்வார் முத்தியும்** எனும் ஞானநிலை கொண்டு ஆன்மபரிபாலனத்திற்கு அழகு வித்திட்ட ஆதிசங்கரர் வழங்கிய "காஞ்சிமடம்" எனும் சங்கராசாரிய சுவாமிகளை என்றும் யாரும், எப்

போதும் மறக்கமுடியாது. அதே வழி வந்த காஞ்சிமட பெரியவாள். வாழ்ந்த "தவமுனிவாழ்வு" தரணி வாழ் ஆதீன மடாதிபதிகளுக்கெல்லாம் முன்னுதாரணம். சமயமும், சமயம் சார்ந்த சமூக தர்மும் ஆதினங்களின் முதற்பணி. அந்தப் பணியை செவ்வனவே செய்கின்ற ஆதீனங்கள் அனைத்தும் எம் சமய வழிகாட்டலுக்கு கிடைத்த அற்புத வரப்பிரசாதங்கள். ஒரு மனிதன் தனது இல்லற வாழ்வியலில், பொய், களவு, காமம், கோபம், குரோதம் போன்ற பஞ்சமாபாதக செயல்களுக்குள் சிக்கியே வெளிவரவேண்டும். இதிலே பலர் தம் தவறை உணர்ந்து அதற்கு ஈடான பரிகார நிலையை தேடிக் கொள்வார்கள் ஒரு சிலர் மனித பிறப்பை மறந்து மிருகக் குணத்தோடு இவற்றை தொடர்வார்கள். யாராயினும் செய்யும் கர்மவினைகளுக்கு ஏற்ப தண்டனைகள் பெற்றேயாகவேண்டும். வாழ்க்கையில் பலவித பிரச்சினைகளை கொண்டு வாழும் இவர்கள் தங்களின் மன ஆறுதலை ஆன்மீக சுகத்தை தேடிச் செல்லும் இடங்கள் **"ஆதீன திருமடங்கள்"** சமய நன்னெறியைப் போதித்து மனிதனை மனிதனாக அவர் சார்ந்த ஒழுக்க நெறியோடு வாழ சைவ சமய காப்பகமாக கை கொடுக்க வேண்டும். அப்பொழுதுதான் ஒருவன் முழுமையான சமயவாதியாகின்றான்.


**சைவ சமயமே சமயம் சமயா தீதப் பழம் பொருளைக்**
**கைவந்திடவே மற்றுள்வெளி காட்டும் இந்தக் கருத்தைவிட்டு**
**பொய்வந் துழலும் சமயநெறி புகுத வேண்டாம் முத்தி தரும்**
**தெய்வ சபையைக் காண்பதற்குச் சேர வாரும் சகத்தீரே**
**(தாயுமானவர்)**

எனவே நம் ஈழத்தின் வடபகுதி மகுடம் நல்லூரில் தோற்றம் பெற்ற நல்லை ஆதீனம் அமைத்த குருமஹாசன்னிதானம் ஸ்ரீலஸ்ரீ ஞானசம்பந்த பரமாசாரியசுவாமிகள் (மணிபாகவதர்) ஈழமக்களால் மறக்கமுடியாத பெரும் கைங்கரியம் செய்தார். அதையேனும் தற்போதைய ஆதீன முதல்வர், ஆதீனத்தை புதுப்பொழிவு செய்த இலண்டன் வாழ் ஈழத்தமிழ் மக்கள் அனைவரும் சமயம் காக்கும் சான்றோர்களே!

**சிவசக்தி ஸ்ரீ. ராம் தேவலோகேஸ்வரக்குருக்கள்**

# திருமந்திரம் காட்டும் வாழ்வியல் நெறிகள்

**முனைவர் இரா.சந்திரசேகரன்**
உதவிப் பேராசிரியர்,தமிழ்த்துறை
அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரி
நாமக்கல் - 637 002 தமிழ்நாடு இந்தியா.
tamilchandru@rediffmail.com



இறைவனைச் சென்று அடைதற்கு உரிய எளிய வழி குருவை வழிபடுதலால் கிட்டும். பிறன்மனை நோக்காத பேராண்மையை ஆடவர் பெறல் வேண்டும். காக்கை தன் இனத்தைக் கூவி அழைத்துக் கலந்து உண்பது போல், சக மனிதர்களோடு கலந்து உண்ணல் வேண்டத் தக்கது. கற்றவர்களுக்கு மட்டுமே பேரின்பம் வாய்க்கும். கேள்விச் செல்வமே மனிதர்களுக்கு உற்ற துணை. மிகுந்த காமமும் கள்ளுண்டலும் கீழோர் என்று அடையாளம் காட்டும். விரும்பியவாறு ஆண் அல்லது பெண் குழந்தை பெற்றுக் கொள்வதற்குரிய மூச்சுப்பயிற்சி முறை, குழந்தைகள் குருடாய், ஊமையாய், முடமாய்ப் பிறப்பதற்குரிய காரண விளக்கம், திருக்கோயில் வழிபாட்டின் இன்றியமையாமை முதலான பல அரிய செய்திகளை வழங்கும் களஞ்சியமாகத் திருமந்திரம் அமைந்துள்ளது.

**அன்பே சிவம்**

திருமந்திரம் ஆகமத்தின் சாரமாக அமைந்திருந்தாலும் அனைவரும் உணரும் எளிமையும், இனிமையும் உடைய பாடல்கள் பலவற்றைத் தன்னகத்தே கொண்டுள்ளது. ‘அன்பே சிவம்’ என்ற தொடரைப் பலரும் அறிவர். மனிதர்கள் ஏனைய மனிதர்கள்பால் செலுத்தும் அன்பில்தான் உலகம் வாழ்ந்து கொண்டிருக்கிறது. உலகத்தில் தோன்றிய கடவுள் சார்புடைய மதங்களும், கடவுள் மறுப்புச் சமயங்களும் கூட அன்பினைப் பெரிதும் போற்றியே உரைக்கின்றன. திருவள்ளுவர் முதலிய அறநூலாசிரியர்களும் அன்பின் சிறப்பையும், இன்றியமையாமையையும் எடுத்துரைத்துள்ளனர். சைவர்களின் இறைவன் சிவன். அவன் யார்? அவன் இயல்பு எத்தகையது என்ற வினாக்களுக்குத் திருமூலர் தரும் விடை ஆழ்ந்த பொருட்சிறப்புடையது. அன்புதான் எங்கள் சிவன். ‘சிவம் வேறு: அன்பு வேறு’ என்பார் அறியாமை மிக்கவர்கள். ‘இரண்டும் ஒன்றே’ என்று உணரும் உணர்வில் இறைமைப் பேறு வாய்க்கும்.

*“அன்பும் சிவமும் இரண்டு என்பர் அறிவிலார்*
*அன்பே சிவமாவது ஆரும் அறிகிலார்*
*அன்பே சிவமாவது ஆரும் அறிந்தபின்*
*அன்பே சிவமாய் அமர்ந்திருந் தாரே”*

என்பது அன்பின் சிறப்புரைக்கும் பாடலாகும்.

**மனிதநேயப் பரிவு**

சைவம் மனித நேயத்தை வற்புறுத்தும் ஓர் அன்பு நெறி. சிற்றுயிர்கள் இடத்தும் கருணை காட்டவேண்டும் என்று அது வற்புறுத்துகின்றது. இறைவன் உலகத்தையும், நுகர்பொருள் களையும் உயிர்கள் பெற்று இன்புறுவதற்கே படைத்தளித்தான். உயிர்களிடமிருந்து இறைவன் அன்பு ஒன்றைத் தவிர வேறு யாது ஒன்றும் பெற விரும்புவதில்லை. ஆனால், சமயவாதிகள், சடங்கு நெறியில் பற்றுக் கொண்டு நின்று, மனிதனின் பசிக்கு உணவிட விரும்பாது இறைவ னுக்குப் படையலிட்டு மகிழ்கின்றனர். இறைவன் மனிதன் அளிக்கும் உணவையும், படையலை யும் உண்டு மகிழ்கின்றானா என்றால் இல்லை. இறைவன் கவனத்திலும் கணக்கிலும் அவ னுக்குப் படைக்கப்படும் படையல் இடம்பெறுவதில்லை. அவன் கணக்கில் இடம்பெற விரும்பி னால் பசித்திருப்போருக்கு உணவு அளியுங்கள். அதுவே அவனைச் சென்றடையும் அரிய பெருநெறி என்று காட்டுகிறார் திருமூலர்.

*"படமாடக் கோயில் பகவற்கு ஒன்று ஈயில்*
*நடமாடக் கோயில் நம்பர்க்கு அங்குஆகா*
*நடமாடக் கோயில் நம்பர்க்கு ஒன்று ஈயில்*
*படமாடக் கோயில் பகவற்கு அதுஆமே"*

'நம்பர்' என்ற சொல் 'நம்மவர், எம்மைப்போன்ற மனிதர்கள்' என்ற பொருள் தரும். மனி தரின் உள்ளத்தில் இறைவன் குடி கொண்டுள்ளான். எனவே மனிதர்கள் இறைவனின் நட மாடும் கோயில்கள், நடமாடும் கோயில்களாகிய நம் போன்ற மனிதர்க்கு ஒன்று கொடுப்பது இறைவனுக்குக் கொடுப்பதற்கு ஒப்பாகும்.

வாழ்க்கை மிகக் குறுகியது. இங்கே வாழுங்காலத்தைப் பொருள் பொதிந்ததாக மாற்றிக் கொள்ளவேண்டும். எது மனத்திற்கு அமைதியையும் ஆனந்தத்தையும் தருமோ அந்த வழியைத் தேர்ந்திடவேண்டும். ஒழுக்கமுடன் வாழும் வாழ்க்கையே உயர்வுகளைப் பெற்றுத்தரும். அற நெறியில் நிற்க வேண்டும். அதுவே ஆன்மாவை ஒளிரச் செய்யும்.

உன்னதம் பெற விரும்புகிறவர் அறத்தைப் போற்ற வேண்டும். அறவொழுக்கம் என்பது அடுத்தவர் சொத்துக்கு ஆசைப்படாமல் இருப்பது. பொய் கூறாதல் இருப்பதும் ஆகும். பொய் பேசுகிறவர் தவறு செய்யத் தயங்குவதில்லை. பொய்யர்கள் எதிராளியை நம்பிக்கை மோசம் செய்கிறவர்கள். இக்கருத்தினை,

*"அவ்வியம் பேசி அறங்கெட நில்லன்மின்*
*வெவ்விய னாகிப் பிறர்பொருள் வவ்வன்மின்*
*செவ்விய னாகிச் சிறந்துண்ணும் போதொரு*
*தவ்விக்கொ டுண்மின் தலைப்பட்ட போதே"*

அறங்களில் அனைத்தையும் கைக்கொள்ள இயலாவிட்டாலும் ஒழுக்கம் தவறாமல் உண்மை வழி நிற்பது பெரிய அறம்.

திருமூலரின் கண்ணோட்டத்தில் அறம் என்பது தன்னையறிவதில் இருந்து தொடங்குகின்றது.
பண்புடையவர் அறம் செய்வதில் பாரபட்சம் பார்க்கமாட்டார். இவர் நல்லவர் - கெட்டவர், உயர்ந்தவர் - தாழ்ந்தவர் என்றெல்லாம் அவர் இனம் பிரிப்பதில்லை, வகைப்படுத்துவதில்லை.
எல்லோர்க்கும் கொடுங்கள். காக்கைகளைப் பார்த்தாவது அதனைக் கற்றுக்கொள்ளுங்கள். ஒரு காகம் உணவினைக் கண்டதுமே உண்ணத் தொடங்கிவிடாது. பிற காகங்களையும்

அழைத்தே உண்பதை அறிந்திடுங்கள் என்கிறார் திருமூலர்.

*"ஆர்க்கும் இடுமின் அவரிவர் என்னன்மின்"*

நீங்கள் உண்பதற்கு முன் இறைவனை வணங்கியுண்ணுங்கள். அவன் உங்களைப் போல் வகைவகையாய் உண்பதில்லை. வாயும் வயிறும் அவனுக்கில்லை. உங்களுக்குக் கிடைத்த உணவிற்காகச் சில பச்சிலைகளை அவன் திரு முன்னர் இட்டு நன்றியோடு அவனை நினைப்பதும், பசுவிற்கு ஒரு கைபிடி புல்லை வழங்குவதும் உங்களுக்கு முடிகிற காரியம்தான். அதுபோல் உங்கள் உணவில் சிறுபகுதியைப் பிறருக்குக் கொடுப்பதும் உங்களால் முடியக் கூடியதுதான். முடியாதெனில் பிறர்மனம் நோகாதவாறு இன்சொல்லேனும் வழங்குங்கள் என்கிறார் திருமூலர்.

'உங்கள் மனம் செய்கிற முக்குற்றங்களை (காமம், வெகுளி, மயக்கம்) அகற்றி, அறிவைப் பெருக்கும் காரியத்தை நீங்கள் செய்யவில்லை. செல்வம குவிந்த நிலையிலும் உங்களிடம் அறச்சிந்தனை இல்லாமல் போனது. தர்மம் செய்யாதவர் சேர்த்து வைத்தவை என்னாகும்? எண்ணிப்பாருங்கள்' என்கிறார் திருமூலர்.

*"அழுக்கினை ஓட்டி அறிவை நிறையீர்*
*தழுக்கிய நாளில் தருமமும் செய்யீர்*
*விழித்திருந் தென்செய்வீர் வெம்மை பரந்து*
*இழிக்கவன் றென்செய்வீர் ஏழைநெஞ் சீரே"*

ஆணவ அழுக்கையகற்றி இறைவுணர்வு பெறவேண்டும். பொருளின் மீதான பற்று குறைந்தால் பாவக் கொடுவினைகள் குறையும். இதனைத் திருமூலர், 'ஐயா, நீ புண்ணியம் செய்யாவிட்டாலும் பரவாயில்லை. பாவம் செய்யாமலாவது இரு' என்று திருமந்திரப் பாடலில் தெரிவித்துள்ளார். 'உன்னிடம் அறச்சிந்தனை இல்லாவிட்டால் இறைச்சிந்தனை மட்டும் எப்படி இருக்கும்? நீ போகிற வழியில் இறைவனின் துணையும் உனக்குக் கிடைக்காது' என்கிறார் திருமூலர்.

அறமே சிறந்த தவம். அதுவே உங்களை வினை என்கிற கடலில் இருந்து கரை சேர்ப்பது. இறைவழி நிற்பது போன்றதே இல்லறத்தான் தனக்குரிய கடமைகளைச் செய்வதும்.

'மனிதனின் பிறப்புக்கும் இறப்புக்கும் இடையேயுள்ள காலப்பகுதி ஒன்றும் வெகு நீண்டதல்ல. அது கண்மூடித்திறக்கும் நேரத்தில் முடிந்துவிடுகிறது. அவன் தனக்குள் வளர்த்த ஆயிரமாயிரம் கற்பனைகளும் சிதைந்து போகின்றன. அவனுடைய சரீரம் தன் வனப்பை இழந்து சாறற்ற சக்கையாகின்றது. பயனற்றுப் போகிறது. உடலைப் போலவே வாழ்க்கையும். இதனைப் பார்த்தறிந்து அறத்தின் அவசியத்தை அவன் உணராதிருக்கிறான்' என்று திருமூலர் வருந்திக் கூறியுள்ளார்.

*"ஒழிந்தன காலங்கள் ஊழியும் போயின*
*கழிந்தன கற்பனை நாளும் குறுகிப்*
*பிழிந்தன போலத்தம் பேரிடர் ஆக்கை*
*அழிந்தன கண்டும் அறம்அறி யாரே"*

தம்மை யாசிப்பவர்க்குத் தாய் மனத்தோடு உதவுகிறவனே இறைவனுக்கு உகந்தவன். பொருள் மீது பற்றுவைத்து நல்லறம் செய்யத் தவறியவர்கள் காலனின் சினத்துக்கு ஆளாக நேரிடும்.

*"கனிந்தவர் ஈசன் கழலடி காண்பர்*
*துணிந்தவர் ஈசன் துறக்கம் தாள்வர்*
*மலிந்தவர் மாளுந் துணையுமொன் றின்றி*
*மெலிந்த சினத்தினுள் வீழ்ந்தொழிந் தாரே"*

நீங்கள் நல்லது செய்தால் நன்மை உண்டு. தீயது செய்தால் தீங்கே விளையும். இது இயற்கை விதி. இன்பமும் துன்பமும் உங்கள் செயலின் விளைவேயாகும். 'நல்லது செய்தால் மகிழ்ச்சியாக வாழலாம்' என்பது மனிதன் அறிந்ததே. ஆனால், அவனுடைய அன்பற்ற மனம் அவனை அறம் செய்யாமல் தடுத்துவிடுகின்றது.

*"இன்பம் இடரென் றிரண்டுற வைத்து*
*முன்பவர் செய்கையி னாலே முடிந்தது*
*இன்ப மதுகண்டும் ஈகிலாப் பேதைகள்*
*அன்பிலார் சிந்தை அறம் அறியாரே"*

திருமூலர் நம்முன் ஒரு வினாவைத் தொடுக்கின்றார். 'நேர்மையற்ற செயல்களைச் செய்கிற ஒருவன் நிம்மதியாக வாழமுடியுமா? இறைவன் அவனைச் சுகப்பட அனுமதிப்பானா? தேவைப்படு கிறவர்களுக்குக் கொடுங்கள். தகுதியறிந்து கொடுங்கள். அடுத்தவரைத் துன்புறுத்தும் மிருகச் செயலை ஒருபோதும் செய்யாதீர்கள்' என்பதனை,

*"கெடுவதும் ஆவதும் கேடில் புகழோன்*
*நடுவல்ல செய்தின்பம் நாடவும் ஒட்டான்*
*இடுவதும் ஈவதும் எண்ணுமின் இன்பம்*
*படுவது செய்யிற் பசுவது வாமே"*

என்ற பாடலடிகளில் உணர்த்தியுள்ளார்.

**தீச்செயல் தவிர்த்தல்**

'பஞ்சமா பாதகங்கள்' தவிர்க்கப்பட வேண்டியவை என்பர். தர்ம நூல்களும் அவ்வாறே கூறுகின்றன. பாவம் என்பது அடுத்தவருக்குச் செய்யும் அநீதி. ஒழுங்கற்ற செயல். களவு, கள்ளுண்ணல், குருநிந்தை, கொலை, பொய் இவை பஞ்சமா பாதகம் என்கின்றன அறநூல்கள்.

திருமூலர் புலால் உண்பதும் கொலையே என்று சுட்டிக்காட்டியுள்ளார்.

*"கொலையே களவு கள்காமம் பொய்கூறல்*
*மலைவான பாதகமாம் அவை நீக்கித்*
*தலையாம் சிவனடி சார்ந்து இன்பம் சார்ந்தோருக்கு*
*இலையாம் இவை ஞானானந்தத்து இருத்தலே"*

இப்பாடல், 'ஐம்பெரும் பாவங்களை விலக்கி, இறைவனின் திருவடியைச் சிரமீது சூடியவர்கள் துன்பங்கள் நீங்கப்பெற்று இன்பத்தில் திளைத்திருப்பர்' என்று குறிப்பிட்டுள்ளது.

புலால் உண்பது மட்டும் பாவம் இல்லை, புலால் விரும்பாதவரை வற்புறுத்தி உண்ணச் செய்வதும் கொடுமையே என்று திருமூலர் உணர்த்தியுள்ளார்.

**ஒழுக்க நெறிகள்**

உயிரானது உயர்ந்த நோக்கிலும் ஆக்க நெறியிலும் பதப்பட்டுப் பதப்பட்டு அவற்றைக் கடைபிடித்து ஒழுகி நலங்காண்பதே பண்பாடாகும். இதைப் பண்டைத்தமிழ் 'பண்பெனப்படுவது

பாடறிந்து ஒழுகுதலென்று' சுட்டியுள்ளது.

இந்த மனிதப் பண்பே, பிறவுயிர்கட்குத் துன்பம் தராமலிருத்தலும் அவற்றுக்கு வரும் துன்பத்தைக் கண்டு அதனைத் துடைத்தலும் ஆகிய செயற்பணியைப் புலப்படுத்துவதாகும். இத்தகு பண்பைத் தற்காத்துக் கொள்ளும் கவசமாயிருப்பது அவனது அறிவேயாகும்.

இவ்வறிவைத் தாக்கியழிக்கும் தீய பழக்கமோ ஒழுக்கமோ தன்னை அடிமைப்படுத்த வருமேயானால் அதை உடனே எதிர்த்து அழித்துவிட வேண்டும். இதுவே விழிப்புணர்வாகும்.

வாழ்விடமான புறச்சூழ்நிலையில் கழிவுகளிலிருந்து தோன்றும் நுண்ணுயிரிகள் காற்றிலே கலப்பதால் அந்த நச்சுக்காற்று, மனிதன் உள்ளிழுக்கும் மூச்சுக்காற்றான உயிர்வளியில் கலந்துவிடுகின்றது. இதனால் மனித உயிரே இறக்க நேர்கின்றது.

இதுபோலவே மனிதன் சேர்ந்து பழகும் சூழ்நிலையால், தீய ஒழுக்கமுள்ளவரின் நட்பால் பண்பாடு சிதைந்து வாழ்வே அழிந்து போகின்றது.

தீய ஒழுக்கங்களில் வலிமைமிக்கவை கள்ளுண்ணலும் புலாலுண்ணலும் ஆகும். இவையே மனிதப் பண்பாட்டைக் கொல்லும் கொல்லிகளாகின்றன.

இக்கொல்லிகளைக் கண்டுதான் திருமூலரும் பிற அற நூலாசிரியர்களும் கள்ளையும் புலாலையும் பழித்துரைத்தனர்.

தனிமனித ஒழுக்கக்கேடுதான் ஒரு குடும்ப ஒழுக்கக்கேடாகவும் ஒரு நாட்டின் ஒழுக்கக்கேடாகவும் பரவி விஞ்சிப் பழிக்கப்படுகின்றது என்ற உண்மையை உணர்ந்தே நாட்டையாளும் மன்னவனின் கடமையைத் திருமூலர் இங்கே வலியுறுத்தியுள்ளார். நாடாளும் அரசன் நல்லொழுக்கத்தைக் கண்ணும் கருத்துமாய்க் காக்க வேண்டியதைக் கடமையாகக் கொள்ளவேண்டுமென்றார்.

நாட்டு மக்களிடம் நற்செயலால் இன்பமும் தீச்செயலால் துன்பமும் ஏற்படுகின்ற நிலையை மன்னவன் நாள்தோறும் கண்டு ஆராய்ந்து, மக்களை நல்வழிப்படுத்திச் செப்பமுடன் வாழச்செய்யவேண்டும். அவ்வாறு செய்தாலே ஒரு நாடேயன்றி இந்த உலகம் முழுதும் அமைதியுற்று வாழும் என்ற அரசியல் கோட்பாட்டை வகுத்துரைக்கும் திருமந்திரப் பாடல் பின்வருமாறு:

*"இன்பமும் துன்பமும் நாட்டார் இடத்துள்ள*
*நன்செயல் புன்செய லாலந்த நாட்டிற்காம்*
*என்ப இறைநாடி நாள்தோறும் நாட்டினின்*
*மன்பதை செப்பம் செயின்வையம் வாழுமே"*

மக்களின் ஒழுக்கங்கெட ஆள்கின்ற ஆட்சி அறவோரால் பழிக்கப்படுமென்பதால் பண்டைக் கால மன்னர்கள் மக்களடையும் பழியைத் தமது பழியாகவே கருதி அஞ்சினர். மனிதனாய்ப் பிறந்த ஒருவனுக்கே கடவுளை நினைந்து நினைந்து உருகி இன்புறும் அழுதத்தேறல் வாய்த் துள்ளது. இதனை அறிந்து பெறாத மனிதனே கள்ளைக் குடித்து வாழ்வையே அழித்துக் கொள்கிறானென்று திருமூலர் வருந்துகின்றார்.

கள் அறிவை மயக்கி அழித்துவிடும். வாய்மையைக் கொல்லும். உள்ளே இருக்கும் இயற்கையுண்மையான கடவுளை நினைக்க ஒட்டாது. வள்ளலாம் இறைவனின் அருளைப் பெற்று வாழவிடாது. இப்படியெல்லாம் வாழ்வின் முன்னேற்றத்தைக் கெடுக்கும் கள்ளைக் குடிக்கும் மக்கள் எந்த ஒரு நற்கருத்தையும் கருதமாட்டார்கள் என்னும் உண்மையை,

*"உள்ளுண்மை ஓரார் உணரார் பசுபாசம்*
*வள்ளன்மை நாதன் அருளினின் வாழ்வுறார்*
*தெள்ளுண்மை ஞானச்சிவயோகம் சேர்வுறார்*
*கள்ளுண்ணும் மாந்தர் கருத்தறி யாரே"*

என்ற பாடலடிகளில் திருமூலர் உணர்தியுள்ளார்.

கொடுமை செய்யும் கள்ளையடுத்துப் புலாலுண்ணுதலால் ஏற்படும் தீவினைகள் பற்றித் திருமூலர் கருத்துரைத்துள்ளார். 'கள்' வெறியும் காமவெறியும் புலால் உண்ணும் வெறிக்கு ஆர்வத்தைத் தூண்டுகின்றனவாம். இந்த மூன்றாலும் பிறவியினை வீணடிக்கும் மனிதனைப் பற்றித் திருமூலர்,

*"காமமும் கள்ளும் கலதிகட் கேயாகும்*
*மாமல மும்சம யத்துள் மயலுறும்*
*போமதி யாகும் புனிதன் இணையடி*
*ஓமய ஆனந்தத் தேறல் உணர்வுண்டே"*

என்ற பாடலடிகளில் திருமூலர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அருளை வேண்டும் மனிதன், பிற உயிர்களைக் கொன்று அவற்றின் ஊனை உண்ண விரும்பக்கூடாது. அதனை விரும்பும் போதெல்லாம் நிணம் ஒழுகும் புண்ணாகக் கருதி அருவருக்க வேண்டும். அருவருத்தால் அதனை விட்டொழிக்கும் மனவுறுதியேற்படாமற் போகாது.

பிறவுயிர்களை வதைத்துத் துன்புறுத்திக் கொன்றெடுக்கும் புலாலாதலால் அதனை வெறுக்கவேண்டியே இங்கே 'பொல்லாப் புலால்' என்றார் திருமூலர். அந்தக் கொடுமையான புலால் ஆகிய ஊனைத் துணிந்துண்பதால் உண்பவரைத் தீவினை நோக்கி 'நுகரும் புலையர்' என்றார். இந்தப் பழிநிலையை மக்கள் உணரவில்லை. இவர்கள் கொடிய தீயெரியும் நரகத்துன்பக் குழியிலே மல்லாக்க உடல் விழும்படித் தள்ளிக் கிடக்க வைத்துவிடுவார்களாம். இவ்வாறு எச்சரிக்கும் வகையில்,

*"பொல்லாப் புலாலை நுகரும் புலையரை*
*எல்லாரும் காண இயமன்தன் தூதுவர்*
*செல்லாகப் பற்றித் தீவாய் நரகத்தில்*
*மல்லாக்கத் தள்ளி மறித்துவைப் பாரே"*

என்ற பாடலடிகள் அமைந்துள்ளன.

மன்பதை என்பது ஒழுக்கநெறியில் கூடிவாழும் பண்பட்ட மக்கட் கூட்டத்தைக் குறிக்கும். ஒரு குடும்பத்தில் வாழ்கின்ற ஆண், பெண் இருபாலாரும் சமூகத்தோடு கூடிப் பழகவேண்டிய நிலையில்தான் வாழ்கின்றனர். இந்த நட்பு நிலைமாறி எல்லை கடந்துவிடக் கூடாது. முறை தவறிக் கற்பொழுக்கம் சிதைந்து, அடுத்தவர் மனைவியை விரும்பி நடந்தால் பண்பாடு குழைந்து உயிரிழப்பு ஏற்படும்.

தனக்குரிய அன்பே வடிவான மனைவி தன் வீட்டில் விளக்கைப் போலிருக்கவும் அவளை ஏனோ மறந்துவிட்டுக் காளை போன்ற கணவன், அடுத்த வீட்டிலுள்ள பண்புடைய மற்றொருவனின் மனைவியை விரும்புவது கொடுமை. எது எதனைப்போன்றது எனில், வீட்டுக் கொல்லையிலுள்ள பலா மரத்தில் கனிந்து வாய்ப்பாகத் தொங்கும் உரிமையுடைய கனியைப் பண்போடு உண்ண விரும்பாமல் எங்கோ காட்டிலே முள் மரமான ஈச்சமரத்தில் பழுத்திருக்கும் பழத்தைப் பறிக்கச் சென்று முட்களால் குத்துண்டு துன்புறுதல் போன்றதாகும் என்று திருமூலர் உவமைப் படுத்தியுள்ளார்.

பொது மகளிரிடம் இன்பம்பெற விளைவோர் குறித்தும் திருமூலர் கருத்துரைத்துள்ளார். அறிவும் மனவலிமையுமில்லாத கோழையே ஒழுக்கங்கெட்டுப் போகின்றான். அவனுள்ளத்தில் நோயும் தெரியவில்லை மருந்தும் அறியவில்லை. அதனால் அவன் காமக் கண்ணாடியென்னும் மாயைக் கண்ணாடியால் கற்பில்லாத பொதுமகளிரைக் கண்டு, அவளைக் கலந்துப் பொய் யின்பம் நுகர்கின்றான். அதன் விளைவோ சொல்லும் நிலை கடந்ததாகும். அவன் அவளிடம் பொருளை இழந்து நோயைப் பெறுகின்றான். இதைக் குளத்து நீரில் மூடிக்கிடக்கும் பாசியில் (விலக்கமுடியாத) ஆழ்ந்து போகும் நிலையென்று, குறிப்புணர்த்தியுள்ளார்.

> *"கோழை ஒழுக்கம் குளமூடு பாசியில்*
> *ஆழ நடுவர் அளப்புறு வார்களைத்*
> *தாழத் துடக்கித் தடுக்ககில் லாவிடில்*
> *பூழை நுழைந்தவர் போகின்ற வாறே."*

என்ற பாடலடிகளின் வழியாகத் திருமூலர் குறிப்புணர்த்தியுள்ளார்.

மனித வாழ்க்கையின் இன்பச் செறிவையும் துன்பச் செறிவையும் ஒரு நாலடிப் பாடலில் திருமூலர் அடக்கிக் காட்டியுள்ளார். கடவுள் உயிர்களையெல்லாம் படைக்கும்போதே அவற்றிற்குப் பொருத்தமான உணவுகளை (தீனிகளை)யும் படைத்து அவற்றைப் பயன்படுத்தும் அறிவையும் தந்தான். அதனாலே தான் இன்றுவரை உலகம் உய்த்துள்ளது.

குடும்ப உறவில் ஆணையும் பெண்ணையும் இணைப்பதிலே தூவா மாயையென்னும் பேராற்றல் பாலுணர்ச்சியைத் தூண்டுவதால் இருவரும் உடலின்பம் கொள்கின்றனர். இளநங்கையும் நம்பியும் மறைவாகக் கலந்து காதலின்பம் அடைகின்றனர். மனை வாழ்வின் பயனாய் மழலைகளைப் பெற்றுக் களிக்கின்றனர்.

**மக்களை வழிநடத்துவோருக்கான நெறி**

கல்வி கற்றதன் பயன் தூய அறிவினன் ஆகிய இறைவனின் நன்மை பொருந்திய திருவடிகளைத் தொழுவதற்கே என்பதனைக்,

> *"கற்றதனால் ஆய பயனென்கொல் வாலறிவன்,*
> *நற்றாள் தொழார் எனின்"*

என்று திருவள்ளுவர் குறிப்பிடுவார். மனத்தாலும் வாக்காலும் காயத்தாலும் குற்றம் நீங்கி, அற நெறியோடு வாழ்தலே கற்றோருக்கு அழகு என்று ஔவை பிராட்டி குறிப்பிடுவார். சமய அறிவினைக் கொண்டு இறைவனை எப்பொழுதும் நினைவில் நிறுத்தி அருள் வழியில் தனக்குக் கீழ் உள்ள மக்களை வழிநடத்துபவனும், அறநெறிகளைக் கற்று அதன் வழி மன வாக்கு காயத்தினால் அறவழி நிற்பவனுமே கற்ற நல்தலைவன் என்றும் திருமூலர்

குறிப்பிடுவார். வெறும் ஏட்டுக்கல்வியை மட்டும் பெற்று பற்பல பட்டங்களை வாங்கித் தலைவனாகத் தன்னைக் கூறிக்கொள்பவன் உண்மையில் கல்லாதவனே என்றும் திருமூலர் குறிப்பிடுகின்றார். உடலிலிருந்து உயிர்களைக் காலம் கூடிய உடன் பிரிப்பவன் காலன் எனப்படுவான். சமயம் சார்ந்து அருள் வழி நில்லாமலும் அற நெறிகளை உணராது அறநெறியில் நில்லாமலும் மக்களை வழிநடத்தும் குமுகாயத் தலைவனும் உயிரை உடலிலிருந்து பிரிக்கும் காலனும் உயிர்களுக்குத் துன்பம் செய்யும் வகையால் நேர் ஒப்பர் என்பதனைக், "கல்லா அரசனும் காலனும் நேர் ஒப்பர்" என்று திருமூலர் குறிப்பிடுகின்றார்.

மக்களைத் துன்புறுத்தும் வகையால் கல்லா தலைவனும் காலனும் நேர் ஒப்பானவர்கள் ஆயினும் உடலிலிருந்து உயிரைப் பிரிக்கும் காலன், கல்லா தலைவனைக் காட்டிலும் நல்லவன் என்பதனைக், "கல்லா அரசனில் காலன் மிக நல்லன்" என்று திருமூலர் தெளிவுபடுத்துகின்றார். முறைமை தவறாது தன் கடமையைக் காலம் தவறாது செய்கின்ற காலன் நல்லவன். நன்நெறிகளையும் நல் ஒழுக்கங்களையும் இறை நெறியையும் கற்றறிந்த ஆன்றோருடன் ஆரய்ந்து அறியாத தலைவன் அதனைத் தன் தலைமைத்துவத்தின் கீழ் செயற்படுத்த மாட்டான். அதன்படி அவன் அதனை வாழ்ந்தும் காட்டமாட்டான். அதனால் நல்லவர்களையும் ஆன்றோர்களையும் அவன் செய்கையினால் துன்புறுத்துவான். அவர்களின் நல்லெண்ணங்களைக் கொல்வான். நாட்டில் நடக்க வேண்டிய நல் அறப்பணிகளைக் கொல்வான். சமய நெறிகளைக் கொல்வான். பண்பாட்டைக் கொல்வான். உயர் ப்ழக்க வழ்க்கங்களைக் கொல்வான். மக்களின் முறையான வளர்ச்சியைக்கொல்வான் என்பதனைக், "கல்லா அரசன் அறம் ஓரான் கொல் என்பான்" என்கின்றார் திருமூலர்.

அற நெறியில் வழுவாது நின்று குற்றத்தைக் குற்றம் என்று அறிந்து அதனைப் போக்கும் அறிவும் ஆளுமையும் உடையவனே கற்ற நல் தலைவன். தனக்குக் கீழ் உள்ள மக்களின் பொருளாதாரத்தையும் தனக்குக் கீழ் உள்ள கருவூலத்தையும் மேம்படுத்த அறநெறியில் நின்று இறை அருளை முன்வைத்துப் பொருளாதாரத்தைப் பெருக்குவதிலும் பொருளைச் சேர்ப்பதிலும் சேர்த்தப் பொருளைக் காப்பதிலும் காத்தப் பொருளை நல்வழியில் செலவு செய்தலிலும் பொருளீட்டும் புதிய வழிமுறைகளைத் தாமாகவோ தக்காரின் துணை கொண்டோ கண்டு செயல்படுத்துபவனே கற்ற நல் தலைவன்.

அருள் வழி நின்று திருவடி உணர்வு கைவரப்பெற்ற நல்லவர்களாகிய மெய்யடியார்களின் உயிர்களைக் காலன் வந்து கவர்ந்து செல்வதில்லை. மாறாகப் பெருமானே வருகின்றான் என்பதனை, "நல்லாரைக் காலன் நுணுக நில்லானே" என்று திருமூலர் குறிப்பிடுகின்றார். இவ்வுண்மையை மார்கண்டேயர் எனும் அடியாரின் வாழ்க்கை வரலாற்றின் வழி அறியலாம். காலன் தன் உயிரைப் பறிக்க வந்த போது இறைவன் மீது ஆழ்ந்த பற்றும் ஒழுக்க நெறிச் சீலமும் கொண்ட மார்கண்டேயர் திருக்கடவூரில் சிவலிங்க வடிவில் இருக்கும் சிவபெருமானை ஆரத்தழுவிக் கொள்ள, சிவக்கொழுந்திலிருந்து சிவபெருமான் காலனைக் காலால் உதைத்தமையை, "சாட எடுத்தது தக்கன் தன் வேள்வியில் சந்திரனை, வீட எடுத்தது காலனை" என்று திருநாவுக்கரசு அடிகள் குறிப்பிடுவார். திருவடி உணர்வும் அறநெறிச் சீலமும் நிறைந்த திருஞானசம்பந்தர், சுந்தரர், திருநாவுக்கரசர், மணிவாசகர், அமர்நீதி நாயனார், கண்ணப்பர் போன்றோருக்குக் காலன் வந்து அவர்கள் உயிரைப் பறித்து உடல் கிடக்க அல்லாமல் உடலோடே இறைவன் திருவடியை அணைந்தார்கள் என்பது நல்லாரைக் காலன் நெருங்க மாட்டான் என்பதற்குச் சான்றாகப் பகர்வர்.

அஞ்சாமை, கொடை, அறிவுடைமை, ஊக்கமுடைமை ஆகிய இயல்புகளில் குறைவுபடாமல் இருக்கும் தலைவனே நல்ல தலைமைத்துவம் உடையவன் என்பார் ஐயன் திருவள்ளுவர்.

ஆடம்பரம் இல்லாது எளிமையாய்க் கடுஞ்சொல் சொல்லாத தலைவனே அறநெறிகளில் சிறந்த தலைவனுக்கு இலக்கணமாவான். அத்தகைய தலைவனின் தலைமையையே எல்லோ ரும் உயர்த்திக்கூறுவர். உதவிகள் தேவைபடுகின்றவர்களுக்கு அவர்களின்மீது கடும் சொற் களை அள்ளி வீசாமல் இனிய சொற்களைப் பேசிக் கொடுத்துக் காக்கவல்ல தலைவனே அறநெறியும் இறை உணர்வும் கொண்ட கற்ற நல்ல தலைவன் என்பர். தன் தலைமைத்து வத்தைக் குறைகூறும் சொற்களைப் பொறுக்கும் பண்புடைய நல்ல தலைவனின் தலை மைத்துவத்தின் கீழே மக்கள் அடிபணிய விரும்புவர்.

மக்கள் நடுவில் தவநெறியைக் காக்கத்தவறிய தலைவனும் காலனுக்கு ஒப்பானவனே என்று திருமூலர் குறிப்பிடுகின்றார். இறைவனின் திருவருளைத் துணைகொண்டு தன் ஆளு மைக்கு உட்பட்ட வட்டத்துக்குள் ஒவ்வொருநாளும் பிறர்க்கென வாழும் பெரியோரின் தவ நெறி செம்மையாக நிகழ்கின்றதா என்று கண்காணித்தல் வேண்டும் என்கின்றார். தவநெறி பெருக்கும் ஆலயங்கள், மடங்கள், இயக்கங்கள், தவநெறிச் சான்றோர் போன்றோருக்குத் தன்னாலோ பிறர் மூலமாகவோ இயன்ற உதவிகளைப் பெற்றுத் தர வேண்டும் என்கின்றார். தவநெறிக்கு மாறாகச் செயல்படும் தனி நபர்களையும் மடங்களையும் இயக்கங்களையும் ஆலயங்களையும் தம் ஆளுமையைக்கொண்டு கண்டித்தலும் திருத்துதலும் செய்யாவிடின் அவனும் கல்லாத் தலைவனே என்கின்றார் திருமூலர்.

ஆலயங்களிலும் மடங்களிலும் இயக்கங்களிலும் தனி நபர் நடத்தும் தவச் சாலைகளிலும் தவ நெறிக்கும் அறநெறிக்கும் புறம்பானவற்றைச் செய்யவும் அதனை நல்ல தலைவனானவன் கண்டிக்காமல் இருப்பானேயானால் தன்னைச் சார்ந்துள்ள தொண்டர்களுக்குச் சொல்லொணா தீங்கும் துன்பமும் உண்டாகும் என்கின்றார் திருமூலர். தான் சார்ந்துள்ள தவ நெறிக்கும் அறநெறிக்கும் பிறர் ஊறு விழைவித்தால் அதனை உடனே முயன்று போக்காதவன் கற்ற நல்ல தலைவன் அல்லன். அவன் அக்குமுகாயத்தின் சிறப்பினைக் குழைக்க வந்த காலன் என்கின்றார். எனவே எப்பொழுதும் முழு விழிப்புடனும் மிகச் சிறந்த கண்காணிப்புடனும் அஞ்சா நெஞ்சத்துடனும் தான் சார்ந்த தவநெறியையும் அற நெறியையும் காக்கவல்லவனே உண்மையான கற்ற தலைவன்.

> *"நாள்தோறும் மன்னவன் நாட்டில் தவநெறி,*
> *நாள்தோறும் நாடி அவன் நெறி நாடானேல்,*
> *நாள்தோறும் நாடு கெடும் மூட நண்ணுமால்,*
> *நாள்தோறும் செல்வம் நரபது குன்றுமே"*

என்று திருமூலர் குறிப்பிடுகின்றார். நல்ல கற்ற தலைவனானவன் தவ நெறியும் அற நெறியும் பிறரால் பிழைக்கப்படாமல் இருப்பதனைக் கண்காணிப்பதோடு மட்டுமல்லாமல், தன்னிடம் ஏதாவது குற்றம் இருக்கின்றதா என்று ஆராய்தல் வேண்டும் என்கின்றார். தன்னுடைய நடவடிக்கைகள் தவநெறிக்கும் அற நெறிக்கும் மாறுபட்டுள்ளனவா, தன்னுடைய போக்கினால் தவநெறிக்கும் அறநெறிக்கும் ஊறு விழைகின்றதா என்பதனை ஆராய்கின்றவனே கற்ற நல் தலைவன் என்கின்றார்.

மக்களைக் காக்கும் தலைவனானவன் மக்களைக் காக்கும்போது தன்னாலும் தன்னைச் சார்ந்தவர்களாலும் தன்னுடைய ஏவலர்களாலும் தம் பகைவர்களாலும் தீயவர்களாலும் மற்ற உயிர்களினாலும் உண்டாகும் ஐவகை அச்சங்களைப் போக்குபவனாக இருத்தல் வேண் டும் என்று தெய்வச் சேக்கிழார் மனுநீதிச் சோழனின் வரலாற்றின் வழி பெரியபுராணத்தில்

சுட்டிக்காட்டுவார். இவ்வாறு இறைநெறியும் அறநெறியும் கற்காத, கற்று அதன் வழி நிற்காத தலைவனின் செய்கையால் பல்வேறு தீமைகள் வருவதோடு மக்களின் பல்வேறு செல்வங்கள் அவர்களை விட்டுப்போகும். இதனால் இத்தகைய தலைவன் காலனை நேர் ஒப்பவன். தலை வர்கள் என்று கூறிக்கொள்பவர்கள் திருமூலர் குறிப்பிடும் செய்திகளைச் சிந்தித்தல் நலம். தவ நெறியிலும் அறநெறியிலும் நில்லாது, ஆராய்ச்சி அறிவின்றி நாளும் தங்களைச் சார்ந் துள்ள மக்களின் நலன்களைக் கொல்லாது அவற்றை வாழ்விப்பதனைச் சிந்தித்தல் வேண்டும்.

அரிவற்ற பெருவார்வஜக்குரிய நெறி

நாம உண்ணும் உணவெல்லாமே அமுதமென்றே போற்றப்படும். உயிர் வாழ்வுக்கு இருக்கை யாயமைந்த உடலைக் காப்பதாலே அது அவ்வாறு புகழப்பெற்றது. இத்தகைய உணவமுதை நாக்கு சுவைத்து இன்பம் காண்கிறது.

இதற்கும் மேலான இன்பம் தருகின்ற அருளமுதம், அன்பமுதம், அறிவமுதம் என்றெல்லாம் இலக்கிய நூல் இயம்புவதையும் சுவைக்கின்றோம். இந்த அமுதம் மட்டும் இறையுணர்வால் உயிரே சுவைப்பதால் இது தனிச்சிறப்பைப் பெறுகின்றது.

இதுவே நினைக்கும்தோறும் நெகிழச்செய்கின்றது. இப்படி உயிரால் சுவைக்கும் அமுதை என்றென்றும் பெறுவதால் மனிதவுடம்பு அழியாமல் நூறு கோடி ஆண்டுகள் வாழுமென்று திருமூலர் குறிப்பிட்டுள்ளார்.

தத்துவநெறிப்படி ஒருவன் இருக்கையில் அமர்ந்துகொண்டு, கடவுள் நினைவில் மன ஒரு மையோடு தவஞ்செய்யும் பொழுது, நாக்கின் நுனியால் உள்நாக்கென்னும் அண்ணாக்கை உரசி (சிவிறி)க் கொண்டே இருக்கவேண்டும். அப்பொழுது அந்த இடத்தில் அமுதம் சுரந்து உயிரில் இனிக்கும். அங்கே உயிரொளியில் சிவச்செம்பொருளான கடவுள் உறைந்திருந்து அருள்செய்வார். மற்றும் நான்முகன், திருமால், உருத்திரனாகிய மூவரும், முப்பத்து மூவரும் (உருத்திரர் 11, கதிரவர் 12, அசுவனிதேவர் 2, வசுக்கன் 8) தோன்றி வந்து போற்றுவர். இவ்வாறு மனிதன் அமுதம் நுகர்வதால் உடம்பு ஒளிவடிவாகி அழியாமல் நூறுகோடி (நீண்ட நெடிய காலம் என்பது பொருள்) ஆண்டுகள் வாழ்வான். இதனை,

*"நாவில் நுனியை நடுவே சிவிறிடில்*
*சீவனும் அங்கே சிவனும் உறைவிடம்*
*மூவரும் முப்பத்து மூவரும் தோன்றுவர்*
*சாவதும் இல்லை சதகோடி ஊனே"*

என்ற பாடல்களில் தெரிவித்துள்ளார்.

சைவம் இறைவனை உணர்வாகக் குறிப்பிடுகின்றது. இதனாலேயே இறை உணர்வு, திரு வடி உணர்வு என்ற வழக்குகளை முத்தி என்ற இறைவனை உணரும் நிலைக்குக் குறிப்பிடுவர். உயிர்கள் இறைவனை அடைதல் என்பது இறைவனை உணர்தலையே குறிக்கும் என்றும் குறிப்பிடுவர். இதனாலேயே இறைவனை அடைவதற்கு உரிய பல வழிமுறைகளைக் குறிப்பிடும் சித்தாந்த சைவம், முடிவில் இறைவனை உணர்தலே அவற்றின் இலக்காக இருக்க வேண்டும் என்று குறிப்பிடுகின்றது. சீலம், நோன்பு, செறிவு, அறிவு (சரியை, கிரியை, யோகம், ஞானம்) எனும் நன்னெறி நான்கின் வழி இறைவனை உணர்தலே கடன் என்பதும் சித்தாந்த சைவம் உணர்த்துவது ஆகும். திருக்கோயில் திருத்தொண்டுகள் செய்பவர்களும் இறைவனுக்குப் பூசனை இயற்றுகின்றவர்களும் சிவச்செறிவு முறைகளினால் (யோகம்) இறைவனை எண்ணு

கின்றவர்களும் அறிவு வழிபாட்டினால் இறைவனை ஆராய்ந்து அறிகின்றவர்களும் அடைய வேண்டியது இறை உணர்வே என்பது சைவர்கள் நினைவில் கொள்ள வேண்டியது ஆகும்.

சித்தாந்த சைவம் குறிப்பிடும் இறை உணர்வு என்பது உயிர் தனது அறிவினாலே அல்லது தனக்குப் பொருத்தப்பட்டிருக்கும் கருவிக் கரணங்களினாலோ அடையக்கூடிய உணர்வு அல்ல என்பதனைச் சைவம் துல்லியமாகவும் நுட்பமாகவும் குறிப்பிடுகின்றது. இறை உணர்வினை, “உலகெலாம் உணர்ந்து ஓதற்கு அரியவன்” என்று சேக்கிழார் பொதுவாகக் குறிப்பிடினும் அது இறைவனே அளிக்கக்கூடிய, உயிர்கள் செவ்வி அடைந்தபோது தானே தேடி வருகின்ற நுண் உணர்வு என்பதனை, “நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே” என்று தேனினும் இனிய திருவாசகத்தில் மணிவாசகர் நுட்பமாய்க் குறிப்பிடுவார். இறை உணர்வு மாந்தர்கள் உடலுக்கு வெளியேயும் உடலுக்கு உள்ளேயும் கொண்டிருக்கின்ற சாதாரண உயிரின் கருவிக் கரணங்களால் உணர இயலாது என்பதனை, “உணர்வு சூழ் கடந்த ஓர் உணர்வே” என்று திருவிசைப்பாவில் திருமாளிகைத் தேவர் குறிப்பிடுவார். பசு எனப்படும் உயிரின் கருவிக் கரணங்களைப் பதி எனப்படும் இறைவனின் சிவக் கரணங்களாக மாற்றினாலேயே அந்நுண்ணிய உணர்வினை பெற இயலும் என்று மெய்கண்ட நூல்கள் குறிப்பிடுகின்றன.

நுண்ணிய இறை உணர்வைப் பசுக்கரணங்களின் துணைக்கொண்டு உயிர் தம் முயற்சியினால் மட்டும் பெற இயலாது என்றும், அதற்கு இறைவனின் திருவருள் துணை நிற்க வேண்டும் என்றும் சித்தாந்த சைவ மெய்கண்ட நூல்கள் குறிப்பிடினும் உயிரை இறைவனின் திருவருளைப் பெறும் நிலைக்குக் கொண்டு செல்வதற்கு முதற்றுணையாக இருப்பவை உடலுக்கும் உயிருக்கும் இருக்கும் கருவிக் கரணங்களே ஆகும். உடலில் இருக்கும் கண், காது, மூக்கு, வாய், மெய் என்ற புறக் கருவிகளின் வழியே உயிர் பல்வேறு வகையான உலக அறிவையும் இறை அறிவையும் பெறுகின்றது. உயிருக்குப் பொருத்தப்பட்டிருக்கும் மனம், சித்தம், புத்தி, மனவெழுச்சி எனப்படும் உட்கருவிகளின் வழியே உயிர் உலகையும் இறைவனையும் அறிகின்றது. பின்பு இறைவனின் திருவருளைக் கொண்டே அவற்றின் உண்மை நிலைமையை உணருகின்றது. எனவே இறை உணர்வைத் தானே தன் முயற்சியால் உயிர் உடம்பைக் கொண்டும் கருவிக் கரணங்களைக் கொண்டும் பெற இயலாவிடினும் அதைப் பெறுவதற்கு உரிய வாயிலாக கருவிக் கரணங்கள் அமைகின்றன. இதனாலேயே உயிர் உடலோடு உலகில் வாழும் காலத்து உணர்வு பெறுதல் பற்றியும் உணர்வு பேணப்படுதல் பற்றியும் அருளாளர்களால் வலியுறுத்தப்படுகின்றது.

தமிழ்ச் சிவ ஆகமமாகத் திகழும் திருமந்திரத்தில் உயிர்கள் உணர வேண்டிய பல நிலையாமைகளைத் திருமூலர் குறிப்பிடுகின்றார். உடல் நிலையாமை, செல்வம் நிலையாமை, இளமை நிலையாமை போன்றவற்றைக் குறிப்பிடும் திருமூலர், உயிர் நிலையாமை என்று குறிப்பிடும் போது உணர்வு நிலையாமை என்பதனைப் பற்றியும் குறிப்பிடுகின்றார். இறை உணர்வைப் பெறும் முயற்சியில் உயிரின் உணர்வு அழிவதற்கு முன்பு அவ்வுணர்வைப் பெற ஆவன செய்தல் வேண்டும் என்கின்றார். இறை உணர்வைப் பெறுவதற்கு வாயிலாக இருக்கின்ற புறக் கருவிகளான கண், காது, மூக்கு, வாய், மெய் என்பனவும் அகக் கருவிகளாக இருக்கின்ற மனம், சித்தம், புத்தி, மனவெழுச்சி என்பனவும் கலங்கி, சோர்ந்து அழிவதற்கு முன் அவற்றை இறைவனை உணர்வதற்கு முழுமையாகப் பயன்படுத்திக் கொண்டு அவற்றைச் சிவக் கரணங்களாக மாற்றுதற்கு இறைவனின் திருவருளை வேண்டி நிற்பனவாகச் செய்தல் வேண்டும் என்கின்றார் திருமூலர்.

இறைவனுக்கு இக்கருவிக் கரணங்களை ஆளாக்கி விட்டுவிட்டால் இறை உணர்வு இறைவனின் திருவருளால் தானே வந்துகூடும் என்கின்றார் திருமூலர். நாளும் நம்மை உலக மயமாகவே செலுத்திக் கொண்டிருக்கும் கருவிக் கரணங்கள் அல்லது புலன்களைச் செம்மை படுத்தாவிட்டால் அவை நம்மைப் படுகுழியில் தள்ளிவிடும் என்றும் வயது போனபிறகு அவற்றைத் திருத்திக் கொள்ளலாம் என்று எண்ணும்போது அவை வலுவிழந்து விட்டிருக்கும் என்றும் குறிப்பிடுகின்றார். இதனையே, 'ஒண்ணுளே ஒன்பது வாசல் வைத்தாய், ஒக்க அடைக்கும்போது உணரமாட்டேன்' என்று திருநாவுக்கரசு அடிகளும் குறிப்பிடுவார். உடலில் உள்ள ஒன்பது வாயில்களும் செயல் அற்றுப் போவதற்கு முன்னமே உன்னை உணரும் வகையினை எனக்கு அருளுவாய் என்று இறைவனை உருகி நைவார் திருநாவுக்கரசு அடிகள்.

ஐம்புலன்களும் ஐம்பொறிகளும் சிறப்புடன் செயல்படுவதனால் செருக்கித் திரியும் மாந்தர், அகவை கூடி உடல் தளர்ச்சியுற்று வாழ்வின் இறுதிக் காலத்தில் இருக்கும் போது கண் பார்வை குறைந்தும் காது திமிர் ஏற்பட்டுக் கேளாமலும் மூக்கு அதன் முகரும் வல்லமையை இழந்து எதையும் முகர முடியாமலும் நாவானது சுவை தெரியாமலும் பேசுவதற்கு வாய் இயலாமலும் உடலானது கிடந்தக் கிடையாயும் ஆகிவிடும் என்கின்றார். மனம், சித்தம், புத்தி, மனவெழுச்சி சோர்வு உறுவதனால் எதனையும் சிந்திக்க இயலாமல் போக அறிவும் அழியும் என்பார். இந்நிலையில் உயிர் உணர்வும் செயலற்றுப் போக இறை உணர்வே, 'அஞ்சாதே, யாம் உனக்குத் துணையாக உள்ளோம்' எனத் துணை நிற்கும் என்கின்றார் திருஞானசம்பந்தப் பெருமான். வாழுங்காலத்து கருவிக் கரணங்களை இறை உணர்வைப் பெறுவதற்குத் தயார் செய்யாத உயிர்களுக்கு இறை உணர்வுத் தோன்றித் துணையாகாது என்றும் அவ்விறுதி வேளையில் இறை உணர்வைப் பெற முயலுதலும் முடியாத ஒன்று என்றும் திருஞானசம்பந்தர் குறிப்பிடுகின்றார்.

இதனையே,

***"தழைக்கின்ற செந்தளிர்த்து அண்மார் கொம்பில்,***
***இழைக்கின்றது எல்லாம் இறக்கக் கண்டும்,***
***பிழைப்பின்றி எம்பெருமான் அடி ஏத்தார்,***
***அழைக்கின்றபோது அறியார் அவர் தாமே"***

என்று திருமூலர் குறிப்பிடுகின்றார். அதாவது கண்களுக்குக் குளிர்ச்சியைத் தருகின்ற பூங்கொம்பில் தளிர், தழை, பூ முதலாகத் தோன்றி அவற்றால் தோற்றுவிக்கப்படுகின்ற பலவும் அவ்வாறு தோன்றுகின்றபடியே நிலைத்து நிற்காமல் அவற்றின் நிலை மாறி, தோற்றம் மாறி அழிகின்றதைக் கண்டும் அறிவில்லாதவர் உயிர் பிழைப்பதற்கு வழியைக் காண முயலாது, திருவடி உணர்வினைப் பெறுவதற்கு இறைவனைக் கருவிக் கரணங்களால் வழிபடமாட்டார்கள். கருவிக் கரணங்கள் நன்றாய் இருக்கின்றபோது பிறகு பார்த்துக் கொள்ளலாம் என்று வாளாவிருப்பர். இவர்களைப் பெருமான் தன் திருவருளை அளிப்பதற்கு அழைக்கும்போது அதனை உணர்தற்கு உரிய உணர்வு உயிரிடத்தில் இன்றி அல்லல் உறுவார்கள் என்கின்றார்.

இறைவனை உணர்வதற்குக் கொடுக்கப்பட்டிருக்கும் கருவிக் கரணங்கள் இறை உணர்வு பெறுவதற்கு வாயில்கள் என்றும் அவற்றைச் சிவக் கரணங்களாக மடை மாற்றம் செய்வதற்கு நாளும் பாடுபடவேண்டும் என்பதனை மாந்தர் உணர வேண்டும் என்று திருமூலர் குறிப்பிடுகின்றார். கருவிக் கரணங்கள் செயல் இழந்து சோர்ந்து அழியும் முன்னர் அவற்றை இறை உணர்வு பணிக்கு ஈடுபடுத்துங்கள் என்கின்றார். இறைவனின் திருமேனியைக் காணவும் இறைவனின் புகழைக் கேட்கவும் இறைவனின் பூசனைப் பொருட்களின் மணத்தை முகரவும் இறை

வனின் புகழைப் பேசவும் இறைவனை உணர்த்தும் சமயச் சின்னங்களை மெய்யினில் விரும்பி அணியவும் சிவ நற்செயல்களைச் செய்யவும் நாளும் உழையுங்கள் என்று திருமூலர் குறிப்பிடுகின்றார். இப்படிச் செய்வோமானால் 'திருவடி உணர்வினை உணரும் நிலை கிட்டும்' என்பது திருமந்திரம் உணர்த்தும் படிப்பினையாகும்.

**தொகுப்புரை**

வாழ்க்கையினை எவ்வகையில் நெறிப்படுத்தி வாழவேண்டும், நெறிப்பட்ட வாழ்வில் எவ்வகையில் மகிழ்வையும் நிறைவையும் தக்கவைத்துக்கொள்ள வேண்டும் என்பதனைத் திருமந்திரம் விளக்கியுள்ளது.

இறைவனைச் சென்று அடைதற்கு உரிய எளிய வழி குருவை வழிபடுதலால் கிட்டும். பிறன்மனை நோக்காத பேராண்மையை ஆடவர் பெறல் வேண்டும். காக்கை தன் இனத்தைக் கூவி அழைத்துக் கலந்து உண்பது போல், சக மனிதர்களோடு கலந்து உண்ணல் வேண் டத்தக்கது. கற்றவர்களுக்கு மட்டுமே பேரின்பம் வாய்க்கும். கேள்விச் செல்வமே மனிதர்களுக்கு உற்ற துணை. மிகுந்த காமமும் கள்ளுண்டலும் கீழோர் என்று அடையாளம் காட்டும். விரும்பியவாறு ஆண் அல்லது பெண் குழந்தை பெற்றுக் கொள்வதற்குரிய மூச்சுப்பயிற்சி முறை, குழந்தைகள் குருடாய், ஊமையாய், முடமாய்ப் பிறப்பதற்குரிய காரண விளக்கம், திருக்கோயில் வழிபாட்டின் இன்றியமையாமை முதலான பல செய்திகளைத் திருமந்திரம் வழங்கியுள்ளது.

---

## நாவலரின் ஆதங்கம்

ஈழத்திரு நாட்டில் சைவத்தையும், தமிழையும் வளர்ப்பதற்காக அயராது பணியாற்றியவர் யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுக நாவலர் பெருமான். தனக்குப் பின் இப்பணியை யார் செய்வார்கள் என்னும் ஆதங்கம் நாவலர் பெருமானுக்கு இருந்தது.

"நான் உயிருடன் இருக்கும் போதே உங்களுக்காக ஒரு சைவப் பிரசாரகரைத் தேடிக் கொள்ளுங்கள். இன்னும் என்னைப் போல் படித்தவர்களும் சன்மார்க்கர்களுமாய் அனேகர் வருவார்கள். ஆனால் உங்களுடைய வசவுகளைக் கேட்டுக் கேட்டுக் கைமாறு கருதாது சம யத்தைப் போதிக்க என்னைப் போல் ஒருவரும் வரார். எனக்குப் பின் சைவ சமயம் குன்றிப் போகுமென்று பலர் சொல்கிறார்கள்".

யாழ்ப்பாணம் சைவப் பிரகாச வித்தியசாலையில் தான் ஆற்றிய இறுதிப் பிரசங்க முடிவிலே சைவப் பொதுமக்களை விளித்துத் தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தினார் நாவலர் பெருமான்.

**நன்றி : அகில இலங்கை சபை மாநாட்டுத் தலைமைப் பேருரைகள்**
**- யாழ். சைவ பரிபாலன சபை.**

## ஈழத்தில் ஆதீனம் அமைத்த
## ஸ்ரீமத் சுவாமிநாத தம்பிரான் சுவாமிகள்

சித்தாந்த சைவம் மிக மிகத் தொன்மையானது. அதன் தொன்மைக்கும், அது பரந்து நிலவிய தன்மைக்கும் சிந்துவெளி நாகரிக ஆராய்ச்சி முடிவுகளும் உறுதியளிக்கின்றன. சைவ நெறியில் மக்கள் வாழ்வதற்கும், அதினின்று விலகியிருப்போருக்கு உய்வுநெறி காட்டுவதற்கும், உறுதிதுணையாய் இருப்பவை சைவ ஆலயங்கள், சைவப் பள்ளிக் கூடங்கள், சைவ ஆதீனங்கள் என்பன. ஆதீனங்கள் பக்தியை, பண்பை வளர்க்கவும், பள்ளிக்கூடங்கள் அறிவை வளர்க்கவும் பெரிதும் உதவுவன.

முதலாவது ஆலயம் எங்கே எப்போது கட்டப்பட்டது என அறுதியிட்டுக் கூறமுடியாது. எனினும் பல்லாயிரம் வருடங்களுக்கு முன்பே அது இருந்தது என்பதை யாவரும் ஒப்புக்கொள்வர். முதலாவது சைவப் பாடசாலை கல்லால் மர நிழலின் கீழ் நான்கு மாணவர்களோடு ஆரம்பிக்கப்பட்டது. காலம் எதுவெனக் கணிப்பிட முடியவில்லை. முதலாவது ஆதீனம் பன்னூற்று ஆண்டுகட்கு முன்னர் மதுரையில் தொடங்கப் பெற்ற திருஞான சம்பந்தர் ஆதீனம் ஆகும். இது மங்கையற்கரசியாரின் வேண்டுகோளுக்கிணங்க திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் மதுரைக்கு எழுந்தருளி வந்து தங்கியிருந்ததும், சமணரால் தீ கொளுத்தப் பட்டதுமான மடத்தில் தொடங்கப் பெற்றது. ஆதீன பரம்பரையில் தற்போது பீடாதிபதியாக அருள் ஆட்சி செய்பவர் 292 ஆவது குருமகா சந்நிதானம் ஆவார். மதுரை ஆதீனம் தோன்றிய பின் சைவத்துறை விளங்கும் பொருட்டு அருளாளர்களால் வேறும் பல ஆதீனங்கள் அவ்வப்போது தொடங்கப் பெற்றன. இவற்றுள் திருவாடுதுறை ஆதீனம், தருமபுர ஆதீனம், காஞ்சிபுரம் மெய்கண்டார் ஆதீனம், திருப்பனந்தாள் காசி மடம் என்பன சில.

தமிழ்நாட்டிற் பல்வேறு ஆதீனங்கள் தோன்றிப் பல காலமாகப் பணி புரிந்து வருகின்றன வேயெனினும், தேவாரப் பாடல் பெற்ற திருக்கேதீச்சரம், திருகோணமலையிலுள்ள திருக்கோ ணேஸ்வரம் ஆகிய சிவஸ்தலங்களைத் தன்னகத்தே கொண்டுள்ள ஈழநாட்டில் ஓர் ஆதீனம் இல்லாமை பெருங்குறையாக இருந்தது. சைவத்துக்கும், தமிழுக்கும் தமது உடல், பொருள், ஆவி அனைத்தையும் அர்ப்பணித்துச் சேவை செய்த நல்லை நகர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்களே இக்குறையை வெளிப்படுத்தி மனம் மிக வருந்தினார்கள்.

ஈழத்துச் சைவ நன் மக்களின் தவப் பயனாக 1966 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணத்தில் நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீனத்தை ஸ்ரீமத்சுவாமிநாத தம்பிரான் ஸ்வாமிகள் நிறுவினார்கள். இவர்கள் மதுரை திருஞானசம்பந்தர் ஆதீனத்தின் மகாசந்நிதானத்தைக் குருவாகப் பெற்று மந்திரோபதேசமும காஷாயமும் வாங்கிக் கொண்டார்கள்.

தம்பிரான் ஸ்வாமிகள் 1977 ஆம் வருடம் ஆவணி மாதக் கார்த்திகை நட்சத்திரத்தில் நல்லை ஆதீனக் குரு முதல்வராக அபிஷேகம் செய்து ஸ்ரீலஸ்ரீ ஸ்வாமிநாத தேசிக ஞான சம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள் எனத் திருநாமம் கொண்டார்கள்.

சித்தாந்த வித்தகர் பிரம்மஸ்ரீ செந்திநாத ஐயர், இலக்கணப் பேரறிஞர் வித்துவான் கணேச ஐயர் ஆகியோரது பேரரான பிரம்மஸ்ரீ செல்லையாக் குருக்கள், கனகாம்பாள் அம்மை ஆகியோருக்கு மகனாக யாழ்ப்பாணம், வண்ணார் பண்ணையில் பிறந்தவர் சிவசுப்பிரமணிய ஐயர், இவர் வண்ணை வைத்தீஸ்வர வித்தியாசாலையிலும். யாழ். இந்துக் கல்லூரியிலும் கல்வி பயின்று, தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருதம் ஆகிய மொழிகளில் தேர்ச்சி பெற்றார். கல்லூரியில் பயிலும் காலத்தில் அவரது நாட்டம் புகழ்பெற்ற சங்கர சுப்பையர் சுவாமிகளின் இன்னிசை விரிவுரைகளிலேயே சென்றது. இக்கலையில் அந்நாட்களில்

தன்னிகரற்று விளங்கிய சுவாமிகள் சைவத்தையும், சைவத் திருமுறைகளையும் யாழ்ப்பாண மக்களின் நெஞ்சிற் பதித்தார். இவருடைய பிரசங்கங்கள் எங்கு நடந்தாலும் நிழல் போல் இவரைத் தொடந்து சென்று அனுபவித்து வந்தான் சிறுவன் சிவசுப்பிரமணியன். அவரைப் போல் தானும் கதை செய்யவேண்டும் என்ற பேரவா சிறுவனைப் பிடித்துக் கொண்டது. சிறுவனின் ஆர்வத்தை அறிந்த சுவாமிகள் தமக்குப் பின் இக்கலையிற் புகழபெற்று விளங்கக் கூடியவன் என அவர் உள்ளுணர்வு தெரிவித்தமையினால் மணி ஐயருக்கு தமது சுருதி வாத்தியத்தை வழங்கி ஆசிர்வதித்தார்.

தமது பதினொட்டாவது வயதில் இன்னிசை விரிவுரை நடத்தத் தொடங்கிய சிவசுப்பிரமணிய ஐயர் நாளடைவில் சுவாமிகளின் மறைவினால் ஏற்பட்ட வெற்றிடத்தை நிரப்புவதற்குத் தகுந்தவர் ஆனார். வண்ணை சி.எஸ்.எஸ்.மணி ஐயர் என்ற பெயரில் புகழடைந்த இவர் நாடகம், நடனம், ஓவியம் ஆகிய துறைகளில் சிறந்த விற்பன்னராயிருந்தார். தமது முறைப் பெண்ணான யோகாம்பாள் என்பவரை வாழ்க்கைத் துணையாக ஏற்று முருகானந்த சர்மா என்பவரைப் புத்திரராகப் பெற்றார். மணி ஐயரின் கதாப்பிரசங்கங்கள் பிரபல்யமடைய அவர் மணிபாகவதர் ஆனார். அவரது கதாகாலாட்சேபங்கள் இலங்கையில் மட்டுமன்றி தமிழ்நாடு, மலேசியா, சிங்கப்பூர் ஆகிய வெளிநாடுகளிலும் பெரிதும் மக்களை கவருவதாயிற்று. கந்தபுராண, பெரியபுராண, திருவிளையாடற்புராண பிரசங்கங்களும் இராமாயணம், பாரதம் போன்ற இதிகாசங்களின் தொடர் கதாப் பிரசங்களும் பலப்பல முறைகள் செய்துள்ளார். இராமாயணம் தொடர் பிரசங்கம் 25-40 நாள் வரை நீடிக்கும். இதனை நாற்பது தடவைக்கு மேல் செய்துள்ளார். இவரது இன்னிசை விரிவுரைகளில் திருமுறைகள், திருப்புகழ், அநுபூதி, அலங்காரம், அபிராமியந்தாதி, பிள்ளைத் தமிழ் ஆகிய எல்லாம் பொங்கி வழியும். தத்துவார்த்த விளக்கம் நிறைந்திருக்கும். பக்திச் சுவை நிறைந்த இவரின் விரிவுரைகள் மதுரை திருஞான சம்பந்தர் ஆதீன 291 ஆவது குருமகாசந்நிதானமான ஸ்ரீலஸ்ரீ சோமசுந்திர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய ஸ்வாமிகள் திருவுள்ளத்தில் ஒரு குறிப்பைத் தோற்றுவித்தது. அதன் பிரகாரம் மணி பாகவதர் 1966 ஆம் ஆண்டில் இல்லற வாழ்வைத் துறந்து சந்நிதானத்திடம் மந்திரோப தேசமும், காஷாயமும் பெற்று குருமகாசந்நிதானம் ஆனார்.

நல்லை ஆதீனம் பொருள் வளம் படைத்ததன்று. ஆயினும், அருள் வளம் நிரம்பவுடையது. பணம் இல்லையெனினும் அங்கு பண்பு நிலவுகிறது. ஆதீன சம்பிரதாயங்களைக் கட்டிக் காத்து வருகின்றது. நல்லை ஆதீன முதல்வர் போன்று சமயப்பிரசாரத்துக்காக மன,மொழி, மெய்களால் அரும்பாடுபட்ட ஆதீன கர்த்தரின் ஆதீனப் பணிகள் பெருகிக் கொண்டே வந் தன. ஆதீனத்தில் மூர்த்திகளுக்கு நடைபெறும் நித்திய, நைமித்திய பூசைகளைத் தவிர இலவச சமய தீட்சை, விசேட தீட்சை, உபநயனம், திருமணக் கிரியை, வேதபாராயணம், திரு முறைப் பாராயணம், சமய பாட வகுப்புக்கள், சித்தாந்த வகுப்புக்கள், யோகாசனம் போன்ற னவும், மகேசுர பூசை, மகாநாடுகள், விழாக்கள், யாத்திரிகர்களை உபசரித்தல் முதலியனவும் ஆதீனப் பணிகளுட் சில.

தொடங்கப் பெற்ற ஆதீனம் தொடர்ந்து இருக்க வேண்டுமென்ற பெரு விருப்பு சுவாமிகள் திருவுள்ளத்தில் மிக்கிருத்தலாற் சிறியவர்களும், பெரியவர்களுமான பலரை ஆதீனத்தில் சேர்த்து உணவும், உறையுளும் வழங்கி அவர்களைச் சிவப்பணியில் ஈடுபடுத்த முயன்றார்கள். சுவாமிகள் தெரிந்தெடுத்த சிறுவன் சுந்தரலிங்கத்தை தமது ஞான பரம்பரைக்கு உகந்தவன் எனக் கண்டு 07.04.1977 இல் மந்திரோபதேசம் செய்தார். இவரே இன்றைய ஆதீன முதல்வர். இவர் சிறந்த சிவபக்தர், பண்பாளர், அமைதியாகப் பேசுபவர். பழக இனியவர். பார்வைக்கு எளியவர். இவர் சிவபூசை செய்வதைக் காண்போர் பரவசமடைவர்.

**- ஆறு.திருமுருகன்**

- இலண்டன் அருள்மிகு முத்துமாரி அம்மன் திருக்கோயில் வெளியீடான "சிவயோகம்" மலரில் (2001) வெளிவந்துள்ள கட்டுரை.



பொது ... நூலகம் யாழ்ப்பாணம்

# சுவாமிகள் வளர்ந்த வரலாறு

## - சுயசரிதம்.

நான் 1918 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் வண்ணார் பண்ணை என்னும் இடத்தில் பிறந்தேன். அந்த ஊருக்கே சிறப்பளிக்கும் வகையில் புகழ்பெற்ற ஆலயமாய் அமைந்துள்ள வண்ணை வைத்தீஸ்வரன் ஆலயத்தில் பணியாற்றி வந்தது எனது குடும்பம். நான்தான் முதற் புதல்வன்.

தை மாதம் பூராட நட்சத்திரத்துடன் வெள்ளிக்கிழமை சேரப் பிறந்ததால், குடும்பத்திற்குத் தோஷம் உண்டென்றும், "பூராடம் ஊசாடத் தீரும்" என்ற பழமொழியினையும் ஆராய்ந்து, என்னை வைத்தீஸ்வரன் வாலாம்பிகைக்கு விற்பது எனத் தீர்மானித்தனர் எனது தாய் தந்தையர். அதன்படி பாலாம்பிகை சந்நிதியில் என்னை விற்றார்கள்.

அன்று முதல் தேவியின் திருவடிகளைச் சரணமாகி வளர்ந்தேன். என்தந்தை என் வளர்ச்சி யில் மிக்க கவனம் செலுத்தினார். என்னுடைய ஒழுக்கத்தில் மிகவும் கண்டிப்பாய் இருந்தார். பதினெட்டு வயது வரை என் வீட்டு வாசற்படி தாண்டி அடுத்த வீடு கூடச் செல்ல முடியாது. அவ்வளவு கட்டு திட்டம்.

**கணிதம் கசந்தது**

பள்ளிக்கூடம் போய் வந்ததும் வீட்டில் ஓர் ஆசிரியர் ஆங்கிலம் கற்பிக்க வந்துவிடுவார். காலை 6.00 மணிக்கு சமஸ்கிருதம் பயில ஓர் ஆசிரியரிடம் போக வேண்டும். இத்தகைய முறையில் மிகவும் கவனமாகவும் அதே நேரத்தில் அன்பாகவும் தந்தையார் வளர்த்து வந்தார்.

இளமைக் கல்வியில் கணிதம் கசந்தது. தந்தையார் தவறாது வீட்டிற்கருகிலேயே உள்ள சிவன் கோயிலுக்குக் காலையும் மாலையும் செல்வார்.

எங்கள் வீட்டுக் கிணறு நீர் உப்புத் தன்மையுடையது. ஆகவே காலையும் மாலையும் கோயிலில் சென்று நீர் மொண்டு வருவது என் வழக்கம். தந்தையார் நீர் மொண்டு வரப்போனால் அத்துடன் சுாவமி தரிசனம் செய்தே வீடு திரும்புவார். அந்நேரத்தில் என்னையும் அழைத்துப் போவார். அப்போது கடவுள் பக்தியில் அவ்வளவு ஈடுபாடில்லாத பருவம். தந்தையார் எப்படிப் பூசை செய்கின்றாரோ அதேபோல் கடமைக்காகச் செய்து வருவேன்.

**அடுத்த வீட்டுக் கீதம்**

எனது வீட்டிற்கு அடுத்த வீட்டில் இரு பெண் குழந்தைகளுக்கு சங்கீத ஆசிரிரை வைத்து சங்கீதம் கற்பித்தார்கள். அந்தப் பாடங்களை வீட்டில் இருந்தபடியே ஆர்வத்துடன் கேட்க ஆரம்பித்தேன். எனக்குச் சங்கீதத்தில் நாட்டம் பிறக்க இதுவே காரணமாயிற்று. என் தந்தையார் இதை விரும்பவில்லை. ஆகவே புத்தகத்தில் ஒரு கண்ணும், ஏனைய புலன்களெல்லாம் அடுத்த வீட்டு இசைப் பயிற்சியிலுமாகச் சிறிது காலம் கழிந்தது.

கேள்வி ஞானத்தாலும் இசைத் தட்டு கேட்பதாலும் என் சங்கீத ஆர்வம் வளர்ந்தது. நான் கல்வி கற்றது வைத்தீஸ்வர வித்தியாலயம். சுவாமி விபுலானந்தா, சுவாமி அவினா சானந்தா, சுவாமி சர்வானந்தா, சுவாமி நிஷ்ரேஷ்வரானந்தா ஆகியோரை உபாத்தியாயர்களாக அடையப்

பெறும் வாய்ப்பும் அதன் காரணமாக நல்லதொரு சூழ்நிலையில் அறிவு வளர்ச்சி பெறவும் உதவியது.

**அப்பா ஆசை**

தினசரி பள்ளிக்கூடம் ஆரமிக்கும்போதும் மூடப்படும்போதும் பூசை செய்து தேவாரம் பாடுவது நானே. வித்தியாசாலைச் சாவி என்வசமே இருந்தது. என்னிடம் எல்லோருக்கும் அவ்வளவு நம்பிக்கை. J.S.C. என்னும் பரீட்சையில் சித்தியடைந்து யாழ்ப்பாண இந்துக் கல்லூரியில் மேற் கல்வி பயிலச் சென்றேன். இங்குதான் என் வாழ்வில் ஒரு புதிய திருப்பம் தோன்றியது. வயது ஆக ஆக தந்தையார் என் மீது வைத்திருந்த கெடுபிடிகளைத் தளர்த்தினார். ஆனால் நான் சித்திரம் வரைவதோ பாட்டுப் பாடுதலோ அவருக்கு அறவே பிடிக்காது. இவை இரண்டும் கல்விக்கு இடையூறு செய்யும் என்பது அவர் கருத்து. அத்துடன் நான் ஒழுங்காகப் படித்து அரசாங்க உத்தியோகத்தில் சேர்ந்து உயர் பதவியில் அமர்ந்து ஏராளமாகச் சம்பாதிக்க வேண்டுமென்று கனவு கண்டவர் என் தந்தை. ஆனால் அவர் எண்ணம் இறுதி வரை ஈடேறவில்லை!

பதினெட்டாம் பிராயத்தில் என் உள்ளத்தின் அடித்தளத்தில் புதைந்து கிடந்த அபிலாஷைகள் தலை தூக்கத் தொடங்கின. சங்கீதம் கற்பதில் முனைந்தேன்.

**கதையில் கருத்து!**

எங்கள் வட்டாரத்தில் அடிக்கடி கதாப் பிரசங்கங்கள் நடப்பதால் அதைப் பார்த்து கதையும் பாட்டும் கலந்து குட்டிக் கதாப் பிரசங்கங்களை எனது நண்பர்களுக்கு முதலில் செய்து காட்டத் தொடங்கினேன். கதாப் பிரசங்கத்தில் நான் கருத்துச் செலுத்தக் காரணமாக இருந்தவர்கள் அப்போது புகழ்பெற்று விளங்கிய சங்கர சுப்பையர் சுவாமிகள், சங்கானைச் சுவாமியார் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்களைப் போல் ஏன் நாமும் கதை செய்ய முயலக்கூடாது என்ற எண்ணம் என் உள்ளத்தில் உதித்தது. அதன் செயலாக உருவாகத் தொடங்கியது. எப்படி? பாட்டும் கதையும் நடிப்பும் சேர்ந்துதான்.

இராசுப்பிள்ளை ஓதுவார் என்பவரிடத்தில் சில பண்கள் பயிலும் வாய்ப்புக் கிடைத்தது. இதற்கிடையில் பள்ளிக்கூட நாடகங்களிலும் நடிக்க ஆரம்பித்தேன். நந்தனார், சாவித்திரி, பிரகலாதன் ஆகியவற்றில் நடித்தேன். சங்கீத ஆசிரியர் கலாசாலையை விட்டுப் போனபின் மாணவர்களுக்கு நாடகப் பயிற்சியளிக்கும் பொறுப்பு என்னைச் சார்ந்தது. பாரிஜாத புஷ்பகரணம், கிருஷ்ணர் ஜுனா, அல்லி அர்ஜுனா, சகுந்தலை ஆகியவை நான் பயிற்றுவித்து மேடையேற்றி யவைகளில் குறிப்பிடத்தக்கவை.

நான் மாணவனயிருக்கும் போது இப்படித் தயாரித்த நாடகங்கள் எனக்கு நிறைய புகழைக் கொண்டு வந்தன. என் கலாசாலை அதிபர் காலஞ்சென்ற குமாரசுவாமி அவர்கள் என்னைத் தமது அபிமான புத்திரனாகவே நடத்தினார். என் திறனை உணர்ந்து 2 வருடம் வரை இலவசக் கல்வி அளித்தார்.

கலாசாலைக்கு வந்த பிறகும் தினம் நான்தான் ஆரம்பத்திலும் முடிவிலும் சுவாமிக்குப் பூஜை செய்வேன். தேவாரமும் நானே பாடுவேன். லண்டன் மெட்ரிக் பரீட்சைக்குப் படிக்கும்போது நடைபெற்ற ஒரு சம்பவம் இன்னும் என் நினைவில் நிற்கிறது.

காலஞ்சென்ற தமிழக அரசியல் தலைவர் திரு.சத்யமூர்த்தி அவர்கள் ஒருமுறை நம் கலாசாலைக்கு விஜயம் செய்தார். அவருடைய சொற்பொழிவுக்கு முன் "அந்தணாளன்" என்ற பாடலைப் பாடினேன். கூட்டம் தொடங்கியதும் திரு.சத்யமூர்த்தியைப் பார்த்து சித்திரமாக வரைந்தேன். பிறகு தயக்கத்துடன் அவரை அணுகி அச்சித்திரத்தை நீட்டினேன். அவர்கள் என்னை அடையாளம் கண்டுகொண்டார்கள். "தம்பீ, ரொம்ப நன்னா பாடுறாய்" என்று என் முதுகில் தட்டிக் கொடுத்ததோடு நான் வரைந்த அவரது சித்திரத்தையும் மெச்சி, அதில் தமது கையெழுத்தையும் போட்டுக் கொடுத்தார். கல்லூரித் தலைவர் அதை எங்கள் வகுப்பில் மாட்டி வைத்துக் சிலாகித்தார். இதேபோல் கல்கியவர்களின் பாராட்டையும் 24 ஆண்டுகளுக்கு முன்னரே பெற்றேன்.

என் சங்கீதத்தைக் கேட்டு, அப்போது இலங்கை வானொலி தமிழ்ப் பகுதித் தலைவராயிருந்த திரு சோ.நடராஜா (நவாலி சோமசுந்தரப் புலவரின் புத்திரர்) வானொலியில் பாட முதல் சந்தர்ப்பம் அளித்தார்கள். பிறகு கதை நடத்துவதற்கும் வானொலியில் வாய்ப்புக் கிடைத்தது. பாராட்டும் வரவேற்பும் கலைத்துறையில் என் ஊக்கத்தைப் பெருக்கின.

கொழும்பு தட்டாதெரு சிவசுப்பிரமணிய சுவாமி கோயிலில் "முருகன் திரு அவதாரம்" குறித்து கதை செய்யும்படி பணிக்கப் பெற்றேன். பொது இடங்களில் கதை செய்து பழக்கப்படாத நான் முதல் தடவையாக துணிகரமாகச் செய்தேன். எல்லோருக்கும் பிடித்துவிட்டது. ஒரு கதர்ச் சால்வையைப் பரிசாக அளித்துப் பாராட்டினார்கள்.

பிறகு படிப்பை விட்டு கதை சொல்வதில் கருத்தைச் செலுத்தினோன் ஒரு தடவை வண்ணை வைத்தீஸ்வரன் கோயிலிலே சிவராத்திரியின் போது ஏராளமானவர்கள் கூடியிருப்ப தைக் கண்டேன். கோயில் கணக்கப்பிள்ளையாக அப்போதிருந்த சின்னத்தம்பி என்பவரை நானே அணுகி "விழித்திருப்பவர்கள் பலன் பெற ஒரு கதை சொல்லவா?" என்று கேட்டேன். "சரி" என்றார். உடனே நந்தனார் கதை செய்தேன். எல்லோரும் கருத்தோடு கேட்டதுடன், இன்னும் அபிவிருத்தி செய்யும்படி உற்சாகமளித்தார்கள். ஆனால் உருவத்திற்கு மதிப்புக் கொடுக்கப்படும் இவ்வுலகில் கருத்தைக் கவனிப்போர் அபூர்வம். சிறுவயதில் நான் செய்த கதைகளைக் கேட்டு " பையன் பக்குவப்படவில்லை, பண்படவில்லை" என்று கருதியவர்களும் இருந்தனர்.

என் கதைகளுக்குப் பக்கவாத்தியம் வாசிக்க எல்லோரும் தயங்கியபோது, தன் சொந்த கௌரவத்தையும் பாராது என் கதைக்கு வாசித்து என்னை முதலில் பிரபலப்படுத்தியவர் வித்துவான் காமாட்சி சுந்தரம் அவர்கள்தான். இன்றைய என் புகழுக்கு அவர்தான் காரணஸ்தர் எனக் கூறின் மிகையாகாது. இளம் கலைஞர்களை ஊக்குவிக்கும் நல்ல உள்ளம் படைத்தவர் அவர்.

கதை செய்யப் பக்குவப்படவில்லை என்று கருதி என்னை அழைக்காத இடங்களிலெல்லாம் நானே வலிந்து சென்று கதை செய்து அவர்களின் தவறான எண்ணத்தைத் திருத்தினேன். அப்போது எனக்கு வயது இருபதே. திரு.காமாட்சி சுந்தரம் அவர்களுடைய உதவியால் என் கதைகள் எங்கும் நடைபெற்று வர ஆரம்பித்தன. ஆனால் வருமானம் போதிய அளவு இல்லை. அதை நான் பொருட்படுத்தாது விடாமுயற்சியால் முன்னேறினேன். அப்போது சிவன் கோயில் தேவஸ்தான நாதசுரவித்வானாக இருந்த திரு.கந்தசாமி அவர்களிடம் கூட சங்கீதத்தை மேலும் அபிவிருத்தி செய்து கொண்டு விடாமல் என்னைத் தயார்படுத்தினேன்.

**அரங்கேற்றம்**

சிவன் கோயில் தர்மகர்த்தா பொன்னுச்சாமி செட்டியாரவர்கள் என் வளர்ச்சிக்கு வித்திட்டவர்களில் ஒருவர். சிறுவனாயிருந்தும் எனக்குத் தகுந்த விளம்பரம் செய்வித்து சிறந்த பக்க வாத்தியங்களை ஏற்பாடு செய்து, அவரே மாலையிட்டு என் கதையை ஆவணி மூலத்தன்று சிறந்த முறையில் அரங்கேற்றி வைத்தார்கள். அன்று "பிட்டுக்கு மண்சுமந்த கதை" செய்தேன். பெருங்கூட்டம் வந்திருந்தது. அன்று என் தாத்தாவும் (திரு.கணேசையர்) மறைவாக இருந்து கவனித்தார். கதை முடிந்தது. பாராட்டு மொழிகளை வாசித்தார்கள். வெற்றி வீரனாக வீடு வந்து சேர்ந்தேன்.

வீட்டுப் புறத் திண்ணையில் தாத்தா இருந்தார். என்னை அழைத்தார். அருகில் போனேன். நறுக்கெனத் தலையில் ஒரு குட்டுப் போட்டு என்னையும் என்கதையையும் இகழ்ந்து பேசி, "கதையில் பாண்டியன் கொடுத்த பரிசை சிவன் சவுக்கினால் ஏற்றதைச் சொல்லாமல் விட்டாயே, இப்படியா கதை செய்வது?" என வைத்தார். என் குறைகளைத் திருத்தினார். கற்றது கைம்மண் அளவுதான் என்பதை உணர்ந்து மேலும் ஆய்வு வேலையில் இறங்கி, தமிழின்பத்தில் திளைத்தேன்.

**மீண்டும் நாடகம்**

இந்தச் சமயம் என் நாடகத்திறமையை அறிந்த கலையரசு சொர்ணலிங்கம் அவர்கள் தமது கோஷ்டியில் என்னைச் சேர்த்துப் பிரபல்யப்படுத்தினார். சந்திரஹரி, ஷைலக்,பாமா விஜயம் ஆகிய அவரது நாடகங்களில் நடித்தேன்.

வட்டுக்கோட்டையில் பிரபலமான அந்தணர் குடும்பம் "நாவன்னா" குடும்பம். தமிழ்ப் புலமை, மாந்திரீகம், வைத்தியம் ஆகிய அனைத்தும் ஒரு சேர அமைந்த காலஞ்சென்ற பிரம்மஸ்ரீ அனந்த சுப்பிரமண்ய சர்மா அவர்களே என் வாழ்வின் மற்றொரு திருப்பத்திற்குக் காரணமானவர். அவர்கள் குடும்பத்துடன் தொடர்புகொள்ள என் நாடகமும், நடனமுமே காரணமாயிற்று. அவர் சிறந்த கலையுள்ளம் படைத்தவர். கலைக்குக் கட்டுப்பாடு என்றுமே கூடாது என்ற எண்ணம் படைத்தவர். அவர்கள் குடும்பத்தில் நானும் ஒருவனானேன்.

**கல்லூரிச் சேவை**

"பில்ஹணன்" நாடகம் மூலம் மிகவும் பிரபல்யமடைந்தேன். நானே கதை, வசனம் எழுதி, நானே நடிகர்களுக்குப் பயிற்சி அளித்து, நானே பில்ஹணனாகவும் நடித்தேன். பிறகு "பிளாறோ" என்ற ஆங்கில நாடகத்தைத் தமிழாக்கி வெற்றிகரமாக நடத்தினேன்.

என் நாடக, நடனப் பயிற்சி ஆற்றலை அறிந்த யாழ்ப்பாணக் கல்லூரி ஆசிரியர்கள் கல்லூரியில் உள்ள சங்கீதப் பகுதியின் பொறுப்பை எனக்கு அளித்தனர். பத்து வருடம் அக்கல்லூரியில் அச்சேவை செய்தேன். அக்கல்லூரி மாணவிகள் கலை நிகழ்ச்சிகளில் முதலிடம் பெற்றனர். இதன் மூலம் மாஜி இலங்கை கவர்னர் ஜெனரல் சோல்பரி பிரபுவின் பாராட்டையும் பெற முடிந்தது.

கதை செய்வதையும், கலை வளர்ப்பதையும் என் கண்களாகக் கொண்டேன். இவ்வளவும் எத்தனையோ எதிர்ப்புகளின் மத்தியில் ஆட்டமும் பாட்டும் இழிவாகக் கருதப்பட்ட சூழ்நிலையில் தைரியமாக மேடை ஏறினேன்!.

இப்போதும்கூட நான் நர்த்தன கலாமன்றம் ஒன்றைச் சொந்தமாக நடத்தி வருவதுடன், இலவசமாகவே நடனப் பயிற்சி அளித்து பல நிதிகளுக்கும் உதவி வருகிறேன்.

**பட்டம் பெற்றேன்**

நெடுநாளாக நான் சொந்தப் பக்க வாத்தியம் தயார் செய்ய ஆவலாயிருந்தேன். அன்பினால் "நாவன்னா" குடும்பத்தில் ஒருவானாய் ஒன்றிப் போயிருந்த நான் திரு. அனந்த சுப்பிரமணிய சர்மா அவர்களது புதல்வர்களில் ஒருவரை வயலினிலும், ஒருவரை மிருதங்கத்திலும், ஒருவரை கஞ்சிராவிலும் நன்றாகத் தயார் செய்து ஆறு வருடங்கள் அதே கோஷ்யுடன் வெற்றிகரமாகக் கதை செய்தேன்.

இளைப்பாறிய ஆடிட்டர் ஜெனரலும், அக்கால கல்வி அமைச்சில் நிரந்தரக் காரியதரிசியுமாயிருந்தவருமான **திரு.கே.கனகரத்தினம்** அவர்களது முயற்சியால் தற்போதைய மதுரை சந்நிதானம் அவர்களுக்கு அறிமுகமானேன். அவ்வறிமுகத்தால் இலங்கையின் தலைநகரான கொழும்பிலும் பிரபலமடைய ஏதுவாயிற்று. ஜிந்துப்பிட்டியில் எனது சமய சேவையைப் பாராட்டி அப்போது தலைவராயிருந்த கே.பி.கணபதி அவர்கள் பொன்னாடை போர்த்தி பொற்கிழி வழங்கினார்கள். அப்போதுதான் மதுரை ஆதீனம் "முத்தமிழ் மணி பாகவதர்" பட்டம் அளித்துக் கௌரவித்தார்கள்.

**புலவர் மணி**

பின்னர் மதுரை ஆடி வீதியில் நடைபெற்ற பாராட்டு நிகழ்ச்சியில் சந்நிதானம் அவர்கள் பொன்னாடை போர்த்தி "புலவர் மணி" என்ற பட்டத்தை அளித்துக் கௌரவித்தார்கள்.

சென்ற ஆண்டு முதல் நல்லூர் தேவஸ்தானப் பிரசாரகராக்கி கௌரவித்தார்கள்.
எனது 20 ஆவது வயதிலேயே இல்லற வாழ்வு ஏகிவிட்டேன்.

நடனமும் நாடகமும் செய்ய உடல் நிலை இடமளிக்காததால் கதையிலேயே முழுக் கருத்துச் செலுத்தினேன். கந்தபுராணம், இராமயாணம், மகாபாரதம் ஆகியவற்றை அலசி ஆராய்ந்தேன். சில கதைகளுக்குச் சொந்தமாகவே பாடல்கள் புனைந்தேன். காலப் போக்கில் நல்ல அபிவிருத்தி காணமுடிந்தது. மேலும் இதில் முன்னேற்றம் பெற மலாயா, சிங்கப்பூர் மெய்யன்பர்கள் அளித்துள்ள அமோக ஆதரவு துணை புரிந்துள்ளது.

**நன்றி : நல்லை ஆதீன முதல்வர் நற்சரிதம்**
**2004**

# நல்லை ஆதீன குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் (12.02.1918 - 11.04.1981)

யாழ்ப்பாணம் செந்தமிழும் ஏழிசையும் சைவமும் மக்களால் நன்கு பேணப்படும் புண்ணிய பூமியாகும். காலத்துக் காலம் பல அவதார புருஷர்கள் தோன்றினர். இறையருளால் அவர்கள் ஆசாரம் பேணித் தம்மாலான அரும்பணியாக முத்தமிழையும் சைவத்தையும் வளர்த்து வந்தனர்.

யாழ். வண்ணார்பண்ணையில் அநேக அற்புதமான ஆலயங்கள் அமைந்திருந்தன. பல கல்விக் கூடங்களும் இசை மரபு பேணும் கலா நிலையங்களும் மிகுந்து காணப்பட்டன. இவற்றின் பேறாகவே சைவமும் தமிழும் பிரகாசிக்க வாய்த்தது. வண்ணார்பண்ணையைச் சேர்ந்த வேதியர் குலத்தவரான செல்லையாக் குருக்களும் அவர் தம் தர்மபத்தினி கனகம் பாளும் செய்த முற்றவப்பயனாக வந்தவதரித்தவர் பிற்காலத்தில் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் எனப் போற்றப்பட்டார்.

12.02.1918 இல் அவதரித்த இவருக்குத் தந்தையார் சூட்டிய திருநாமம் சிவசுப்பிரமணியம் ஆகும். இவருக்கு உரிய காலத்தில் குல ஆசாரப்படி பூணூல் தரித்தல் போன்ற மத வைபவங்கள் செய்யப்பட்டன. இவர் தமது ஆரம்பக் கல்வியை வண்ணை வைத்தீஸ்வராக் கல்லூரியிலும், உயர் கல்வியை யாழ். இந்துக் கல்லூரியிலும் கற்றுச் சிறப்புடன் சித்தியெய்தி னார். இவர் தமிழ், ஆங்கிலம்,சமஸ்கிருதம் ஆகிய மும்மொழிகளிலும் நன்கு கற்றுப் பாண்டித் தியம் பெற்றார்.

இவரது பிறப்புடன் இசை ஞானமும் சிறப்பாக அமைந்தது. இவர் தான் கற்ற கல்வியின் பேறாக வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியிலும், யாழ். இந்துக் கல்லூரியிலும் ஆசிரியராகப் பணியாற்றினார். இக்காலத்தில் இவரிடம் சங்கீத ஞானமும், அதற்கேற்ப நல்ல குரல் வளமும் இருந்ததால் இசைப் பேருரையில் சிறந்து விளங்கிய சங்கர் சுப்பையா என்பவரால் கவரப்பட்டார். இதன் பேறாக தமது ஆவலை அந்த மகானிடம் விண்ணப்பித்தார். ஓர் வாலிபர் பூரண தகுதியுடன் இன்னிசைச் சொற்பொழிவில் ஆர்வத்துடன் தன்னை அணுகி யதால் சங்கர சுப்பையர் என்ற பேராசான் அவரை அரவணைத்தார். அவருக்குத் தமது பூரண ஆதரவையும், ஆசீர்வாதத்தையும் தந்து தனது சுருதிப் பெட்டியையும் அன்பளிப்புச் செய்து மகிழ்ந்தார்.

**முயற்சி திருவினையானது**

இவ்வரிய நிகழ்வால் இன்புற்ற சிவசுப்பிரமணியம் இயற்கையாகவே தான் கற்ற கல்வித் திறமையும், இசை ஞானமும், குல மரபுக்கேற்ற பண்பும், நியமந் தவறாத ஒழுக்கச் சீலமும் இறையருளும் நிறைந்து காணப்பட்டார். இவரது இசை ஞானம் மேலோங்கிப் புகழ் பரப்பத் திருவருள் கைகூடியிருந்ததால் சிறந்த ஓர் மகானின் குருவருளையும் பெற்றிருந்தார். இவரது எண்ணக் கருவும் புறச் சூழலும் இறைவனின் ஆசியும் நன்கு உதவியதால் தமது பதினெட்டா வது வயதில் சங்கீத கதாப் பிரசங்கத்தை இறையர்ப்பணஞ்செய்தார்.

தமது குருவான சங்கர சுப்பையாரின் பூரண ஆசியும், இசை மீது தணியாத பற்றும், இவைன் சித்தப்படி கதாப்பிரசங்கத்தில் தன்னை அர்ப்பணித்தபோதும் குருவின் மறைவின் பின்பே தம்மாலான திறமையை வெளிப்படுத்தினார். இவரின் நன்முயற்சி நன்கு பிரகாசித்தது.

நற்பெயரும் புகழும் இவரை நாடியது. யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை சி.எஸ்.எஸ். மனிஜயர் என்னும் சிறப்பான பிரசங்க மேதையாக விளங்கினார்.

### சிறந்த கதாப்பிரசங்க மேதை

இவர் எதை விரும்பி இறைவனிடம் வேண்டினாரோ, அதே சிறப்பு வாய்ந்த பணியாக இவருக்கு அமைந்தது. இம்மண்ணிலுள்ள ஆலயப் பெருவிழாக்கள், சமய நிகழ்வுகள் போன்றவற்றில் இவரது தெவிட்டாத இசைப் பேருரை, சமயநெறி, சங்கீத மரபுக்கு உரிய வரைவிலக்கணப்படி அமைந்தது. இச்சிறப்பில் பாமர மக்கள் முதல் பாவலரும் நாவல்லோரும் எதுவித பேதமுமின்றி மூழ்கித் தமது நெஞ்சில் நன்கு பதித்தனர். இதனால் இவரது அற்புதமான பிரசங்கத்தை மேலும் மேலும் கேட்டு இன்புற முற்பட்டனர். ஏற்கனவே இவரது பிரசங்கம் நடைபெறும் விபரங்களைத் துண்டுப்பிரசுரம் மூலம் அறிந்து அங்கு மக்கள் கூட்டம் அலை மோதும்.

இவரது பிரசங்கம் முடியும் வரை யாவரும் அமைதியுடன் செவிமடுத்து இன்புறுவர். இவரது இசைச்சொற்பொழிவில் சமய நெறிமுறை, ஆழ்ந்த ஆன்மீகக் கருத்துக்கள், இனிய இசையோசை யாவும் ஒருங்கமைத்து பிரகாசித்ததால் இவர் “மணிபாகவதர்” என அழைக்கப் பட்டார்.

இவரது மணப்பருவம் வந்ததால் தமது முறைப்பெண்ணான யோகம்மாள் என்னும் பெண்ணில் நல்லாளுடன் இல்லற வாழ்வில் இணைந்தார். நல்லறமாம் இல்லற வாழ்வின் பயனாக இவர்களுக்கு ஓர் ஆண்மகவு கிடைத்தது. இத்தம்பதியினர் இல்லற தர்மத்தை இனிது பேணி இன்புற்றனர். தமது வாழ்வாதாரமாக சமய கதாப் பிரசங்கம் செய்வதையே பிரதான தொழிலாக மேற்கொண்டார்.

யாழ். மண்ணில் இவரது சங்கீத கதாப் பிரசங்கம் நிகழாத இடமேதுமில்லை என்றபடி பட்டி தொட்டியெங்கும் இவரது இசைப் பேருரை ஒலித்தது. இலங்கையின் பல பாகங்களிலும் இவர் தமது இசைப் பேருரையை விரிவாக்கினார். இதனால் இவரது பணியின் சிறப்பு மேலோங்கித் திக்கெட்டும் பரவியது. இதன் பேறாக இந்தியா, சிங்கப்பூர், மலேசியா போன்ற வெளிநாடுகளில் வதியும் தமிழ் அன்பர்கள் இவரை இன்முகத்துடன் வருந்தி அழைத்தனர். பக்தர்களின் அழைப்பையேற்ற மணிபாகவதர் அவர்கள் அவ்விடங்களில் மகாபாரதம், இராமாயணம், பெரியபுராணம், கந்தபுராணம், திருவிளையாடற்புராணம் போன்ற சமய இதிகாசப் போதனையை தொடர் சொற்பொழிவாக நிகழ்த்தி அம்மக்களின் அக மகிழ்வையும், எம் மண்ணின் பெருமையையும், நற்புகழையும் தனதாக்கிக் கொண்டார். இதனால் இறைசிந்தனை இவர் சென்ற இடமெல்லாம் பரவியது.

### பிரசங்கம் மூலம் சமயப் பணி

எம் மண்ணின் மீது சைவத்தையும், தமிழையும் நெறி தவறாது வாழ வகை செய்த நாவலர் பெருமான், இந்திய மண்ணில் பல ஆதீனங்கள் சைவப் பணியாற்றுவதுபோல் ஈழத்தில் ஓர் ஆதீனம் இல்லையே எனத் தமது இறுதிக் காலத்தில் வருந்தினார். தமது தீர்க்க தரிசனத்தின் பேரில் தமது கவலையை நீக்கும் அருளாளர்கள் பிற்காலத்தில் தோன்றிச் சைவமும் தமிழும் பிரகாசிக்க வைப்பர் எனவும் கூறியிருந்தார்.

மணிபாகவதரின் ஆழ்ந்த ஆன்மீகக் கருத்துக்களும் இசை மரபும் நன்கு புலப்பட ஆற்றிய பிரசங்கம் மக்கள் இறைவனை ஒலி வடிவிலும், ஒளி வடிவிலும், இசை வடிவிலும் கண்டு மகிழும் அகப் பொலிவை ஏற்படுத்தி இறையருளின் உந்துசக்தியும் இவ் அற்புதமான

இசையுடன் கூடிய சொற்பிரயோகமும் சைவ சமயத்தின் எழுச்சியையும் மனவுணர்வையும் மக்களிடையே பதிய வைத்தன.

### துறவமும் ஆதீனமும்

இவ்வெழுச்சியான காலத்தில் தம் வாழ்வைச் சிவப்பணிக்கே அர்ப்பணிக்க மணிபாகவதர் முன்வந்தார். சிவசிந்தனை மேலிட 1966 இல் துறவறம் பூண்டு மதுரை திருஞானசம்பந்தர் ஆதீனத்தின் 291 ஆம் குரு மகாசந்திதானமாக விளங்கிய சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமி களிடஞ் சென்று பணிந்தார். இதன் பேறாகக் குருமகா சந்நிதானம் இவருக்கு மந்திர உபதேசஞ் செய்து காவியுடையும் தந்து ஆசிகூறி வாழ்த்தினார். குரு இவருக்கு ஸ்ரீமத் சுவமிநாதத் தம்பிரான் சுவாமிகள் எனத் திருநாமஞ் சூட்டி வழியனுப்பி வைத்தார்.

குருவருள் பெற்று பூரண அகப் புறச் சிவப்பொலிவுடன் தாயகத்தை வந்தடைந்த ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள் ஈழநல்லூரில் அரியதோர் ஆதீனத்தை நிறுவினார். நல்லை நகரில் நல்லாசி புரியும் கந்தப் பெருமானின் மேற்கு வீதியில் சைவ சமயம் வளர, சமய நெறியான கருணை நிழல் பரப்பி மக்களுக்கு அரிய சேவைக்கெனவே 1966 இல் சுவாமிகள் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம் என்னும் திருப்பெயருடைய ஆன்மீக நிறுவனத்தை ஆரம்பித்தார். நல்ல புனிதமான சூழலும், செந்தமிழும், சைவ சமயமும், முருகபக்தியும் நல்லூரில் நிறைந்திருந்தது. இவற்றை மேலும் வளர்த்து முன்னெடுத்துச் செல்ல வலிமை மிக்க வழிகாட்டி இல்லையேயென ஏழ்மை மனத்துடையோர் ஏங்கிப் பரிதவித்த இருள் சூழ்ந்த காலமது. இக்காலத்தில் புனிதமான இறையருட் சேவைக்கென ஓர் ஒப்பற்ற ஆதீனம் அமைத்து அரும்பணியாற்றவென ஒரு விடிவெள்ளியாகத் தோன்றி குருமணி சுவாமிகள் இறையருள் நாடித் தம்பணியை மேற்கொண்டார். இதனால் நாவலர் பெருமான் ஏற்கனவே கண்ட கனவு நனவானது.

நல்லை ஆதீனத்தின் பிரதான நோக்கம் தூய சைவ நெறியை மென்மேலும் விரிவடையச் செய்து மக்களின் அறியாமையைப் போக்கி அவர்களின் சித்தத்துள் சிவசிந்தனையை வளர்ப்பதாகும். இதனால் குருமணி சுவாமிகள் தமது சிவ சிந்தனையையும், மெய்யுணர்வையும், பிரயாசத்தையும் பிரயோகித்து தம்மாலான கூடிய பணியை நிலைநாட்டினார்.

நாவலர் பெருமான் நல்லை நகரில் அவதரித்துத் தமது சீரிய சிவநெறியை வண்ணையில் ஆரம்பித்துத் தமது புகழை யாவருக்கும் அர்ப்பணித்தார். சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள் வண்ணையிலே அவதரித்து நல்லை நகரில் தம்பணியாற்றி தமக்கெனவோர் முத்திரை பதித்து யாழ். மண்ணை அலங்கரித்தார். நாவலர் பெருமானின் நிறைவேறாத கனவை நனவாக்கி நல்லை நகரில் ஆதீனம் அமைத்து எளிய முறையில் அரும்பணியாற்றி அகமகிழ்ந்தார்.

துறவறம் மேற்கொண்டு ஆதீனப் பணியாற்றுங்கால் அருள் வளம் நிறைந்து காணப்பட்டாலும் பொருள் வளம் குன்றியிருக்கும் இந்த நேரத்தில் சுவாமிகள் இறைவனையே வேண்டுவார். "வேண்டுவார் வேண்டுவதை ஈவான் கண்டாய்" என்றவாறு இறையருள் கைகூடப் பொருள் மிகுந்து அருள் இன்பம் தேடுவோரும் அறவாழ்வு வாழும் தூய நெஞ்சுடையோரும் அள்ளி அள்ளி வழங்கும் அன்பளிப்பால் அன்றாட ஆதீனப்பணிகள் சிறப்புற நடைபெற்றன. மேலும் அரச நன்கொடைகளும், பிற உதவிகளும் அவ்வப்போது கிடைத்தன. இத்தளர்வில்லாத பணிச்சிறப்பினால் நல்லை ஆதீனம் யாழ். மாவட்டத்தில் மட்டுமன்றி அகில இலங்கையில் சிறப்புடன் பணியாற்றும் ஒரே சைவ ஆதீனமாக அமைந்தது.

இவ்வாதீனம் நெடுங்காலத்தின் முன் பொதுமடமாக அறப்பணியாளரினால் அமைக்கப்பட்ட பழைய கட்டடத்தில் ஆரம்பிக்கப்பட்டது. சமய வளர்ச்சி கருதியே அமைந்த ஆதீனத்தின்

விரிவான சேவைகளுக்கு ஏற்றதாக அமையவில்லை. சமய, கலை, கலாசார விழாக்கள் அடிக்கடி நடைபெறும் மையமாக இவ்வாதீனம் அமைந்ததால் குருமணி சுவாமிகள் அரச அதிகாரிகளுடன் கொண்ட அயராத தொடர்பினால் இன்றைய அழகான கலாசார மண்டபம் தோற்றுவிக்கப்பட்டது.

நல்லூர் சைவ மணங்கமழும் புனிதமான புண்ணிய பூமி. அதற்கமைவாகத் தோன்றிய அறப்பணி நிலையம், அதனை நெறிப்படுத்தும் குரு முதல்வரின் தூய பணி யாவும் ஒருங்க மைந்தமை எம் மண்ணுக்கே பெருமை சேர்த்தது. நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனம் சைவநெறியின் ஆரம்ப நிகழ்வுகள் சிறப்புடன் அமைவதன் பேரில் குருமணியும் சீடர்களும் அதிகாலை எழுந்து ஆசாரம் பேணி நீராடித் தம் பணி ஆரம்பிக்க முன்பே திருப்பள்ளியெழுச்சியும் தொடர்ந்து இனிய திருமுறைகளும் அரிய பண்ணிசையாக அச்சூழலைத் துலங்க வைக்கும். ஐந்து மணிக்கு ஆதீனப் பூசை மண்டபம் நறுமணமும் இனிய பாமாலைகளும் அருள் மணம் பொலிவும் பூசைகளும் யாவரையும் மெய்சிலிர்க்க வைக்கும். விசேட காலங்களில் குருமணி பூசை நிறைவுகண்டதும் கந்தன் ஆலய வீதியில் திருமுறைகளை ஓதும் பஜனை தொடரும். குருமணியின் வழிகாட்டலில் சிறுவர் முதல் முதியவர் வரை குறிப்பாகப் பாடசாலை மாணவர்கள் புடைசூழ பஜனை தொடரும். இப்பஜனையில் குருமணியின் இசைஞானமும் இராகம் மாறாத பண்ணிசையும் பிசகாத தாள ஒலியும் யாவரையும் ஈர்க்க ஐம்பதுக்கும் மேற்பட்ட தொண்டர்களின் பவனி கண்கொள்ளாக் காட்சியாகும்.

சமயநெறி சிறக்க ஆதீனம் வளர தம்பணி ஏற்ற குரு மகாசந்திதானம் தமது குரல் வளம் சிறந்த தொண்டையால் தொண்டு செய்து உள்ளூரிலும் வெளியூரிலும் கடல் கடந்தும் பணியாற்றியதால் தமது வருவாயை உதவினார். மேலும் இவ்வாதீனத்தில் இலவசமான உடல் வலுவுக்கேற்ற யோகாசன வகுப்புகள், பண்ணிசை வகுப்புகள், சமய வகுப்புகள் மற்றும் பெரியோர்களுக்கான சமய போதனைகள், கருத்தரங்குகள் யாவும் நடத்தப்படுகின்றன. இம்மண்டபம் சமயவிழாக்கள், கலை, கலாசார விழாக்கள், சமய, இலக்கிய நூல் வெளியீடுகள், உள்ளூர், வெளியூர் சமயப் பெரியார்களின் கருத்தரங்குகள், சைவ மாநாடுகள் போன்ற புனிதப் பணிகளுக்கேற்ற உகந்த இடமாக இருப்பதால் யாவரும் ஒன்று கூடும் உயர் பீடமாகவும் அமைந்துள்ளது.

இவ்வாதீனத்தின் சிறப்பான பணிகளில் தம் சிந்தனையைச் செலுத்தி பள்ளி மாணவர்கள் குருமுதல்வரின் இனிய சுபாவத்திலும் அரவணைப்பிலும் கவரப்பட்டனர். தமது பெற்றோரின் அனுமதியுடன் தம் எதிர்காலச் சிவப்பொலிவை எண்ணிச் சீடர்களாக இணைந்தனர். குருமகான் சீடர்களின் கல்வியை இடைநிறுத்தாது தொடரவும் ஆதீனப் பணிகளைப் பேணவும் ஏற்பாடு செய்தார். இவ்வாறு இணைந்த சீடர்களுள் நல்லூரைப் பிறப்பிடமாகக் கொண்ட சுந்தரலிங்கம் என்பவர் தமது பதினொராம் வயதில் (1966 இல்) ஆதீனப் பணியை ஏற்றார். இவரின் கல்வி, ஆதீனப் பணி, அடக்கமான பண்பு, விவேகம் யாவும் சிறப்பாக அமைந்ததால் நல்லைக் குருமணியின் பிரதம சீடரானார்.

சீடரான சுந்தரலிங்கத்தைக் குருமுதல்வர் ஆதீனப் பணி மற்றும் சமயநெறியை தருமபுர ஆதீனத்தில் இணைந்து பயிற்சி பெற அனுப்பினார். பயிற்சியில் நன்கு தேர்ச்சி பெற்ற சுந்தரலிங்கம் நல்லூரை வந்தடைந்ததும் 14.04.1977 அன்று நல்லை ஆதீன இளவரசாக முதலில் நியமிக்கப்பட்டார். குருமுதல்வர் சமயப் பிரசங்கங்கள் மற்றும் மகாநாடுகளுக்காக அடிக்கடி வெளிநாடுகளுக்குச் செல்லும் போது ஆதீனப் பணிகளை இளவரசு சிறப்பாக

நிர்வாகித்தார். இதனால் இளவரசின் பணிச்சிறப்பை மெச்சிய முதல்வர் ஆதீனப் பொறுப்பை இளவரசிடம் ஒப்படைப்பதன் பேரில் அவருக்கும் காவியுடையும் கசாயமும் கொடுக்க வேண்டிய சுபவேளையை நோக்கியிருந்தார்.

இறைவனின் திருவுளப்படி முதலாவது நல்லைக் குருமணியான சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள் 11.04.1981 அன்று மகாசமாதியடைந்தார். குருமணியின் சமாதிக் கருமங்களை நிறைவேற்றுவதன் பேரில் 12.04.1981 அன்று சமயப் பேரறிஞர்களால் இளவரசு காவிதரித்து இரண்டாவது நல்லை ஆதீனக் குரு முதல்வராக குருப்பட்டத்தை ஏற்றார். இவருக்கு குருத்துவப் பெயராக "ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பராமாச்சாரிய சுவாமிகள்" என்னும் பெயர் சூட்டப்பட்டது. இவரே குருமணியின் சமாதிக் கிரியைகளை பக்திபூர்வமாகவும் வெகு சிறப்பாகவும் நிறைவேற்றினார். சமாதியான குருமுதல்வரினால் கவரப்பட்ட பக்தர்கள் வேண்டிய சகல உதவிகளையும் வழங்கினர்.

இரண்டாவது குருமகாசந்நிதானம் சுவாமிகள் தமது 26 ஆம் வயதில் இப்பொறுப்பான பணியை சிறப்பாக ஏற்று நடாத்தி யாவராலும் போற்றப்பட்டார். சமாதியடைந்த குருமணிக்கு சமய முறைப்படி சமாதியில் அபிஷேகங்கள், பூசைகள் நடாத்தப்பட்டு அவ்விடத்தை ஓர் சமாதிக் கோயிலாக அமைத்தனர். இச்சமாதிக் கோயில் முகப்பில் குருமணியின் அழகிய திருவுருவச் சிலையும் நிறுவப்பட்டது. இவ்விடத்தில் வருடாவருடம் குருபூசை தினத்திலும் நல்லூர்க் கந்தனின் பெருவிழாக் காலங்களிலும் அடியார்களுக்கு வெகுசிறப்பாக அன்னதானம் வழங்கப்படுகிறது.

**இரண்டாவது குருமுதல்வரின் அரும்பணிகள்**

இரண்டாவது குரு மகாசந்நிதானம் சுவாமிகள் ஆரம்ப காலத்திலிருந்தெ ஆதீனப் பணியை நன்கு திறம்பட நடாத்தும் பணியில் இணைந்த திறமையால் கடந்த முப்பது வருட காலத்தையும் வெகு நிதானமாக நடத்தினார். இக்காலம் முழுவதும் எம் மண்ணில் ஏற்பட்ட வன்செயலால் பாதிக்கப்பட்ட யாவரும் தடுமாறிய நிலையில் சுவாமிகள் தமது வாலிபப் பருவத்தை சமய வாழ்வுக்கு அர்ப்பணித்தார். ஆதீனப் பணிகள் சிறப்படைந்தன. இலங்கையில் ஒரே ஆதீனமாக அமைந்ததால் சமய சமூகப்பணிகளை முன்னெடுத்தார். சர்வமத பெரியார்களுடன் சமரச உறவை ஏற்படுத்தி நலிவுற்றோருக்கு வேண்டிய ஆதரவுகளைத் தமது ஆதீனத்தின் சார்பில் பொறுப்பேற்று திறம்பட நடத்தினார். ஓய்வுறக்கமின்றி அரும்பணியாற்றிய போதும் சமயத்தூதாக சமய மகாநாடுகளுக்கும் வெளிநாடுகளின் அழைப்பின் பேரில் இந்தியா, மலேசியா, சிங்கப்பூர், இலண்டன் போன்ற பல நாடெங்கும் பறந்து சென்று எம் மண்ணுக்குப் பெருமை சேர்த்தார்.

இன்றைய ஆதீனப் பணியாக முதலாவது குருமணியின் சித்தப்படி சமயநெறி, பண்ணிசை, திருமுறைகள், மனனப் பயிற்சி, பெரியோர்களுக்கான சமயக் கருத்தரங்குகள், யோகாசனப் பயிற்சி போன்ற பல நிகழ்வுகளும் சிறப்புடன் நடைபெறுகின்றன. யாழ். மண்ணில் நிகழும் ஆலய கும்பாபிஷேகங்கள், இதர விழாக்கள், தேர் மற்றும் வெள்ளோட்டம் போன்ற நிகழ்வுகளை நேரிற் சென்று அலங்கரிக்கிறார். இம்மண்ணில் சுவாமிகளின் கால்படாத இடமேயில்லை எனலாம். சென்ற இடமெங்கும் தமது ஆசியுரையை வழங்கிச் சிறப்பிக்கிறார்.

முதலாவது நல்லைக் குருமணியால் நிறுவப்பட்ட நல்லை ஆதீனம் 45 வருடங்களாக வெகு சிறப்புடன் இயங்குவது எம் மண்ணுக்குக் கிடைத்த பெரும் பேறாகும். இப்பணியால் எம் மண்ணில் சைவமும் தமிழும் பூரண வளர்ச்சியடைந்துள்ளது. பெரியோர் மட்டுமல்ல பாடசாலை மாணவர்களும் சமய அறிவில் சிறப்படைந்தமை யாவருமறிந்ததே. ஆதீனத்தை

நிறுவிய குருமுதல்வர் நாவலர் பெருமானின் கனவை நனவாக்கி அடியெடுத்துக் கொடுத்து பதினைந்து வருடங்களில் ஆற்றிய அரும்பணிக்கு நிகரேது. அவரின் பாதையில் அவர் பணி தொடர்ந்த சீடன் இளவரசு இரண்டாவது குருமுதல்வர் தமது வாலிபப் பருவத்தை அர்ப்பணித்து முப்பது வருட காலத்தில் தொடரும் பணி தமது குருநாதருக்கு வழங்கும் நன்றிக் கடனாக அமைந்துள்ளது.

சிவபூமியான இலங்கை மண்ணில் புனிதமான புண்ணிய பூமியாக விளங்கும் யாழ். மண்ணில் சைவசமய நெறியை வளர்த்த நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன கர்த்தாக்களின் அரும்பணி சிவார்ப்பணமாக அமைந்ததும் போற்றத்தக்கதே. இலங்கையில் ஒரேயொரு ஆதீனமாக அமைந்ததால் இந்து சமய கலாசாரம் மற்றும் சைவப் பாரம்பரியங்களையும் தூய நெறியையும் பேணி வளர்க்கும் மையமாகவே இவ்வாதீனம் செயற்படுகின்றது. இப் பெருமை எமது யாழ். மண்ணில் அமைந்தமை எமக்குக் கிடைத்த இறையருட் செயலெனப் போற்றுவோமாக.

**"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"**


**(நன்றி : 'யாழ்.மண்ணில் சைவமும் தமிழும் வளர்த்த சான்றோர்கள்' - மூ.சிவலிங்கம்)**

---


## JEYASUNJAN CONSTRUCTION

"NANTHAVANAM", URELU EAST, CHUNNAKAM, SRI LANKA.

Telephone : 070-213410　　　Hotline : 071-2355315



ஈழத்திருநாட்டில் பிரசித்திபெற்ற நல்லூர்க் கந்தன் திருக்கோயிலுக்கு மேற்குப் புறமாக அமைந்துள்ள நல்லை ஆதீனத்திற்குப் புதிய மடாலயத்தை நிர்மாணிப்பதற்கு எமது நிறுவனத்துக்கு வாய்ப்புக் கிடைத்தமைக்கு இறைவனுக்கு முதலில் நன்றி தெரிவித்துக் கொள்கின்றேன்.

அடுத்ததாக இலண்டன் நல்லை ஆதீன திருப்பணி நிதிக் குழுவினருக்கும், எம்மை நிதிக் குழுவினருக்கு அறிமுகம் செய்து வைத்த அகில இலங்கை இந்து மாமன்றத்தினருக்கும் எமது நன்றிகள் உரித்தாகுக. எமது நிறுவனத்தில் உழைத்த பொறியியலாளர்கள், தொழிலாளர்கள் அனைவருக்கும் எனது நன்றிகள் உரித்தாகுக.

**கனகரட்ணம் சண்முகநாதன்**

*Multistoreyed Bldgs, Ware House, Industrial Bldgs, Houses, Temples, Water Supply, Sewerage & Electrical Installations Etc.*

# தொண்டையினாலே தொண்டுகள் பல செய்து அரும்பணியாற்றிய நல்லை ஆதீன ஸ்தாபகர்

ஈழவளநாட்டில் ஓர் ஆதீனம் இல்லையே என்ற குறையை நிவர்த்தி செய்து நல்லூரிலே திரு ஞான சம்பந்தர் பெயரில் ஆதீனம் அமைத்து அரும்பணியாற்றியவர் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பராமாசார்ய சுவாமிகள் ஆவார்.

1966 ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பெற்ற இந்த நல்லை ஆதீனத்தில் இன்று 44 ஆவது பீடாரோஹண விழா மிகச் சிறப்பாக நடைபெறுகின்றது. தமது தொண்டையினாலேயே கதாப் பிரசங்கம் செய்து தொண்டாற்றிய பெருமை முதலாவது குருமஹா சந்நிதானம் அவர்களையே சாரும். இவர் ஈழத்தில் மட்டுமன்றி இந்தியா, சிங்கப்பூர், மலேசியா, லண்டன் ஆகிய நாடுகளுக்கும் சென்று கதை செய்து தமிழ் வளர்த்தவர்.

பண்ணிசை, கூட்டுப்பிரார்த்தனை, வயலின், பாட்டு, மிருதங்கம் என்று இன்னோரன்ன பலவற்றையும் அபிவிருத்தி பெறச் செய்த சுவாமிகள் இந்த நல்லை ஆதீனம் மூலமாகப் பல அறப்பணிகளாற்றி அரும்பாடுபட்டார். 'தோன்றிப் புகழொடு தோன்றுக' என்றபடி ஆதீனத்தை அமைத்து இந்தியாவிலுள்ள ஆதீனங்கள் போன்று இலங்கையிலும் ஓர் ஆதீனம் இயங்கவேண்டும் என அவாவுற்ற சுவாமிகள் பல்வேறு சமயப் பணிகள் மூலம் ஆதீன வளர்ச்சியில் அக்கறை காட்டினார்.

யாழ்ப்பாணத்தில் இவரது பிரசங்கம் நடைபெறாத கோயில்களே இல்லையென்று கூறுமளவுக்கு சகல இடங்களிலும் கதை செய்திருக்கின்றார்.

இன்று நாம் 'தமிழர்' என்றுசொல்லிக் கொண்டும் 'சைவன்' என்று கூறிக்கொண்டும் நெற்றியில் திருநீறுதுலங்க உரிமையோடு உலாவி வருகின்றோம் என்றால் அதற்கு மூலகாரணமாயிருந்து இலைமறை காயாகச் செயற்பட்டவர் எமது நல்லைக் குருமணி என்று கூறினால் அது மிகையாகாது.

இப்போது ஆதீன குரு முதல்வராக இரண்டாவது குருமஹா சந்நிதானமாக விளங்குகின்ற ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகளும் ஸ்தாபகரின் அடிச்சுவட்டைப் பின்பற்றி அரிய சேவையாற்றி வருகிறார்.

இன்று பீடாரோஹண விழாவில் ஆதிமூலத்தில் இருக்கும் குருமூர்த்த சிவலிங்கப் பெருமானுக்கு விசேட அபிஷேக ஆராதனைகள் இடம்பெறும். பூசை வழிபாடுகளைத் தொடந்து வேதபாராயணம், கொலு பூசை, பட்டணப் பிரவேசம், திருவீதிவலம் என்று நிகழ்ச்சிகள் நடைபெற்று மதியம் அடி யார்களை வணங்கும் மகேஸ்வர பூசையும் இடம்பெறும்.

நல்லைக் குருமணி நல்லை ஆதீனத்தில் சமய தீட்சை, சமய பாட வகுப்புகள், கோலம்போடும் பயிற்சிகள் என்ற மக்கள் பயன்பெறத்தக்க வைகயில் பல்வேறு பணிகளை ஆற்றி சைவசமய வளர்ச்சிக்கே தம்மை முற்றுமுழுதாக அர்ப்பணித்துச் செயற்பட்டார்.

நல்லையம்பதிக் கந்தன் ஆலய மேற்கு வீதியில் அழகுற அமைந்திருக்கும் இந்த நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம் இப்போது அறப்பணிகளின் தரிப்பிடமாக விளங்குகின்றது. பாலர்களுக்கு கல்வி போதிக்கும் வகையில் பாலர் வகுப்பு, இசை வகுப்பு, பண்ணிசை வகுப்பு என்று பல்வேறு வகையிலும் பயனுறு பணிகள் இங்கு நிகழ்கின்றன. நல்லைக் கந்தனின் வருடாந்த மஹோற்சவ காலத்தில் வழிபடவரும் அடியார்களுக்குத் தாகசாந்தி, அன்னதானம் என்பன தினசரிப் பணிகளா கின்றன.

ஆகவே, சைவசமயத்தின் கோட்பாடுகளுக்கும் சைவ சித்தாந்த வளர்ச்சிக்கும் நிலைக்களனாக விளங்கி நிற்கும் இந்த நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனச் செயற்பாடுகளுக்கு சைவ மக்கள் ஒவ்வொருவரும் பேராதரவு வழங்குதல் வேண்டும். அதன் அறப்பணிகளுக்கு எம்மாலியன்ற உதவி புரிந்து சைவசமயத்துக்கு நாங்களும் உதவியுள்ளோம் என்ற ஆத்ம திருப்தியுடன் அவனருளாலே அவன்தாள் வணங்கி கந்தப் பெருமானின் திவ்ய திருக்கடாட்சத்துக்கு வழி சமைப்போமாக.

'என்றும் வேண்டுவது இன்ப அன்பே'

(நன்றி : 'புதினம்' 31.08.2010)

**- சிவநெறிக் கலாநிதி இராசையா ஸ்ரீதரன்.**

# அகில இலங்கை சைவ மாநாட்டு தலைமைப் பேருரை

**(மாநாட்டு ஆண்டு 1968)**

## சிவஸ்ரீ தத்புருஷ தேசிகர்

**தேவகோட்டை**

மெய்யன்பர்களே!

பரங் கருணைத் தடங்கடலாகிய சிவபரம்பொருளின் திருவருளினாலே, சைவ மரபைப் பேணிக் காப்பதில் முன்னிடம் பெற்று விளங்கும் இவ் யாழ்ப்பாணத் திருநகரிற், பல் லாண்டுகளாகச் சமயத் தொண்டு புரிந்து, பயனை வழங்கி வரும் சைவபரிபாலன சபையின், சைவ மாநாட்டுக்குத் தலைமை ஏற்றுப் பணியாற்றும் பேறு, இவ்வாண்டில் எமக்கு வாய்த் துள்ளது. எமது ஞானாசிரியருள் ஒருவராக வைத்து, யாம் நாடோறும் பூசித்து வருகின்ற சைவ ஞாயிறு, ஸ்ரீலஸ்ரீ.ஆறுமுகநாவலர் பெருமானின் அடிச்சுவட்டைப் பற்றி நின்று, இச்சபை பணியாற்றி வருகின்றதென்பதும், எமக்குச் சமயம், விசேடம், நிருவாணமாகிய சிவதீட்சை களையும், ஆசாரியாபிடேகத்தையும் செய்து வைத்து ஆட்கொண்டருளிய சிவாகம ஞானபானுவாகிய சிவஸ்ரீ ஈசனான சிவாசாரிய சுவாமிகள் அவர்களும், எம்முடன் நெருங்கிய நட்புரிமையுடையவர்களாயிருந்தவர்களும் இருக்கின்றவர்களுமாகிய சைவப் பேரறிஞர்களும் இச் சபையில் தலைமையேற்றுச் சிறப்பித்திருக்கின்றார்களென்பதும் தெரிந்து, இச்சபையின் தொடர்பு கிடைத்தமைக்குப் பெரிதும் மகிழ்ச்சியடைகின்றோம்.

சைவ சமயத்திற் பிறப்பதும், அதன் பிராமண நூல்களாகிய வேத சிவாகமங்களின் வழியே ஒழுகுவதும், அதனைப் பரிபாலிப்பதுமாகிய இவை முன்னைப் பிறவிகள் பலவற்றிற் செய்த புண்ணிய மிகுதியால் உண்டாதற்குரியன. இந்தச் சிறந்த பேற்றை, இங்குள்ள மெய்யன்பர்களாகிய நீங்கள் பெற்றிருக்கிறீர்கள். எய்துதற்கரிய பெரும்பேற்றை எய்திருக்கின்ற நாம், இந்த வேளையில் சிவபுரம் பொருளைப் பற்றியும், சைவ சமயிகளாகப் பிறந்து வாழும் நமது இன்றியமையாத கடமைகளைப் பற்றியும், நாம் பெறுதற்கிருக்கின்ற நல்லின்பம் பற்றியும் சிறிது சிந்திப்பது பொருத்தமாயிருக்குமென்று கருதுகின்றோம்.

### சிவபரம்பொருள்

உலகந் தோன்றிய நாள் தொட்டு இன்று வரை, எத்துணையோ கோடிக்கணக்கான சமயங்கள் தோன்றியும், நிலை பெற்றும், மறைந்தும் தமது வன்மை, மென்மைகளை நமக்கு அறிவுறுத்திக் கொண்டிருக்கின்றன. இச் சமயங்கள் அனைத்தும், உயிர்த் தொகுதிகளின் பக்குவ நிலைகளுக்கேற்பப் பல்வேறு வகைப்பட்ட தகுதிகளில், முழுமுதற் கடவுளாகிய சிவபெருமானது திருவருட் குறிப்பினாலேயே உண்டாயின என்பதும், அச்சமய நெறியாளரனை வரும் இறுதியில் சைவநெறி பற்றியொழுகிச் சிவப்பேறு பெறுதல் உறுதியென்பதும், தமது ஞான நூல்களிற் காணப்பெறும் பேருண்மைகளாகும்.

ஒரு தாய், தன் வயிற்றிற் பிறந்த குழந்தைகளுக்கு, அவற்றின் பருவ நிலைகளுக்குத்தக, உணவு கொடுத்து வருவது, அவள் அவற்றின்பால் வைத்த பட்ச பாதகத்தினால் என்று, எவரும் சொல்லார். அன்பினாலென்றே சொல்லுவர். அது போலவே, அனைத்துயிர்களுக்கும் அம்மையப்பராக விளங்குகின்ற சிவபெருமான், பல்வேறு வகைப்பட்ட சமய நெறிகளை வகுத்து, மக்களை அந்நெறிகளில் ஒழுகுமாறு வைத்திருப்பதும், அவர் அவர்கள் அனை வரிடத்திலும் ஒரேபடித்தான அன்பு வைத்துப் பேணும் குறிப்பினாலேயேயாம். இதனாலேயே சைவ சமயம், மற்றைச் சமய நெறியாளரிடத்துக் காழ்ப்புக் காட்டாது, அன்பு காட்டும் அடிப் படையில் பெருமையுடையதாயிருந்து வருகின்றது.

காலங் கடந்து பயன் பெறுந் தகுதியுடைய அபக்குவர்களின் பொருட்டாக "உலகாயதம் முதலிய கீழ்த்தரமான சமயங்களும், அவற்றின் நெறிமுறை முத்திப் பேறு முதலியவைகளும், சிவபெருமானது அருட்குறிப்பின்படி, அவரது அருளாணை பெற்றவர்களால் உணர்த்தப் பெற்றன. விரைவிற் பயன்பெறுந் தகுதியுடைய, பக்குவர்களாகிய நம்மனைவோரின் பொருட்டாகச், சித்தாந்த சைவ நெறியும், அவற்றின் சாதனங்களும், சுத்தாத்துவித முத்தியும் சிவபெருமானால் சிவாகமங்களில் உணர்த்தப் பெற்றன. இங்ஙனம் பிறரை முன்னிறுத்தியும், தாமே முன்னின்றும் ஆக்கி வைத்துள்ள சமயங்களில், முடிந்த முடிபான உண்மைகளைத் தாமே முன்னின்று வகுத்தருளிய சமயநெறியிலேயே, அவர் நிறுத்தியிருக்கக் கூடுமென்பதில், யாரும் ஐயுறவு கொள்ளவேண்டியதில்லையல்லவா?

எல்லா உயிர்களும், முடிவில் இன்பப் பேற்றைப் பெறுதற்குரிய திருவுளக் குறிப்புடன் வேத சிவாகமமாகிய முதல் நூல்களை அருளிச் செய்தும், படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளலாகிய ஐந்தொழில்களைப் புரிந்தும், இடையீடின்றிப் பேருதவி செய்து வரும் சிவபெருமானே "பரம்பொரு" ளென்பதையுணர்ந்து. அவரது திருவடியொன்றே பற்றி நின்று உய்வது, நமது முதற்பெருங் கடமையாகும்.

"சிவபெருமானே பரம்பொருள்" என்பதை அறிந்து கொள்ளுவதற்கு அவரால் அருளிச் செய்யப் பெற்ற வேத சிவாகமங்களும், அவற்றின் வழி வந்த பன்னிரு திருமுறை பதினான்கு சாத்திரமாதிய அருளாளர்களின் திருவாக்குகளும் பெருந்துணை செய்வனவாகும். கலை களாகக் காணப் பெறுபவை அனைத்திற்கும் கர்த்தா சிவபெருமானே. இதனை "ஈசானஸ் ஸர்வ வித்தியாநாம்" என்று தைத்திரீய ஆரணீயக உபநிடதம் உணர்த்துகின்றது. திருஞான சம்பந்தமூர்த்தி சுவாமிகள் திருவிற்கோலத் திருப்பதிகத்தில் "தொகுத்தவன், அருமறை, அங்கம் ஆகமம் வகுத்தவன்" என அருளியிருப்பதும் நினைவு கூர்தற்குரியது.

வேத சிவாகமங்களில் குறிக்கப்பெறும் பரம்பொருள் "சிவபெருமானே" என்பதை "விடையின் மேல் வருவானை வேதத்தின் பொருளானை" என்பது முதலாகிய தேவாரங்கள், "வேதப் பொருள் பாடி அப்பொருள் மாபாடி" என்பது முதலாகிய திருவாசகங்கள் ஆகியவற்றால் அறியலாம்.

சிவபெருமான், சாத்துவிகம், இராசதம், தாமதம் ஆகிய குணங்களிலில்லாத நிர்க்குண ராயிருந்தும் முற்றறிவு, வரம்பிலின்பம், பாசநீக்கம். தன்வயம், பேரருள், முடிவிலாற்றல், இயற்கையுணர்வு, தூய உடம்பு ஆகிய எண்குணத்தராய் இலங்குகின்றார். "அநேக குண சம்பந்நோ நிர்க்குணோயி மகேஸ்வர" என்று தசஷகாண்டமும் "ஸர்வக்ஞாதா த்ருப்திர் அநாதிபோத: ஸ்வதந்த்ரதா நித்யம் அலுப்த அநந்த சக்திஸ்ச நிராமயா த்மா விகத்ததேகஸ்ஸ சிவத்வமேதி" என்று சருவஞானோத்தர ஆகமமும் கூறுகின்றன. இங்ஙனம் சொல்லப் பெறுகின்ற எட்டுக் குணங்களையுடைமையினாலேயே, சிவபெருமான் பரம்பொருளாக எல்லாக் கடவுளரினும் மேம்பட்டு விளங்கிக் கொண்டிருக்கின்றார்.

அவரது முற்றறிவு, ஆன்மாக்களின் பக்குவா பக்குவங்களையறிந்து, அவற்றிற்கேற்ப அருள் புரிவதற்குச் சாதனமாயிருக்கும். வரம்பிலின்பம், அழிந்து போகின்ற இன்ப துன்பங் களிற்பட்டு அல்லலுறும் உயிர்களுக்கு, ஆரா இன்பத்தை வழங்கும். பாச நீக்கம், அவற்றை யுடைய உயிர்களுக்கு, அவை நீங்குமாறு செய்யும். தன் வயம் எதையும் பிறருதவியின்றி முடிப்பதற்கு அநுகூலமாயிருக்கும். பேரருள், பட்சபாதமின்றி, எல்லா உயிர்களின் உய்தியிலும் திருவுளத்தை நிறுத்தும். முடிவிலாற்றல், கருவி காலமாகிய துணைகளின்றி, எப்போதும்

எதையும் எண்ணத்தினாலேயே முடிப்பதற்கு முன்னிற்கும். இயற்கையுணர்வு பிறர் அறிவிக்காமலேயே, எல்லாவற்றையும் அறிவிக்கும் சாதனமாயிருக்கும் தூயவுடம்பு, தோற்றக் கேடுகளுக்கு இடமில்லாததாய், அருள் வடிவமாய் விளங்கும்.

தனக்கென வேண்டுதலும் வேண்டாமையும் இன்றி, ஆன்மாக்களின் உய்தியொன்றிலேயே திருவுளங்கொண்டு, மேற்கண்ட எண்குணங்களையுடையவராயிலங்கும் சிவபெருமானே பரம்பொருள் என்பதை, இற்றைக்குச் சற்றேறக்குறைய ஆயிரமாண்டுகளுக்கு முன்னே திருவவதாரஞ் செய்தருளிய ஸ்ரீஅர்த்தாசாரிய சுவாமிகள், பழுக்கக் காய்ச்சிய இரும்புப் பீடத்திலேறியிருந்து, இருபத்திரண்டு காரணங்கள் காட்டி, ஐந்து வடமொழிச் சுலோகங்களால் நிறுவியுள்ளார்கள். அவை “சுலோக பஞ்சக” மென வழங்கப்பெறும். அவற்றைச் சைவவுலகம் செய்த தவப்பயனாய் அவதரித்துச் சிவஞானபோதமாபாடியம் முதலிய பெருநூல்கள் செய்து உதவிய ஸ்ரீ மாதவச் சிவஞானசுவாமிகள் தமிழ் யாப்பில் மொழிபெயர்த்துத் தந்தருளியுள்ளனர்.

வைதிக சமயத்தினரனைவரும் ஏற்றுக்தகொள்ளுகின்ற மந்திரமாகிய “காயத்திரியின் வாச்சியப்பொருள் சிவபெருமானே” என்பது அதன் முதற்குறிப்பு. அம்மந்திரத்திலுள்ள பர்க்கநாமம் “பர்கஸ் த்ரயம்பக: ஹர: ஸ்மரஹரோ பர்க:” என்னும் வடமொழி நிகண்டு முதலியவற்றால் சிவபெருமானேயே உணாத்துகின்றது, என்பது தெளியலாம். “ஞானத்தையும், முத்தியையும் மெய்யடியார்களுக்குச் சிவபெருமான் ஒருவரே வழங்க வல்லவர்” என்பது சுலோக பஞ்சகத்தில் இறுதியாக அமைந்திருப்பது. “பாசஞ்ஞூநாத் நமுத்தியஸ்யாத் பசுஜ்ஞூநாத் ததைவச ஸர்வதஸ்சயதோ முத்தி பதிஸ்ஞூநேந கம்யதே” என்னும் சுவாயம் புவ ஆகம வாக்கியத்தால், பதிஞானமே முத்தியை வழங்குதன்பதும், அந்த ஞானம் சிவபெருமானால் அருளப் பெறுவதென்பதும், உணரப் பெறுகின்றன.

சுலோக பஞ்சகம் “பசுபதிப் பெயரிய தனிமுதற் கடவுள், உம்பர்கள் எவர்க்கும் உயர்ந்தோன், என்பது தெளிக இயல்புணர்ந்தோரே” என்று முடிவு பெறுகின்றது. சிவபெருமானுக்குரிய பல திருப்பெயர்களில் “பசுபதி” என்பதும் ஒன்று. “உமாபதயே பசுபதயே நம:” என்பது தைத்திரீய ஆரணியக உபநிடதம். இதன் பொருள் “உமாபதியார்க்கு, பசுசுபதியார்க்கு வணக்கம்” என்பதாகும். உமாபதியே பசுபதி என்பதும், அவரல்லாத ஏனையோரனைவரும் பசுக்களாக, அவரொருவரே பதியாய் விளங்குகிறாரென்பதும், எல்லோருக்கும் பதியாய் இருக்கும் அவரே எல்லோராலும், வழிபடுவதற்குரியரென்பதும், எவரையும் அவர் வழிபடுபவரல்லர் என்பதும் உணரத்தக்கனவாம்.

“சிவபெருமான் ஒருவரே தியானிக்கற்பாலர். சிவபெருமான் நன்மையே வழங்குவர். இஃதன்றிச் சொல்லிய மற்றெல்லாவற்றையும் விட்டுவிடுக. அதர்வசிகை முற்றிற்று.” என்று அதர்வன வேதம் தன்னை முடித்துக் கொண்டது. “சிவஏகோத்யேய, சிவஸ்சங்கர ஸர்வம் அந்யத் பரித்யஜ்ய ஸமாப்தா அதர்வசிகா:” என்பது அது. “சென்று நாம் சிறுதெய்வம் சேர்வோமல்லோம், சிவபெருமான் திருவடியே சேரப் பெற்றோம்” எனவும் “சேர்ந்தறியாக் கையானை” எனவும் வரும் தேவார திருவாசகக் குறிப்புக்களை இங்கே நினைவு கூரலாம்.

“சிவமாம் தெய்வத்தின் மேல் தெய்வம் இல்” என்னும் நாவலர் திருவாக்கும் “சிவத்துக்கு மேலொரு தெய்வமில்லை” என்னும் பழமொழியும் சித்தாந்த சைவர்களது சிரசின் மேல் விளங்கும் சிவபெருமானே பரம்பொருள் என்பதை, வலியுறுத்திக் கொண்டிருக்கின்றன. அந்தச் சிவபரம்பொருள், தம்மையும் நம்மையும் தடையையும் நமக்கு உள்ளவாறு உணர்த்தி உய்விப்பது, சைவ சமயத்தில் மட்டுமேயாம்.

நூலகம்
யாழ்ப்பாணம்.

**சைவசமயம்**

சமயகோடிகள் அனைத்தையும் தத்துவ அடிப்படையில் வைத்துக் கொண்டு, ஆறு பிரிவினவாகிய நான்கு வகையில் அடக்கி நமது அருள் நூல்கள் கூறும். அவை, புறப்புறச் சமயங்கள் ஆறும், புறச் சமயங்கள் ஆறும், அகப்புறச் சமயங்கள் ஆறும், அகச் சமயங்கள் ஆறுமாம். இவ்விருபத்து நான்கினுள் அடங்காதனவாகச் சமயங்கள், முன்னே தோன்றியனவோ, இனித் தோன்றுவனவோ எவையும் இருக்க முடியாது. பழையனவாயினும், புதியனவாயினும் அவைகள் பெயரளவில் வேறாகக் காணப்பட்டாலும், பொருள் நோக்கத்தில் இவ்விருபத்து நான்கிற்குள் அடங்கியேயாதல் வேண்டும்.

இந்தச் சமயங்கள் அனைத்தும், முதற்பெருங் கடவுளாகிய சிவபெருமானது திருவுள்ளக் குறிப்பின் தத்துவ ஞானியர், கலைஞானியர், உலகியலறிஞர் ஆகியோரால், இம்மை, மறுமை நலங்களுக்கு இன்றியமையாத ஒழுகலாறுகளை மக்களுக்கு உணர்த்தவே ஆக்கப் பெற்றன. இவையனைத்தையும் தோற்றுவிப்பதற்குத் திருவருளே துணையாக நின்றது. தோற்றுவித்த தலைவர்கள், பலவகைகளிலும் அறிவிற் சிறந்தவர்களேயாயினும், சிற்றறிவுடைய உயிர் வர்க்கத்தினராதலின், இவையனைத்தும் முற்ற முடிந்த உண்மைகளை எடுத்துணர்த்தும் இயல்பு பெற்றனவாய் அமைந்திருக்கவில்லை. மேலும் ஆக்கியோரின் அறிவுத் தகுதிக்கேற்ப, ஏற்றத் தாழ்வுடையனவாகவும் அவை ஆகிவிட்டன.

உலகியலறிஞரை நோக்கக், கலைஞானியர் சிறந்தவராதலின் முன்னவர் நிறுவிய சமயங் களை விட, பின்னவர் நிறுவிய சமயங்கள் சிறப்புடையனவாகவும், அவ்விருவரையும் நோக் கத் தத்துவஞானியர் சிறந்தவராதலின், அவர் கண்ட சமயங்கள், முன்னிருவருங் கண்ட சமயங்களை விடச் சிறந்தனவாகவும் அமைந்தன. எவரும் அறிவிக்க வேண்டாது. எல்லா வற்றையும் தாமே அறியும் பேரறிவுப் பிழம்பாகிய சிவபெருமானால், நேரே நியமிக்கப் பெற்ற சைவ சமயமோ, எந்தக் குறைபாடும் இல்லாத முழுநிறைவுடன், எல்லாச் சமயங்களையும் கடந்து அதீத நிலையில் திகழ்ந்து கொண்டிருக்கின்றது.

உலகியலறிஞரால், உண்டாக்கப் பெற்ற புறப்புறச் சமயங்களும், கலைஞானியரால் நிறுவப் பெற்ற புறச் சமயங்களும், தத்துவ ஞானியரால் நிறுவப் பெற்ற அகப்புறச் சமயங்கள், அகச் சமயங்களும் அவ்வவற்றிற்குள்ள எல்லைகளின் அளவுகளிற் சிற்சில உண்மைகளைக் கொண்டனவேயாம். அவ்வுண்மைகள் அனைத்தும் அவ்வத் தகுதிகளையுடைய மக்களாற் கொள்ளத்தக்கனவே. சிவபெருமானால் நியமிக்கப் பெற்ற சைவ சமய உண்மைகள் வேறெங்கும் காணப்படாதனவாய்ப் பக்குவான்மாக்களுக்கு முன்னின்று பயன் வழங்குவனவாய்ச் சிறந்து நிற்பனவாம்.

புறச் சமயங்கள் முதலான கீழ்ச்சமயங்களில் நிற்போர் அனைவரும், அவ்வவ் சமயங்களின் ஒழுக்கங்களை வழுவாது கடைப்பிடித்து வருவார்களாயின், அதன் பயனாற் படிப்படியாக மேற்சமயங்களில் ஏறி இறுதியில் சித்தாந்த சைவச் செந்நெறியைப் பற்றி ஒழுகிச், சிவஞானம் கைவரப் பெற்றுப், பரமுத்தியை அடைவர். இதனை,

"புறச்சமய நெறி நின்று மகச் சமயம் புக்கும்
புகல்மிகுதி வழியுழன்றும் புகலுமாச் சிரம
அத்துறைகள் அவையடைந்தும் அருந்தவங்கள் புரிந்தும்
அருங்கலைகள் பல தெரிந்தும் ஆரணங்கள் படித்தும்
சிறப்புடைய புராணங்கள் உணர்ந்தும் வேதச்

**சிரப்பொருளை மிகத் தெளிந்தும் சென்றால் சைவத்**
**திறத்தடைவர் இதிற்சரியை கிரியா யோகம்**
**செலுத்தியபின் ஞானத்தாற் சிவனடியைச் சேர்வர்''**

என்ற சிவஞான சித்தித் திருவிருத்தம் உணர்த்தியருளுகின்றது. இதில் ''சைவத்திறம்'' என்று குறிப்பது, "சைவக் கூற்றின் முடிபாகிய சித்தாந்த சைவத்தை" என்று சிவஞானசுவாமிகள் உரைத்தருளினர்.

சிவபெருமானது திருவாக்குகளாகிய வேத சிவாகமங்களைப், பிரமாணங்களாகக் கொள்ளாத உலகாயதமும், நால்வகைப் பௌத்தங்களாகிய மாத்தியமிகம், யோகாசாரம், சௌத்தி சமயங்களாம். சிவாகமங்களை விட்டு வேதத்தை மட்டும் பிரமாணமாகக் கொண்டாலும், வேதப் பொருளுடன் முரணிப் பொருள் கொள்ளுதலும், வேதத்திற் சில பகுதிகளை மட்டுமே பிரமாணமாகக் கொண்டு மற்றவற்றை இகழ்தலும், வேதப் புறமான நூல்களையும் பிரமாணமாகக் கொள்ளுதலும் ஆகிய குற்றங்களையுடைய தருக்கம், மீமாஞ்சை, ஏகான்ம வாதம், சாங்கியம், யோகம், பாஞ்சராத்திரமாகிய ஆறும் புறச் சமயங்களாம்.

வேத சிவாகமங்களைப் பொது வகையிற் பிரமாணமாகக் கொண்டாலும் அவற்றிற்குப் புறமாகிய பாசுபதம் முதலிய நூல்களைச் சிறப்பு வகையிற் பிரமாணமாகக் கொள்ளுதலும், வேதாகமங்களில் விலக்கப்பட்டவற்றைக் கைக்கொள்ளுதலும் ஆணவ மலத்துண்மை கொள்ளாமையும் அதனுண்மை கூறும் சிவாகம முடிவுகளை இகழ்வதுமாகிய குறைகளையுடைய பாசுபதம், மாவிரதம், காபாலம், வாமம், வைரவம், ஐக்கியவாதம் ஆகிய ஆறு அகப்புறச் சமயங்களாம். பொருளுண்மையெல்லாம் சித்தாந்த சைவரோடொப்பக் கொண்டாலும் அவற்றிற்குக் கூறும் பொதுவியல்பு, பேதவாதசைவம், சிவசமவாத சைவம், சங்கிராந்த வாத சைவம், ஈசுவர அவிகாரவாத சைவம், நிமித்த காரணபரிணாமவாத சைவமாகிய ஆறும் அகச் சமயங்களாம்.

இங்ஙனம் வகுக்கப் பெற்ற சமயங்களுள், அகச் சமயங்களாறும் சைவமேயாயினும், வேதாகமப் பொருளுண்மை கொள்ளுவதில் வேறுபாடுடையனவாயிருத்தலின், அவை சித்தாந்த சைவத்திற் கீழானவையாய்த் தாழ்ந்துள்ளன. இதனைக் குறிக்கவே சைவக் கூற்றின் முடிபாகிய சித்தாந்த சைவத்தைச் ''சைவத் திறம்'' என்று சிவஞானசித்தியார் அறிவித்தது.

''சைவத்தின் மேற் சமயம் வேறிலை'' என்றும், ''சைவ சமயமே சமயம்'' என்றும், ஆன்றோ ரனைவராலும் போற்றிப் புகழப் பெறுகின்ற நமது சமய உண்மைகளை, முறைப்படி அறிந்து ஒழுகுவது இன்றியமையாததாகும். அறிவு படைத்து வாழும் ஒவ்வொரு மனிதனுக்கும், அவன் வாழுகின்ற இவ்வுலகத்தைப் பற்றியும், உலகத்துக்கும் அவனுக்கும் ஏற்பட்டுள்ள உறவைப் பற்றியும், அவ்வுறவு வந்ததற்குரிய காரணத்தைப் பற்றியும், உசாவியறிந்து கொள்ளும் விருப்பம் எழுவது இயல்பேயாகும்.

### முப்பொருளுண்மை

உலகத்தில் தொடர்புகொண்டு வாழும் உயிர்கள், அத்தொடர்பை உண்டாக்கிய இறைவன், அத்தொடர்புக்குக் காரணமான மலம் ஆகிய மூன்றும் சைவசமயத்தில் ''முப்பொருள்'' என்றும் ''திரிபதார்த்தம்'' என்றும் ஒன்றுகூடிப் பேசப்பெறும், இவற்றை ஆராய்ந்து முடிவு காணும் பொறுப்பு நமக்கு உண்டு.

**''சான்றவர் ஆய்ந்திடத் தக்க வாம்பொருள்**
**மூன்றுள மறையெலாம் மொழிய நின்றன**
**ஆன்றதோர் சொல்பதி ஆருயிர்த் தொகை**
**வான்றிகழ் தளையென வகுப்பர் அன்னவே''**

என்பது கந்தபுராணம். பதி, பசு, பாசம் ஆகிய மூன்றும் அநாதி நித்தியப் பொருள்கள். பதியும், பசுக்களும் அறிவுடைமையால் ஒரு இனமாகவும், பாசம் அறிவின்மையால் மற்றோரின மாகவும் இருக்கும். இவை, ஒரு காலத்தில் ஒருவரால் உண்டாக்கப்பட்டனவல்லவாதலின், எக்காலத்திலும் எவராலும் அழிக்கப் பெறுவனவாகா. பசுக்கள், தமது இனமாகிய பதியைச் சேர்ந்து வாழும் உரிமையுடையன, அவ்வுரிமைக்குத் தடையாக, அநாதியாகவே அவற்றுடன் கூடி இடையூறு செய்து வருவது பாசம். பேரொளிப் பிழம்பான பதியினிடத்து, இருட்பொருளான பாசம் சென்று சேரமாட்டாது. பசுக்களைப் பதி அணுகினால், பாசம் அவைகளை விட்டு நீங்கியிருக்கும். இதனை,

> "பதிபசு பாசம் எனப்பகர் மூன்றிற்
> பதியினைப் போற்பசு பாசம் அநாதி
> பதியினைச் சென்றணு காபசு பாசம்
> பதியணு கிற்பசு பாசம் நிலாவே"

என்ற மந்திரம் அறிவித்தருளுகின்றது.

பதி, பசு, பாசம் என்னும் நித்தியப் பொருள்களுள்ளே நித்தியரும், பதிவிஞ்ஞானகலர், பிரளயாகலர், சகலர் என்னும் சேதனர்களுள்ளே சேதனரும் ஆவார் சிவபெருமான் என்பதைக் கடோபநிடதம் "நித்யோ நித்யாநாம சேதந: சேதநாநாம்" என்று கூறுகின்றது. இப்பதி, பசு, பாசங்கள் தொழிற்பாடில்லாத சொரூபமெனப்படும். தன்னிலையில் சிவம், ஆன்மா, மலம் என்று குறிக்கப் பெறும்.

சிவம் - பதி

சொரூப நிலையினதாகிய "சிவம் விளங்கக் காணப்படுவதும் காணப்படாததும் அல்லதாய், ஒரு குணமும், ஓர் அடையாளமும் இல்லாததாய், மலரகிதமாய், ஒன்றாய், அழியாததாய், எண்ணிறைந்த ஆன்மாக்களுக்கும் அறிவாய், சலிப்பற்றதாய்க் கண்டிக்கப்படாததாய் இன்ப சொரூபமாய், மாறுபட்டவர்களுக்குச் சென்று பொருந்துகைக்கு இடமாகிய முத்திநெறியாய் அணுவுக்கு அணுவாய், மகத்துக்கு மகத்தாய்த் திகழ்வது" என்று சிவப்பிரகாம் கூறுகின்றது. இந்தச் சொரூப சிவத்தை அண்டங் கடந்த பொருள் அளவில்லாதோர் ஆனந்த வெள்ளப் பொருள்" என்று திருப்பல்லாண்டு போற்றிப் புகழும்.

"சிவ" என்னும் சொல், "வசீகரித்தல்" என்னும் பொருளையுடையதாய் எழுத்து நிலைமாற்றம் பெற்று விளங்குவது இதிலுள்ள சிகரவகரங்கள், பதியையும், அருளையும் உணர்த்துவனவாகும். அருளே சிவபெருமானது சக்தி சிவசக்தி, கதிரவனில் ஒளி போன்றது, கதிரவனும், ஒளியும் தம்முள் வேறல்லவாயினும், குணகுணித் தன்மையால், வேறு வைத்தெண்ணப்படும். அது போலவே சிவமும், சத்தியும் தம்முள் வேறல்லவாயினும் குணகுணித்தன்மையால் வேறு வைத்தெண்ணப்பட்டு இரு பொருளெனப்படும். "மாறாப் பரையெனுங் கிரணஞ் சூழ்ந்தபாறுவே என்பது தாயுமான அடிகள் திருவாக்கு.

"சிவம் என்பது அன்பு, இன்பம், ஆனந்தம் முதலிய பொருள்களையுடையது. மெய்யடியார்களிடத்து அன்பு செய்து இன்பங் கொடுத்து ஆனந்தத்திலழுத்துவது அதன் இயல்பு. "இன்பமே என்னுடைய அன்பே" எனவும் "அருணிதி தரவரும் ஆனந்தமலையே" எனவும் வரும் மணிவாசகம் இதனை உணர்த்தும்.

"சிவம்" தடத்த நிலையில் பதியாக வரும்பொழுது, சிவசக்தியோடு கூடிப் படைப்பு முதலிய ஐந்தொழில்களால் மலசகிதர்களான பசுக்களை ஆளுபவராக இருப்பார். "இறைவனா

வான்ஞானமெல்லா மெல்லா, முதன்மையனுக்கிரகமெல்லாம் இயல்புடையான்'' என்று, பதிப்பொருளைச் சிவஞானசித்தியார் உணர்த்துகின்றது. "பதி'' என்னும் சொல் "ஆள்பவர்'' என்னும் பொருளையுடையது. "ஆளும் நாயகன் கயிலையின் இருக்கை'' என்னும் திருத் தொண்டர் புராணம், சிவமே பதி என்பதை விளக்குவதாகும்.

சிவமாகிய பதி, உயிர்களிடத்துக் கலந்து நிற்றலில், உடம்பும், உயிரும்போல ஒன்றாகவும், பொருள் தன்மையில் கண்ணையும், கதிரவனையும் போல வேறாகவும், உயிர்க்கு உயிராதல் தன்மையில் கண்ணொளியும், ஆன்மபோதமும் போல உடனாகவும் இருந்தருளுவார். எண் ணில்லாத உயிர்கள், அவையவை செய்த இருவினைகளுக்கேற்பப், படைத்தலாகிய தொழில் களின் பாற்பட்டுச் செல்லுங்கால், அத்தொழில்களைச் செய்கின்ற பதிரூபம், சத்தி ரூபங்களாக வும் அவற்றிகு வேறாகவும் அவர் இருப்பார்.

ஆன்மாக்களின் உய்தியில் திருவுளம் வைத்து, அவர் செய்யும் ஐந்தொழில்களுள், முன்னைய நான்கும், அவற்றுள் இறுதித் தொழிலாகிய அநுக்கிரகத்தின் பாற்பட்டனவே.

**அழிப்பிளைப் பாற்றல் ஆக்கம் அவ்வவர் கன்மஒப்பில்**
**கழித்திடல் நுகரச் செய்தல் காப்பது கன்மஒப்பில்**
**தெழித்திடல் மலங்கள் எல்லாம் மறைப்பருட் செய்திதானும்**
**பழிப்பொழி பந்தம் வீடு பார்த்திடின் அருளே எல்லாம்.**

என்ற சிவஞானசித்தியார், ஐந்தொழில்களும் அருளின் பாற்பட்டிருக்கும் முறையை அறி விக்கின்றது.

**ஆன்மா - பசு**

ஆன்மா, எக்காரணம் பற்றியும் அசித்துப் பொருளாதாலில்லாததும், வியாபகமுடையதும், அதிசூக்கும் சித்துமான சிவம் ஆதலின்றிச் சார்ந்த பொருள்களிடத்து, அவையவையாய் வசிப்புண்டு வியாபித்திருக்கும் ஏகதேச வியாபியாய், அநாதியே ஆணவ மலத்தில் மறைப்புண்டு தடைப்பட்ட இச்சை, ஞானம், கிரியைகளையுடையதாய்ப் பசுவெனப்படும் தூல சித்தாதலை யுடையது.

ஆணவ மலத்துடன் கூடிக் கேவலப்பட்டு நின்ற ஆன்மா, அசுத்த மாயையில் அநந்ததேவரால் வழங்கப் பெற்ற காரண சரீரத்தைப் பொருத்தி, அறிவிச்சை செயல்கள் பொதுவகையாற் சிறிது விளங்க இருக்கும், பின்னர் மாயா தத்துவத்திலிருந்து தோன்றிய கலை முதலியவற்றால், கஞ்சுகசரீர முதலியவற்றைப் பொருந்தி, சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம் துரியாதீத மாகிய அவத்தைகளையுற்றுப் போக்குவரத்து செய்து, நல்வினை, தீவினைகளை ஈட்டியும் நுகர்ந்தும் உழலும்.

இங்ஙனம் வினைப் பயன்களை நுகர்ந்து, துன்புறும் ஆன்மாவுக்கு இருவினையொப்பு நிகழும்போது, அதன் ஆணவமலம் பரிபாகத்தையடையும். அவ்வேளையில், சிவசத்தியின் பதிவு அவ்வான்மாவுக்கு உண்டாக, அதன் வாயிலாக அது, சிவப்பேற்றை அடைந்து ஒன்றியிருக்கும்.

ஒரு பொருள் மற்றொரு பொருளைச் சார்ந்து, அப்பொருளேயாக ஒன்றி நிற்பதனால், சாரப்படும் பொருள்களின் தன்மைகளிற் சிறப்பான சில சாரும் பொருள்களுக்கு அமைதல்

வான்ஞானமெல்லா மெல்லா, முதன்மையனுக்கிரகமெல்லாம் இயல்புடையான்'' என்று, பதிப்பொருளைச் சிவஞானசித்தியார் உணர்த்துகின்றது. "பதி'' என்னும் சொல் "ஆள்பவர்'' என்னும் பொருளையுடையது. "ஆளும் நாயகன் கயிலையின் இருக்கை'' என்னும் திருத் தொண்டர் புராணம், சிவமே பதி என்பதை விளக்குவதாகும்.

சிவமாகிய பதி, உயிர்களிடத்துக் கலந்து நிற்றலில், உடம்பும், உயிரும்போல ஒன்றாகவும், பொருள் தன்மையில் கண்ணையும், கதிரவனையும் போல வேறாகவும், உயிர்க்கு உயிராதல் தன்மையில் கண்ணொளியும், ஆன்மபோதமும் போல உடனாகவும் இருந்தருளுவார். எண் ணில்லாத உயிர்கள், அவையவை செய்த இருவினைகளுக்கேற்பப், படைத்தலாகிய தொழில் களின் பாற்பட்டுச் செல்லுங்கால், அத்தொழில்களைச் செய்கின்ற பதிரூபம், சத்தி ரூபங்களாக வும் அவற்றிகு வேறாகவும் அவர் இருப்பார்.

ஆன்மாக்களின் உய்தியில் திருவுளம் வைத்து, அவர் செய்யும் ஐந்தொழில்களுள், முன்னைய நான்கும், அவற்றுள் இறுதித் தொழிலாகிய அநுக்கிரகத்தின் பாற்பட்டனவே.

**அழிப்பிளைப் பாற்றல் ஆக்கம் அவ்வவர் கன்மஒப்பில்**
**கழித்திடல் நுகரச் செய்தல் காப்பது கன்மஒப்பில்**
**தெழித்திடல் மலங்கள் எல்லாம் மறைப்பருட் செய்திதானும்**
**பழிப்பொழி பந்தம் வீடு பார்த்திடின் அருளே எல்லாம்.**

என்ற சிவஞானசித்தியார், ஐந்தொழில்களும் அருளின் பாற்பட்டிருக்கும் முறையை அறி விக்கின்றது.

**ஆன்மா - பசு**

ஆன்மா, எக்காரணம் பற்றியும் அசித்துப் பொருளாதாலில்லாததும், வியாபகமுடையதும், அதிசூக்கும் சித்துமான சிவம் ஆதலின்றிச் சார்ந்த பொருள்களிடத்து, அவையவையாய் வசிப்புண்டு வியாபித்திருக்கும் ஏகதேச வியாபியாய், அநாதியே ஆணவ மலத்தில் மறைப்புண்டு தடைப்பட்ட இச்சை, ஞானம், கிரியைகளையுடையதாய்ப் பசுவெனப்படும் தூல சித்தாதலை யுடையது.

ஆணவ மலத்துடன் கூடிக் கேவலப்பட்டு நின்ற ஆன்மா, அசுத்த மாயையில் அநந்ததேவரால் வழங்கப் பெற்ற காரண சரீரத்தைப் பொருத்தி, அறிவிச்சை செயல்கள் பொதுவகையாற் சிறிது விளங்க இருக்கும், பின்னர் மாயா தத்துவத்திலிருந்து தோன்றிய கலை முதலியவற்றால், கஞ்சுகசரீர முதலியவற்றைப் பொருந்தி, சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம் துரியாதீத மாகிய அவத்தைகளையுற்றுப் போக்குவரத்து செய்து, நல்வினை, தீவினைகளை ஈட்டியும் நுகர்ந்தும் உழலும்.

இங்ஙனம் வினைப் பயன்களை நுகர்ந்து, துன்புறும் ஆன்மாவுக்கு இருவினையொப்பு நிகழும்போது, அதன் ஆணவமலம் பரிபாகத்தையடையும். அவ்வேளையில், சிவசத்தியின் பதிவு அவ்வான்மாவுக்கு உண்டாக, அதன் வாயிலாக அது, சிவப்பேற்றை அடைந்து ஒன்றியிருக்கும்.

ஒரு பொருள் மற்றொரு பொருளைச் சார்ந்து, அப்பொருளேயாக ஒன்றி நிற்பதனால், சாரப்படும் பொருள்களின் தன்மைகளிற் சிறப்பான சில சாரும் பொருள்களுக்கு அமைதல்

வேண்டும். இது குறித்தே சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருக்கயிலைக்குச் செல்லும்போது அருளிய திருப்பதிகத்தில் "ஊனுயிர் வேறு செய்தான் நொடித்தான் மலை உத்தமனே" என்றும், மாணிக்கவாசக சுவாமிகள் தில்லையில் அருளிய கண்டபத்தில் " சிந்தைதனைத் தெளிவித்துச் சிவமாக்கி எனையாண்ட, அந்தமிலா வானந்தம் அணிகொள்தில்லை கண்டேனே" என்றும் குறிப்பாராயினர்.

பசுத்துவம் நீங்கிச் சிவத்துவ விளக்கம் உண்டாதற்குச், சிவனடி ஞானமே வேண்டப் பெறுவது. "சிவனையவன் திருவடி ஞானத்தாற் சேரச் செப்புவது" என்பது சிவஞானசித்தியார். சிவஞானத்தால் சிவனடியைச் சேர்ந்த சீவன்முத்தர்கள் எங்கும் சிவத்தையே காண்பர்.

**மலம் - பாசம் (ஆணவம்)**

பாசம் ஆணவம் என்றும், கன்மம் என்றும், மாயை என்றும் மூவகைப்படும். அவற்றுள் ஆணவ மலம் உயிர்களை அநாதியே பற்றி நிற்பதனால் மூலமலமென்றும், சகச மலமென்றும் பெயர்களையுடையதாயிருக்கும். அது ஒன்றாய், எண்ணிறந்த உயிர்களிடமும் செல்லும் எண் ணிறந்த சக்திகளையுடையதாய்ச் செம்பிற் களிம்புபோல ஆன்மாக்களை அநாதியே பற்றி விரவி நிற்பதாய், அவற்றின் கேவலாவத்தையில் அறிவு தொழில்களை நிகழவொட்டாமல் மறைத்துச் சகலாவத்தையில் மோகஞ் செய்தலாகிய கீழ்ச் செலுத்தும் செயலைச் செய்வதாய்ச் சுத்தாவத்தையில் விலகியிருந்து சிவபோகத்தை நுகருதற்குத் துணை செய்வதாயிருக்கும்.

இது, பிடித்த விடாததாகை, மோகம் மிகுத்துச் சொல்லுகை, கோபம் இடையாமை, அறியாமை விஞ்சுதல், கொலைத் தொழில் நினைவு விஞ்சுதல், எப்பொழுதும் வருத்தமுறல், யானென்று விஞ்சுதல், மாச்சரியம், விடாநகை என்னும் எட்டுக்குணங்களையுடையது.

கேவலத்தில் ஆன்மா, ஆணவமென்றே அத்துவிதமாகக் கலந்து நிற்க இருக்கும், பின்னர் சகலத்தில், மாயையிலிருந்து சிவபெருமான் படைத்துத் தந்த தநு, கரண, புவன, போகங் களுடனும் கூடியிருக்கும் ஆணவ மலம் - கேவலாவத்தை, சகலாவத்தைகளில் ஆன்மாவுடன் ஒன்றியிருந்தும், சுத்தாவத்தையில் அதனை விட்டு விலகியிருந்தும் நித்தியப் பொருளாய் நிலவுவதாகும்.

**கன்மம்**

"கன்மம்" என்பது "செயல்" என்னும் பொருளுடையது. இது, உயிர்களால் ஒவ்வொரு பிறவியிலும் செய்யப்பட்டத் தொகுதியாவது முன்னைப்பிறவிகளிற் செய்த இதம். அகிதம் என்னும் முயற்சிகள் "ஆகாமியம்" எனப்படும். அவை பலனுக்கு வரும் வரை கட்டுப்பட்டு நல்வினை, தீவினை என்னும் இரண்டு வகையாய்ச் "சஞ்சிதம்" எனப்படும். அந்நல்வினை, தீவினைகள் பலனுக்கு வரும்போது இன்பம், துன்பம் என்னும் இரண்டு வகையாய்ப் "பிராரத்தம்" எனப்படும்.

இங்ஙனம் ஆகாமியத்தால் சஞ்சித பிரார்த்தனைகளும் பிராரத்தை அனுபவிக்கும் முறையில், மேலும் ஆகாமியமும் உண்டாகுமாயின், முன்னர் பிராரத்தம் உண்டாயிற்றா? ஆகாயமியம் உண்டாயிற்றா? என்னும் ஐயம் நிகழும். பிராரத்தம் ஆகாமியத்தின் பலனேயன்றி, வேறில்லை. அதனால், ஆகாமியமே முன்னர் உண்டாயிற்றென்று சொல்ல வேண்டும். ஆகாமியமாகிய இதமகிதத்தைச் செய்வதற்குக் காரணம். விருப்பு வெறுப்புக்களாம். உயிர்களுக்கு அநாதியே உள்ள அவ்விருப்பு வெறுப்புகளே "மூல கன்மம்" எனப்பட்டுப் பிறப் பிறப்புக்களில் படுமாறு செய்யும்.

மூலகன்மத்திலிருந்து உண்டாகும் காமிய மலம். இன்ப துன்பகளாகிய காரியத்தாலும், புண்ணிய பாவங்களாகிய காரணத்தாலும் அறியப் பெறுவது. இதுமடிவந்திருத்தல், பொசிப் பற்றுக் கிடக்கை, புண்ணியச் செய்கை, பாவச் செய்கை, தொழில் செய்யாமல் விடுகை, பரநிந்தனை செய்கை என்னும் ஆறு குணங்களையுடையது. உயிரை ஆணவமல காரியங்களாகிய மோக முதலியவற்றுடனும், மாயா மல காரியங்களாகியது தனு,கரண, புவன போகங்களுடனும் கட்டுப்படுத்தி, இன்ப துன்பங்களின் வேறுபாட்டிற்கேற்ப பல்வேறு வகைப்பட்ட உடல்களை இறைவன் ஆணையால் அவைகட்குத் தோற்றுவித்து இது நடக்கும்.

**மாயை**

மாயை என்பது மா - யா என்னும் ஒரெழுத்தொரு மொழிச் சொற்கள் இரண்டு கொண்டதும், "ஒடுக்குவோனால் ஒடுங்குவது தோற்றுவோனால் தோன்றுவது" என்னும் பொருளையுடையது மாகும். இது மாயேயமாய் விரிந்த நிலையில் உள்பொருள் என்னும் மாயையாய் ஒடுங்கிய நிலையில் "இல்பொருள்" என்றும் சொல்லப்பெறுவது.

இது சுத்தமாயை, அசுத்தமாயை, பிரகிருதிமாயை என மூன்றாய் ஆணவ மல மொன்றேயுடைய விஞ்ஞானகலர், அத்துடன் கன்ம மலமுடைய பிரளயாகலர், அவற்றுடன் மாயாமலமுடைய சகலர் ஆகிய உயிர் வர்க்கத்தினருக்கும் முறையே தனு,கரண,புவன போகங்களாயிருக்கும்.

இது பலகலை கற்றும் அறியாமை, களவு செய்கை, கண்டது மறுத்தல், அறிந்தது மறுத்தல், உண்டாயும் ஈயானாகை, பொருள்களின் மேல் மாச்சரியம், அழுக்கறாமை ஆகிய ஏழு குணங்களையும் உடையது. அழியாததாயும், அருவமாயும், ஒன்றாயும், உலகத் தோற் றத்திற்கு வித்தாயும், சடமாயும், வியாபகப் பொருளாயும், சிவவியாகபத்துள் அடங்குதலால் அவருக்கு வைப்புச் சத்தியாயும், தனு, கரண, புவன போகங்களை விரித்தலால் மலமாயும் மயக்கஞ் செய்வதாயும் இது இருக்கும்.

மாயையிலிருந்து சூக்குமை, பைசந்தி, மத்திமை, வைகரி, தூலவைகரி ஆகிய சொற் பிரபஞ்சங்களும், நாதம் முதல் பிருதிவி வரையுள்ள பொருட் பிரபஞ்சங்களும் உண்டாயின.

**நமது கடமையும் பயனும்**

பெறுதற்கரிய மனிதப் பிறவியைப் பெறும்பேறு நமக்கு வாய்த்துவிட்டது. அதிலும் சைவமாம் சமயம் சாரும் ஊழைப் பெற்றுவிட்டோம். இப்பிறவியைக் கருவியாகக் கொண்டு, இனிப் பிறவாத பெருநிலையை அடைய முற்படல் வேண்டும். நமது ஆறுமுகநாவலர் பெருமான் "இந்தச் சரிரம் நமக்குக் கிடைத்தது நாம் கடவுளை வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டேயாம்." என்று தமது இரண்டாம் பால பாடத்திலேயே அறிவுறுத்தியுள்ளார்கள்.

ஆணவ மலத்தில் ஒன்றிச் சடம்போற் கிடந்த நம்மிடத்து வைத்த பெருங் கருணையால், சிவபெருமான், தனு,கரண,புவன, போகங்களை வழங்கியுள்ளார். இவற்றை அவர் நமக்குத் தந்தது, இன்ப துன்பங்களை நுகரும்படி செய்து, பிராரத்த கன்மத்தை நீக்குதற் பொருட்டும், அவ்வாறு நீக்குதலால், பருவம் வந்தபோது, சிவதீட்சைப் பேறு வாய்க்க, அதனால் சஞ்சித ஒழிப்பு ஆகாமியச் சேர்க்கையின்மை நிகழுதற் பொருட்டுமேயாம். இங்ஙனம் நிகழுவதனால் எல்லாத் தீமைகளுக்கும் காரணமாய் உயிருடன் கலந்து நின்ற ஆணவமலம் அகன்று பேரின்பம் உண்டாகும்.

இவ்வுண்மைகளை உள்ளவாறு உணர்ந்து, நமது ஆன்றோர்களாகிய அருளாசிரியன்மார்கள் உபதேசித்ததும், சென்றதுமாகிய செந்நெறி கடைப்பிடித்து ஒழுகுவதற்குச், சமயம், விசேடம், நிருவாணமாகிய சிவதீட்சைகளை முறையாகப் பெற்று, ஸ்ரீபஞ்சாட்சரஜெபம், சிவபூசை, சிவ யோக சாதனம் ஆகியவற்றில் தலைப்பட்டு, இவற்றால் எய்தும் பயனாகிய சிவஞானத்தை எய்தி, அயரா அன்பின் அரன் கழலமர்ந்தின்புறும் பேறு, நமக்கு அவன் திருவருளால் அமை வதாக.

முடிவுரை

மெய்யன்பர்களே!

சைவநெறியல்லவற்றுக் கில்லையென்று சொல்லப்பெறும், செய்வினை, செய்வான், அதன் பயன், சேர்ப்பான் ஆகிய நான்கையும் பற்றி இங்கே ஒருவாறாகச் சிந்தித்தோம்.

**"அல்லல் என்செயும் அருவினை என்செயும்**
**தொல்லை வல்வினைத் தொந்தந்தான் என்செயும்**
**தில்லை மாநகர்ச் சிற்றம் பலவனார்க்**
**கெல்லை யில்லதோர் அடிமைபூண் டேனுக்கே"**


என்னும் அப்பரடிகள் திருவாக்கைச் சிந்தித்துச் "செய்வினை வந்தெமைத் தீண்டப் பெறாதிரு நீலகண்டம்" என்னும் ஆளுடைய பிள்ளையார் திருவாக்கில் உறுதிகொண்டு, வினை நீக்கமும், திருவருட்பேறும் பெற முயல்வோமாக, ஞான நூல்களைத் தக்கார் வாயி லாகக் கற்றுத் தெளிந்து, அவற்றின் உண்மைகளை அனுபவத்திற் கொண்டு இன்புறுவீர்களாக! இதுபற்றி அமையும் சைவபரிபாலனம், இங்கும், எங்கும், என்றும் சிறப்புடன் நிகழ்வதாக! மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்!

**நல்லூரில் ஆறுமுக நாவலர்கோன் தாடலைக்கொண்**
**டல்லாருங் கண்டன் அடிபரவ - வல்லார்கள்**
**பண்புடன்சேர் சைவ பரிபா லனசபையித்**
**திண்புவியில் வாழ்க சிறந்து.**

**நலமே தழைக.**



# ஈழத்து சைவ ஆதீனங்களின் ஓர் கண்ணோட்டம்



முற்காலத்தில் முடியுடை மூவேந்தர்கள் தமிழையும் கலைகளையும் வளர்த்தார்கள். பிற்காலத்தில் குறுநிலமன்னர்களும் ஆதீனகர்த்தர்களும் வளர்த்தார்கள். ஆதீனர்களுக்கு அரசர்கள் ஏராளமான நிலக்கொடைகளை அளித்ததே அறம்வளர்ப்பதற்குதான். அறம் வளர்ப்பதோடு மொழி, கலை, பண்பாடுகளையும் 'ஆதீனங்கள் வளர்த்தன. "ஆதீனங்கள் பெரியசமஸ் தானங்கள் போன்றவை" என்று எங்கள் போற்றுதலுக்குரிய சன்மார்க்க தேசிகன் ஊரன் அடிகள் அவர்கள் கூறுகிறார்கள்.

அவர் மேலும் கூறுகையில் சைவஆதீனங்கள் 18, வீரசைவ ஆதீனங்கள் 12, கௌமார மடங்கள் 2 ஆக 32 ஆதீனங்களை குறிப்பிடுகிறார்.

இந்த 18 ஆதீனங்களுள் 12வது இடத்தில் வரணி ஆதீனம் என்று குறிப்பிட்டுள்ளார். மேலும வரணி ஆதீனம் கடல் கடந்த இலங்கையில் யாழ்ப்பாணத்தில் உள்ளது என்றும் அதன் கிளை வேதாரண்யத்தில் (தமிழ்நாடு இந்தியா) உள்ளது என்றும், வேதாரண்யம் கோயில் அவர்களின் நிர்வாகத்தில் உள்ளது என்றும் குறிப்பிடுகின்றார்.

இதில் அதிசயம் என்னவென்றால் தமிழ்நாட்டிலேயே அதிகமான நிலசொத்துடைய கோயில் வேதாரண்யம் கோயில்தான். மகாவித்துவான் ச.தண்டபாணிதேசிகரால் எழுதப்பெற்று 1975 இல் வெளியிடப்பெற்ற திருக்கோயில் வரலாற்றில் 13,000 ஏக்கர் நிலம் கோயிலின் சொத்து என தரப்பட்டிருக்கிறது. வேதாரண்யம் கோயிலில் உள்ள 92 கல்வெட்டுக்கள் அரும்பெரும் பொக்கிஷங்கள். "திருவாரூர்த் தேர் அழகு திருவிடைமருதூர்த் தேருவழகுவேதாரண்யம் விளக் கழகு" என்று பழமொழியே உண்டாகிவிட்டது.

மேலும் அதிசயம் என்னவென்றால் இவ்வளவு பெரிய நிர்வாகத்தை யார் செய்கிறார்கள்?. வேதாரண்யம் கோயிலின் பரம்பரை அறங்காவலர்கள் யாழ்ப்பாணம் வரணி ஆதீன கர்த்தர்கள் ஆவர். யாழ்ப்பாணம் கரணவாய் வரணி ஆதீனம் என்னும் திருப்பெயரில் அமைந்துள்ள ஆதீனம் தோன்றுவதற்கான சூழ்நிலையும் தோற்றுவித்தோரும் அவர் வரலாறும் ஆதீனம் தோன்றிய காலமும் அதன் வளர்ச்சி நிலையும் இந்த ஆதீனத்தை சேர்ந்த திரு. குமரேசமூர்த்தி என்பவர் அவரது எம்.ஏ பட்டத்திற்கு வரணி ஆதீனத்தைப் பற்றி ஆய்வுசெய்த ஆய்வேட்டின் படிதான் மேற்கூறப்பட்டுள்ள விவரங்கள் கிடைத்தன. மேலும் போற்றுதலுக்குரிய சன்மார்க்க தேசிகன் ஊரன் அடிகளார் குறிப்பிடும் போது 'இவ்வளவு பெருமையும் தனிச்சிறப்பும் ஏராளமான சொத்துமதிப்பும் உள்ள வேதாரண்யம் கோயிலுக்கு' கடல் கடந்து வந்த யாழ்ப்பாணத்து ஆதீனகர்த்தர்கள் அதிலும் துறவிகளாக இல்லாமல் இவ்லறத்தாராக இருக்கும் ஆதீனகர்த்தர்கள் பரம்பரை அறங்காவலர்களாக இருந்து வருகின்றனர்.

மேற்கூறப்பட்டவை யாவும் இக்கட்டுரை வரையும் அடியேனுக்கு நான் பிறந்து வளர்ந்த நாடாகிய ஈழத்தை விட்டு 1961இல் இலண்டனுக்கு குடியேறிய பின்புதான் தெரியவந்தது. எனது இல்லத்திற்கு விருந்தாளியாக வருகைதந்த சன்மார்க்க தேசிகன் ஊரன் அடிகளார் எடுத்துரைத்தார். இதன் பின்னர் 1998 ஆம் ஆண்டு சைவக் கோயில்கள் ஒன்றியம் ஆரம் பித்து 2002 இல் 5வது மாநாட்டின் போது அடியேன் ஒன்றிய செயலாளராக இருந்தபோது நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத் தலைவரை மாநாட்டுக்கு அழைத்தேன். 1966 ஆம் ஆண்டு மதுரை திருஞானசம்பந்தர் ஆதீனத்தின் 291ஆவது மகா சந்நிதானம் அவர்கள், அடியேனுக்கு *சிறுவயதில் தெரிந்த மணிபாகவதர்* அவர்களுக்கு முறையாக தீட்சைக் கிரமங்கள் ஆற்றி

முதலாவது குருமகா சந்நிதானம் சிறீலசிறி சுவாமிநாத பரமாச்சாரிய சுவாமிகளாக ஆத்மீகத் துறையை ஏற்றார். அதன்பின் தற்போதைய ஆதீனத் தலைவர் சிறீலசிறி சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் ஆத்மீக துறையை ஏற்றார். இவரைத்தான் இலண்டன் மாநாட்டுக்கு 2002இல் அழைத்திருந்தோம். ஆனால் சைவர்களாகிய எங்களுக்கு தாயகத்தில் இருக்கின்ற ஒரே ஒரு ஆதீனம் நல்லை ஆதீனமாகும் என்று கூறப்பட்ட வசனம் சரியல்ல என்பதை உணர்த்தும் முகமாகத்தான் பழமைவாய்ந்த யாழ்ப்பாணம் ஸ்ரீ கரணவாய் வரணி ஆதீனத்தை பற்றி கூறியுள்ளேன்.இதை வேதாரணியத்தில் (தமிழ்நாடு) இருந்து நிர்வகிக் கிறார்களோ என கேள்விக்குறியாக உள்ளபடியால் எங்கள் கண்முன்னே உள்ள நல்லூரில் உள்ள ஆதீனத்தை அடியேன் 2003 ஆம் ஆண்டு இலங்கையில் நடந்த இரண்டாவது இந்து மாநாட்டில் பங்குகொண்டபோது முதல் முதலில் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் கால் வைத்தேன். அன்று சுவாமிகளுடன் உரையாடும் போதும் எனக்குக் கிடைத்த ஓர் சந்தர்ப்ப சூழ்நிலையாலும் இத்திருமடத்தை புனருத்தாரணம் செய்யவேண்டும் என உத்தேசித்தேன்.

இலண்டன் திரும்பியபோது எங்கள் உயர்வாசல் குன்று அறங்காவலர் சபையிடம் இதைப் பற்றி கூறினேன். அதற்கு எவ்வளவு செலவாகும் என்பதையும் நான் அறங்காவலர் சபை செயலாளர் என்ற முறையில் அறியும்படி கூறினார்கள். அதன் பின் 21.02.2005ஆம் ஆண்டு அங்கு சென்றபோது சுவாமி அவர்கள் திரு.எஸ்.ருத்திரலிங்கம் என்ற பொறியியலாளர் அவர்களை அங்கு வருவித்து பலமணிக்கணக்காக உரையாடி எம் மாதிரியான கட்டிட வேலைகள் தனக்கு செய்து தரும்படி சுவாமி அவர்கள் விளக்கம் கூறினார்கள். இதன்படி திரு.ருத்திரலிங்கம் அவர்களும் 27.06.2005 இல் படங்களுடன் எவ்வளவு பெறுமதி என்று விபரமாக அனுப்பி யிருந்தார்கள். ஆனால் எங்கள் கோயில் அறங்காவலர் சபை தொகை ரூபா 40,50,000 என்றதனால் தனிப்பட பாரம் எடுக்க இயலாது என சைவக் கோயில்கள் ஒன்றியத்திடம் அணுகலாம் என தீர்மானிக்கப்படவும், 2006 இல் ஒன்றியம் இதைப்பற்றி ஆராய்ந்து கைவிடவே 2007ஆம் ஆண்டு நல்லை ஆதீன கட்டிட நிதி ஆரம்பிக்கப்பட்டு மீண்டும் இலண்டனில் உள்ள கோயில்கள் தலா 5000 பவுண் போடவேண்டும் என தீர்மானித்து நிதிசேகரிப்பு தொடங்கியது. ஒரு தற் காலிகமான கட்டிடக்குழு திரு. பாலசிங்கம் தலைமையிலும், திரு.நா.சச்சிதானந்தம் செய லாளராகவும், திரு.வே.சிவசுந்தரம் பொருளாளராகவும், கலாநிதி அ.தேவசகாயம் ஒருங்கிணைப் பாளராகவும் இனிதே நடாத்தி பூர்த்தியாகும் நிலையில் வருகிறது.

கட்டிடத்தின் திறப்புவிழாவையொட்டி ஒருமலர் வெளிவரவும் ஏற்பாடுகள் நடைபெறுகின்றன. அதற்கேற்ப அடியேன் இச் சிறிய படைப்பை வரைகின்றேன்.

மேலும் கட்டிட வேலைகளை நடாத்துவதற்கு உறுதுணையாக இருக்கும் அகில இலங்கை இந்து மாமன்றத்தை மிகவும் பாராட்டி நன்றி கூற கடமைப்பட்டுள்ளோம். அத்துடன் பிற்காலத் திற்கு இக் கட்டிடத்தை நிரந்தரமாக பராமரிக்க ஒருகுழுவை நியமிக்க தற்போதுள்ள கட்ட டக் குழு தீர்மானித்திருப்பது மெச்சத்தக்கது. இந்த நிரந்தரக் குழுவிற்கு இலண்டன் அங்கத்த வர்களுடன் அகில இலங்கை இந்து மாமன்றத்தையும் சைவபரிபாலன சபையினருடைய அனுசரணையோடும் நடாத்தலாம் என ஆராயப்படுகிறது.

**க.ரங்கநாதன்**
**உயர் வாசல் குன்று முருகன் கோயில்**
**அறங்காவலர் சபையின் முன்னாள் தலைவர்.**

RUHLINS

**ENGINEERS & CONSTRUCTORS**

"VIMALAM", 6 Nallur Cross Road,
Jaffna.
Tel-No-222-5534 Fax: 222-5534

Date: 22.02.2005

Mr.K.Ranganathan,
TRUSTEE,
SAIVA CHARITY AID,
Highgatehill Murugan Temple,
200A Archway Road,
London N6 5BA.

Dear Sir,

## Nallai Atheenam Re-Construction Works

Reference our discussion we had on the 21 st of February at Nallai Atheenam,Nallur, in the presence of The Nallai Atheenam Muthalvar ,we wish to put it on record of the outcome of the discussion.

1).M/S Ruhlins shall undertake the Re-construction works on Turn-Key basis

2).Based on the drawings submitted by the Atheenam,final detailed drawings shall be prepared incorporating following items:

a).Rooms for foreign guests/visitors with attached bath room facilities shall be provided.

b).A conference room

c).Upstairs to incorporate more rooms.

d).Facilities for the provision of meals

e).Height of the proposed building shall not be greater than the Nallur temple.

f).The present shrine rom in the Atheenam building shall be shifted to the adjoining madam

g).M/s Ruhlins shall in the first instance, inform the Saiva Charity Aid of the Financial commitments on a very preliminary level to be followed by a detailed estimate.

We take this opportunity to kindly request you to issue us an official letter depicting the Authority to undertake such job with modifications, if any.

Yours truly,

General Manager

*OUR REPUTATION IS BUILT ON QUALITY*

# History behind the Involvement of London Saivites in the Nallai Atheenam Building Project



Saivism is the oldest religion on the Globe. Temples had been built from immemorial to execute the spiritual and cultural needs of Saivites. Atheenams complement and supplement the worship and functions of the Temples. It involves various social activities without any caste or creed and spreads the good message of the Atheenams to people all around the world. The Atheenam's head is called Guru Mahasannithanam.

In a way as the Abbeys are to Christianity so are the Atheenams to the Saiva Culture.

Not known to everybody, is the existence of one of the eighteen Atheenams called Varani Atheenam in north Sri Lanka which is at the moment non functional for practical purposes. However the Nallai Thirugnanasampanthar Atheenam remains the only functional one of its kind which was established by the late Swaminatha Paramachariar in the year 1966. The most significant purpose of establishing this Atheenam was to play a prominent role towards religious, cultural, educational and community development.

I understood that It was found, by the delegates attended the 2nd World Hindu Congress Conference in Sr Lanka in 2003, that the Atheenam in Nallur had no proper building for it's normal activities and proper conduct of religious meetings. Added to this there were no facilities to entertain delegates and religious visitors. This particular aspect was conveyed to London Saivites by one of the delegates Mr K Ranganathan who happened to be the Chairman of the Britania Hindu Temple Trust. After himself discussing with his fellow Trustees in London and at the request of Guru Maha Sannithnam a building project was prepared by Mr S Ruthralingam, a Chartered Engineer and Building Contractor in 2005. This project along with the estimate was considered by the Board of Trustees of the Highgate Murugan Temple in London and declined due to it's high cost and decided to hand it over to the Federation of Saiva Temples of UK. Federation of Saiva Temples again took this up and discussions went along for many years but no actions were taken despite Swamy's several appeals when he attended the conferences in London and Europe.

Then when the Guru Mahasannithanam attended the World Saiva Conference in Switzerland in 2007 and made an appeal again, a resolution was proposed by myself and seconded by Mr. N. Satchithananthan, the Founder of London Sivan Temple, Lewisham to the effect that all the Saiva Temples along with the World Saiva Council should take up this project for the benefit of all Saivites living in Sri Lanka.

Following the resolution passed at the Conference in Switzerland in 2007 I was authorized in writing by the Guru Mahasannithanam to contact all Saivites in London and other Countries and collect funds for the building project. As suggested by Mr Satchithananthan I approached Mr Sivasuntharam of Western Jewellers and with his help a bank account was opened in the name of the 'Nallai Atheenam Building Fund'. Mr Manoharan, the chairman of the World Saiva Council London Branch, Mr Satchthananthan and myself actively started raising funds from the Chariot Festival Day of our holy Sri Kanagathurkkai ampal in 2007. Although at that moment the funds collected stood at nearly £3000.00, due to the political situations and unrest specially in the North, funds for this particular project were not forthcoming. Hence, Mr Sivasuntharam and myself discussed the position with Guru Mahasannithanam and decided to hold fire till the situation in the north improves.

When Guru Mahasannithanam was invited for our Temple Kumbabisheham (Consecration Ceremony) in 2011, we were able to convene a meeting on the 19th June 2011. Most of the Trustees of the Temples and well wishers were present along with Mahasannithanam, and the current Nallai Atheenam Building Committee was formed. Thid helped the fund raising move faster reaching almost £80,000 within 6 months.


We have now reached the stage where the building has been completed successfully and the opening ceremony is fixed for the23th June 2013. I should take this opportunity to express our sincere thanks and gratitude to the All Ceylon Hindu Congress for their valuable help in supervising the Building Works and having brought it to a success.

I also wish to thank the contractor Mr Shanmuganathan, for his valuable assistance providing and creating a beautiful Architectural Building that stands out in Jaffna and completing the task within the deadline.

In conclusion many thanks to various Individuals and Temples who gave their magnanimous financial support to the Chairman and committee members for their moral support to this worthy project.

Finally, let us unite together to promote the functions of the Atheenam so that it would be a focal point to promote and propagate Saivism around the world.

**Dr. Appiah Thevasagayam**
*Co-ordinator Nallai Atheenam Building Committee*
*Co-Founder, Trustee*
*Sri Kanagathurkkai Amman Temple Trust, Ealing, London W13 9AE*



நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன கட்டிட புனருத்தாரண பணியும்

பெரிய பிரித்தானிய வாழ் சைவப்பெருமக்களின் ஈடுபாடும்.

ஆதீனங்கள் என்பவை பல்லாண்டுகாலமாக தமிழும் சைவமும் வளர அயராது பாடுபட்டு வருபவையாகும்.. இந்தியாவில் பல ஆலயங்கள் இன்றும் ஆதீனங்களாள் பராமரிக்கப்பட்டும் நிர்வகிக்கப்பட்டும் வருகின்றன. இவ்வகையில் 1500 வருடங்களிற்கு முன்தோன்றிய ஆதீனம் மதுரை ஆதீனம் ஆகும். சமய குரவர்களிள் ஒருவரான திருஞானசம்பந்தர் மதுரைக்கு வந்த போது அங்கிருந்த திருமடத்தில் தங்கியிருந்து பல தேவாரங்கள் பாடிப்புகழ்பெற்றமையினால் இவ்ஆதீனம் தனிச்சிறப்பு பெற்றுள்ளது.

கிட்டத்தட்ட 100 வருடத்திற்கு முன்னர் வாழ்ந்த சித்தர்களிள் ஒருவரான செல்லப்பா சுவாமிகள் யோகர் சுவாமிகளை தனது சிசியனாக ஏற்றுக்கொண்ட இடம் நல்லூர். யாழ்ப்பாணத்து கடைசி மன்னன் சங்கிலியன் 13ம் நூற்றாண்டு வரை இருந்த இடம் நல்லூர். சைவத்தையும் தமிழையும் இரண்டு கண்களாக பேணிக் காத்துவளர்த்து வந்த ஆறுமுக நாவலர் வாழ்ந்த இடம் நல்லூர். உலகத்தை ஆழுகின்ற முருகன் முன்பு, நாட்டை ஆழுகின்ற அரசனும் காத்திருக்க வேண்டியது கடமை என்று உணர்த்துகின்ற, தலமாகிய கந்தன் அமைந்துள்ள இடம் நல்லூர். இவ்வாறு பெருமை வாய்ந்த இடத்தில் ஈழமக்களிற்கென்று இன்று நடைமுறையில் உள்ள ஓர் ஆதீனம் என்றால் அது நல்லை ஆதீனமாகும்.

மதுரை ஆதீனத்தின் 291வது குரு மகாசன்னிதானம், மணிஐயரை அழைத்து தீட்சை செய்து நல்லை ஆதீனத்தை உருவாக்கி அவரை முதலாவது ஞான சம்பந்த பரமாச்சாரியார் ஆக்கினார்கள். இவ்வளவு சிறப்புமிக்க இந்த ஆதீனம் பல வருடங்களாக பாரமரிப்பு இன்றி இருக்கும் கட்டத்தில் இரண்டாவது ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரியர் உலகம் முழுவதும் புலம்பெயர்ந்து வாழும் ஈழத்து சைவப் பெரியோர்களிடம், இவ் ஆதீனத்தின் கட்டிடத்தை புணருத்தாருணம் செய்து தரும்படி பலமுறை வேண்டியிருந்தார்.

இதன்படி 2007ம் ஆண்டு சுவிற்சர்லாந்து நாட்டில் நடைபெற்ற உலக சைவப்பேரவையின் 7வது சைவமகாநாட்டில் சுவாமியின் முன்னிலையில் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தை புலம்பெயர் நாடுகளில் வாழும் சைவப்பெரியோர்களையும் தொடர்புகொண்டு புனருத்தாரணம் செய்து கொடுப்பதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. பல நாடுகளிலும் வாழும் ஈழத்து சைவப் பெரியோர்களை தொடர்புகொண்டு இப்பணியை ஆரம்பிக்கும் பொறுப்பு எல்லாம் வல்ல ஸ்ரீ கனக துர்க்கை அம்மன் அருளாள் அடியேனிடம் ஒப்படைக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து பிரித்தாணியா, அவுஸ்த்திரேலியா, கனடா, ஜெர்மனி, பிரான்ஸ், சுவிற்சர்லாந்து, நெதர்லாந்து போன்ற நாடுகளில் உள்ள பல அன்பர்களை இனைத்து அவர்களின் உதவியால் 3,000 பவுண் வரை சேர்த்தோம். இவ் வேளையில் கட்டிட வேலைகளை ஆரம்பிப்பதற்கு அவ்வேளையில் இருந்த போர்ச்சூழல் ஏற்றதல்ல என பல திசைகளிலிருந்தும் வேறுபட்ட அபிப்பிராயங்கள் தெரிவிக்கப்பட்டமையால் நிதி சேகரிக்கும் முயற்ச்சி தற்காலிகமாக பின் போடப்பட்டது.

இதன் பின்பு 2011ல் ஸ்ரீ கனக துர்க்கைஅம்பாளின் கும்பாபிஷேக விழாவிற்கு சுவாமிகள் அழைக்கப்பட்டபோது இப்பணியை திரும்பவும் ஆரம்பிக்கும் முயற்சி எடுக்கப்பட்டது. சுவாமிகள் பல ஆலய தர்மகர்த்தாக்கள், நிர்வாகசபை உறுப்பினர்கள், சைவஸ்தாபனங்கள், சைவத்தொண்டர்கள் பலரை அணுகி சூழ்நிலை சற்று சாதகமாக இருப்பதால் நிதிசேகரிக்கும் விடயத்தை மீண்டும் ஆரம்பித்து இப்பெரிய கைங்கரியத்தை நிறைவேற்றித் தரும்படி வேண்டினார். இதற்குஇணங்க 19.06.2011ல் தற்போதைய கட்டிடக்குழு தெரிவுசெய்யப்பட்டது.

இக்குழு வெகுமுன்னோடியாக செயல்ப்பட்டு பல ஆலயங்களிடமி ருந்தும் தனியாரிடமிருந்தும் 50,000பவுன் வரை திரட்டி 07.11.2011ல் கல்நாட்டு விழா நடைபெற்று, இன்று கிட்டத்தட்ட 120,000பவுன்கள் செலவில் யாழ்பாணத்துக்கு பெருமை சேர்க்கும் விதமாக அழகுமிளிர கம்பீரமான தோற்றத்துடன் அமைக்கப்பட்டுள்ள இக்கட்டிடம் இன்று திறப்புவிழா காண்கின்றது. இது உலகளாவிய சைவத்

தமிழர்கள்மிகவும் பெருமையடையக்கூடிய ஓர் அரிய செயல் என்றால் அது மிகையாகாது.

இக் கட்டிடம் முழுமை பெற தயாள உள்ளத்துடன் நிதிஉதவி வழங்கிய ஆலயங்கள், ஸ்தாபனங்கள், தனிநபர்கள் யாவருக்கும் லண்டன் புனருத்தாரன குழுவின்சார்பில் அவர்களை பாராட்டி நன்றி கூற கடமைப் பட்டுள்ளேன். அத்தோடு இப்பெரும் கைங்கரியம் இனிதே முழுமைபெற எம்முடன் சகலவழிகளிளும் ஒத்துழைத்து உதவி புரிந்த அகில இலங்கை இந்து மாமன்ற நிர்வாக சபையினருக்கும் அதன் அங்கத்தினர்கட்கும் லண்டன் நல்லை ஆதீன புனருத்தாருன கட்டிடக்குழு என்றும் கடமைப்பட்டுள்ளது. இக் கட்டிடத்தை எமது சமயம், கலை, கலாச்சாரம் பிரதிபலிக்கும் வண்ணம், பார்த்தோர் வியக்கும் வகையில் குறுகியகாலத்தில் கட்டித்தந்த 'Jeyasunjan Construction.Urelu' திரு.சண்முகநாதன், கட்டிட விற்பன்னர் அவர்கட்கு நல்லைக் கந்தனின் திருவருள் கைகூட பாராட்டி வாழ்த்துகின்றோம்.

எமது ஆதீனத்தின் இரண்டாவது மகா சன்னிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமி அவர்களின் வேண்டுகோளின்படி அழகுற அமைந்துள்ள இவ் ஆதீனத்தின் சேவைகளான சைவசமய பிரச்சாரம் சைவசமய கல்வி, திருத்தொண்டர் குருபூசை, அந்தணர் குருகுலம், சைவ தீட்சைகள் எல்லாவற்றிற்கும் மேலாக மதமாற்றத்தை தடைசெய்யும் முயற்ச்சி ஆகியவற்றை ஊக்கிவிற்பதில் இவ் ஆதீனம் முக்கிய பங்கு வகிக்க எல்லாம் வல்ல ஸ்ரீ கனக துர்க்கை அம்பாள் திருப்பாதங்களை வணங்கி வேண்டுகின்றேன்.


கலாநிதி அப்பையா தேவசகாயம்.

ஒருங்கிணைப்பாளர்.

லண்டன் நல்லை ஆதீன புனருத்தாரண கட்டிடக் குழு

இணை ஸ்தாபகர், அறங்காவளர்.

ஸ்ரீ கனக துர்க்கை அம்மன் ஆலயம். லண்டன்.



உ

சிவமயம்


மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்

## கட்டிட நிதி

# நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்

பருத்தித்துறை வீதி நல்லூர் யாழ்ப்பாணம் இலங்கை

Tel: 021 222 2870





நாவலர் பெருமான்



ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்



ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்



முனைவர்: ஸ்ரீமத் மௌன குமாரசுவாமித்தம்பிரான் சுவாமிகள்

கட்டளை விசாரணை,தருமையாதீனம் ஸ்ரீ மௌன மடம் - மலைக்கோட்டை

திருச்சிராப்பள்ளி - 620 002 தமிழ்நாடு. போன் 0431 2702472

தேதி:
22.07.2007

புலம் பெயர்ந்த ஈழச் சைவத் தமிழர் அன்பர்களுக்கு

" புல்லினால் வருடங்கோடி புது மண்ணால் பத்துகோடி
செல்லுமாஞ் ஞாலந் தன்னில் செங்கல்லால் நூறுகோடி
அல்லியங் கோதை பாகன் ஆலயம் மடாலயங்கள்
கல்லினால் இயற்றினோர் கயிலைவிட்டகலார் அன்றோ" - (தனிப்பாடல்)

திருக்கோயில் இறைவன் இருக்கின்ற இடம் - திருமடம் ஆச்சாரியர்கள் வீற்றிருக்கின்ற இடம் - ஆன்மாக்கள் ஈடேற்றம் கருதி குருவடிவாகி அவனியில் வந்து ஆட்கொள்ளும் வடிவமாகும் - குருமூர்த்திகள் வடிவம்.இவர்கள் திருக்கைலாய மரபுவழி உபதேசமாக வருகின்ற சைவ ஆதீனங்கள் 18 ஆகும். ஆதீனம் என்றால் உரிமை உடையவர்கள், பழைமை மரபு வழியினர் என்பர். இவ்வகையில் சிவபூமி என திருமூலரால் போற்றப் பெறும் இலங்கை சைவம் போற்றும் நாடாகும். அந்நாட்டில் நல்லூர்த் திருநகரில் யாழ் வாழ் சைவ மக்களுக்காக மதுரை திருஞானசம்பந்தர் ஆதீனத்தின் 291 வது மகா சன்னிதானம் அவர்கள் அங்கு திருமடம் காண உளம்பற்றி ஸ்தாபித்து மணிபாகவதர் அவர்களுக்கு முறையாக தீட்சைக் கிரமங்கள் செய்து சைவம் வளர ஆற்றுப்படுத்தினார்கள்.

அந்த நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம் இன்றைய சூழ்நிலையில் பல்லாற்றானும் நலிவுற்றுத் திகழ்கிறது. அத்திருமடத்தைப் புனருத்தாரணம் செய்து அங்குரார்ப்பணம் செய்ய அன்பர்கள் முன்வர வேண்டும். இன்றைய ஆதீனகர்த்தர் பல்லாற்றானும் எதிர்கால சூழ்நிலை கருதி திட்டமிட்டுச் செய்ய நினைத்துள்ளார்கள். இப்புண்ணிய பேற்றிற்கு செல்வம், உழைப்பு இவைகளை அன்பர்கள் அர்ப்பணித்து, குருவருளையும், திருவருளையும் பெற்றுய்யவும், யாழ்வாழ் சைவ அன்பர் களுக்கு என்றுள்ள ஒரே ஆதீனமாக திகழ்வதால் அக்குருவருளுக்குப் பாத்திரமாகும் வண்ணமும் அன்பர்களைக் கேட்டுக் கொள்கின்றோம். எல்லாம் வல்ல செந்தமிழ்ச் சொக்கநாதப் பெருமான் திருவருளும், தருமை ஆதீனம் குருமணியின் குருவருளும் கிடைக்கப் பிரார்த்திக்கின்றேன்.

மௌன குமாரசுவாமித் தம்பிரான்

# நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்

Point Pedro Road, Nallur, Jaffna, Sri Lanka
Tel: 009421 222 2870

அன்புள்ளவர்களுக்கு ஆசிகள்!

## நல்லை ஆதீன கட்டிட நிதி சேகரிப்பு

ஆதீனத்தின் சார்பாக கலாநிதி அப்பையா தேவசகாயம் "துர்க்கா" 19 கினல்லா வீதி, ருசிலிப், யுகே. இணை ஸ்தாபகர் இலண்டன் கனகதுர்க்கை அம்மன் ஆலயம் அவர்களை நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம் சார்பாக புலம்பெயர் நாடுகளில் வாழ்கின்ற சைவத் தமிழ் மக்களை கலந்தாலோசனை செய்வதற்கும் ஆதீன புனர்நிர்மாண வேலைகளுக்கு நிதி சேகரிப்பதற்கும் நல்லை ஆதீன குருமகா சந்நிதானம் அவர்கள் நியமித்திருக்கிறார் என்பதை அறியத் தருகின்றோம்.

என்றும் வேண்டும் இன்ப அன்பு

ஸோத்.ஸோமஸுந்தரதேசிகஞானசம்பந்தபரமாசாரிய ஸ்வாமிகள்
நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்

## நல்லை ஆதீனம் - கட்டிடநிதி

ஈழத் திருநாட்டின் இராசதானியாகத் திகழ்ந்த யாழ்ப்பாணத்து நல்லூரில் சைவமும், தமிழும் தழைத்தோங்க அரும்பணியாற்றிய ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரும், தவமுனிகள் கடைச்சாமியும், செல்லப்பா சுவாமியும், யோகர் சுவாமியும், ஞானம் பெற்ற நல்லூரில் 1966ம் ஆண்டு முதலாவது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத பரமாச்சாரிய சுவாமிகள் கடவுளின் அருட்பெருங் கருணையினாலே ஆன்மீகத் துறையில் ஆறுதலையும், அமைதியையும் கதாப்பிரசங்கம் மூலம் மக்களின் ஆதரவு பெற்று நிரந்தரமான ஒரு ஞானகூடத்தை அமைத்து சிறந்த பணியை செய்து நம் எல்லோருக்கும் இளம் பிராயத்தில் ஒரு வழிகாட்டியாக விளங்கியவர்.

சைவர்களாகிய எங்களுக்கு தாயகத்தில் இருக்கின்ற ஒரே ஒரு ஆதீனம் நல்லை ஆதீனமாகும். அதன் சிறப்பையும், ஆதீனம் ஆற்றி வருகின்ற பணிகளையும் யாவரும் நன்கு அறிவோம். தற்காலப் போர்ச்சூழலிலும் சைவ சமயக் கல்விக்கும், சிவதீட்சைகளுக்கும், நாயன்மார்கள் குருபூசைகளுக்கும் காலத்திற்கேற்ற சமய சொற்பொழிவுகளையும் இவ் ஆதீனம் நிகழ்த்தி வருவதோடு மட்டுமல்லாமல் உலகளாவிய ரீதியில் சைவத்தை வளர்க்கும் பணியிலும் பெரும் பங்காற்றி வருவது சைவர்களாகிய எங்களுக்கு பெருமைக்குரிய விடயமாகும். இவ்வாறு இருந்தும், பூரணத்துவமான கட்டிடவசதி இல்லாதிருப்பது பெரும் குறைபாடாகும்.

நல்லை ஆதீன முதல்வர் அவர்கள் தீர்மானித்துள்ள இத் திட்டத்தைப் பூர்த்தி செய்வதற்கு ஏறக்குறைய 20,000,000 ருபாய்கள் வரையில் தேவைப்படும். கட்டிட வேலைகளை ஐப்பசி 2007 வரையில் ஆரம்பித்து அடுத்த வருடத்தில் நிறைவு செய்யலாம் என ஆதீனம் அவர்கள் எதிர்பார்க்கின்றார்கள். நம் நாட்டின் தற்போதைய சூழ்நிலையில் இவ்வளவு தொகை செலவில், இக் கட்டிட வேலையை தற்சமயம் ஆரம்பிப்பது சரியானதா? என்ற கேள்வி பலர் மனதிலும் எழலாம். இதே போன்ற பல கேள்விகளுக்கு பதில் காணமுடியாமல் பல வருடங்கள் ஆகிவிட்டன.

கல்விக் கூடங்கள், ஆலயங்கள், வைத்திய சாலைகள் போன்று இவ் ஆதீனத்தின் பணியும் எம் மக்களுக்கு அத்தியவசியமானது என்பதை யாவரும் ஏற்றுக் கொள்வார்கள் என்பது எமது பணிவான கருத்து. ஆகவே இறைவன் மேல் நம்பிக்கை வைத்து இக்கைங்கரியத்திற்கு உதவுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தங்கள் ஆதரவினை நாடிநிற்கும்:

கலாநிதி அ.தேவசகாயம் (ஒருங்கிணைப்பாளர்)



உ
சிவமயம்
## யாழ். நல்லைஆதீன புனருத்தாரணம்



தோடுடைய செவியன் விடையேறியோர் தூவெண்மதி சூடி
காடுடைய சுடலைப் பொடி பூசியென் உள்ளங்கவர்கள்வன்
ஏடுடைய மலரான் உனை நாட்பணிந்தேத்த அருள் செய்த
பீடுடைய பிரமாபுரமேவிய பெம்மானிவ னன்றே!

அன்புடையீர்! வணக்கம்.
வரலாறு

சிவன்

**அகச்சந்தான குரவர்கள்**
திருந்திதேவர்
சனத்குமாரார்
சந்தியஞானதரிசினிகள்
பரஞ்சோதிமாமுனிவர்

**புறச்சந்தான குரவர்கள்**
மெய்கண்டார்
அருணநதிசிவம்
மறைஞான சம்பந்தர்
உமாபதி சிவம்

புறச்சந்தான குரவர்கள் நால்வரும் ஒருவருக்கொருவர் சீடர், இவர்கள் சித்தாந்த சாத்திரங் களைச் செய்தார்கள். மடங்களை உருவாக்கிப் பாடஞ்சொன்னார்கள். சந்தான குரவர்களை மடத்து நால்வர் எனலாம். சமய குரவர்கள் வளர்த்த சைவம், சந்தான குரவர்களால் சைவ சித்தாந்தமாயிற்று. சந்தான குரவர்கள் மதாசாரியார்கள் எனப்படுவர். இவர்களுக்கு சீட பரம்பரை உண்டு. கோயில் சமய நிறுவனம், மடம் மத நிறுவனம். சமயம் இன்றி மதமில்லை. ஆதலின் மடம் சமயத்தை வளர்க்கும். மதத்தை விளக்கும். திருமுறைகள் இலக்கியம் போன்றவை. சித்தாந்த சாத்திரங்கள் இலக்கணம் போன்றவை.

சமய குரவர்களில் முதல்வர் சம்பந்தர். சம்பந்தர் மதுரைக்கு வந்தபோது அங்கிருந்த **திருமடத்தில்** தங்குவதற்கு அமைச்சர் குலச்சிறையார் அம்மடத்தைத் தேர்வு செய்திருந்தார். திருஞானசம்பந்தர் தங்கிய அன்றிலிருந்து அம்மடம் **திருஞானசம்பந்தர்** மடம் எனப் பெயர் பெற்றது.

திருஞானசம்பந்தப்பெருமானது திருவருளைப் பெற்ற சிவமுனிவர், சிவானந்த சிவஞான சம்பந்தராய், ஸ்ரீலஸ்ரீ சிவானந்த யோகீந்திர ஸ்ரீ சிவஞான தேசிக பரமாசாரிய சுவாமிகள் என்ற திருப்பெயருடன் திருஞானசம்பந்தராதீனத்தின் குருமுதல்வர் ஆனார். அவர் முதலாக இன்றுவரை குருமரபு தொடர்ந்து வளர்ந்து வருகிறது. வளர்ந்து வரும் குருமரபில் இப்போது பட்டத்தில் உள்ளவர்கள் 292 ஆவது குருமகா சந்நிதானம் **ஸ்ரீலஸ்ரீ அருணகிரிநாத ஸ்ரீ ஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள்** ஆவர்.

ஈழம் வாழ் சைவ மக்களுக்காக மதுரை திருஞான சம்பந்தர் ஆதீனத்தின் 291 ஆவது மகா சன்னி தானம் அவர்கள் யாழ். நல்லையில் திருமடம் காண உளம்பற்றி ஸ்தாபித்து மணிபாகவதர் அவர்களுக்கு முறையாக தீட்சைக் கிரமங்கள் செய்து சைவம் வளர ஆற்றுப் படுத்தினார்கள். இன்றைய ஆதீனகர்த்தர் பல்லாற்றானும் எதிர்கால சூழ்நிலை கருதி திட்டமிட்டுச் செய்ய நினைத்துள்ளார்கள். இப்புண்ணிய பேற்றிற்கு செல்வம், உழைப்பு இவைகளை அன்பர்கள் அர்ப்பணித்து குருவருளையும், திருவருளையும் பெற்றுய்யவும், யாழ். வாழ் சைவ அன்பர்களுக்கு என்றுள்ள ஒரே ஆதீனமாக திகழ்வதால் அக்குருவருளுக்குப் பாத்திரமாகும் வண்ணமும் அன்பர்களைக் கேட்டுக்கொள்கின்றோம்.

யாழ். நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தின் புனருத்தாரண கட்டிடத்திற்கான அத்திவாரக்கல் நாட்டும் வைபவம் 2011 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகளின் ஆசியுடன் கீரிமலை ஸ்ரீ நகுலேஸ்வர சிவன் கோயில் பிரதம சிவாச்சாரியார் நகுலேஸ்வரக் குருக்கள் உட்பட பல ஆலய குருமார்கள், சைவப் பெரியோர்கள் பிரித்தானிய நல்லை ஆதீன திருப்பணிக் குழுத் தலைவர் திரு. சூரிப்பிள்ளை பாலசிங்கம் அவர்கள், ஒருங்கிணைப்பாளர் கலாநிதி அப்பையா தேவசகாயம் தம்பதிகள், அகில இலங்கை இந்து மாமன்றத் தலைவர் திரு.வி.கைலாசபிள்ளை தம்பதிகள், இந்து மாமன்ற உப தலைவரும், இந்து ஆராய்ச்சி நிறுவனத்தின் கௌரவ செயலாளருமாகிய கலாநிதி சைவஞானபானு செஞ்சொற்செல்வர் ஆறு திரு முருகன், யாழ். மாநகராட்சி மேயர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா மற்றும் ஏனைய சைவஸ் தாபனங்களின் பிரமுகர்கள், முன்னிலையில் இனிதே நிறைவேறியது. அத்துடன் 07.02.2012 திகதி புதிய மண்டபத்தின் நிலை வைக்கும் வைபவமும் நடைபெறவிருக்கின்றது.

இவ்வாதீனம் பல வருடங்களாக பராமரிப்பின்றி இருக்கும் கட்டிடத்தில் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் உலகம் முழுவதும் புலம்பெயர்ந்து வாழும் ஈழத்துச் சைவப் பெரியோர்களிடம் இவ்வாதீனத்தின் கட்டிடத்தை புனருத்தாரணம் செய்து தரும்படி வேண்டியிருந்தார்கள். 2005 ஆம் ஆண்டு முற்பகுதியில் இலண்டன் உயர்வாசற்குன்று ஆலய அறங்காவலர் சபையிடமும் இந்த வேண்டு கோளை விடுத்திருந்தார். அத்துடன் 2007 ஆம் ஆண்டு ஆனி மாதம் சுவிற்சர்லாந்து நாட்டில் நடைபெற்ற உலக சைவப்பேரவையின் 7 ஆவது சைவ மாநாட்டில் புலம்பெயர் நாடுகளில் வாழும் சைவப் பெரியோர்களின் உதவியுடன் தொடர்புகொண்டு புனருத்தாரணம் செய்வதெனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இலங்கையின் அப்போதுள்ள போர்நிலைச் சூழலில் கடடிட வேலையை ஆரம்பிப்பது ஏற்றதல்ல எனப் பல திசைகளிலிருந்தும் பலதரப்பட்ட அபிப்பிராயங்கள் தெரிவிக்கப்பட்டமையால் நிதி சேகரிக்கும் முயறசி பின்போடப்பட்டது.

பின்னர் ஸ்ரீ கனகதுர்க்கை அம்பாள் ஆலயத்தின் முன்னாள் தலைவரும் தற்போதைய பொருளாளருமாகிய திரு. தா.யோகநாதனின் முயற்சியால் பல ஆலய தர்மகர்த்தாக்கள், நிர்வாக சபை உறுப்பினர்கள், சைவ ஸ்தாபனங்கள், சைவத் தொண்டர்கள் எல்லோரையும் அணுகி 19.06.2011ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் ஆலய மண்ட பத்தில் கூட்டம் கூட்டப்பட்டது. அன்றைய தினம் நல்லை ஆதீன கடடிட புனருத்தாரண நிர் வாகக் குழு தெரிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| தலைவர் : | சைவமுன்னேற்றச் சங்க முன்னாள் தலைவர்<br>திரு. சூரிப்பிள்ளை பாலசிங்கம் 07956 513 669 |
| உப தலைவர்: | இலண்டன் சிவன் கோயில் தர்மகர்த்தா<br>டாக்டர் எஸ்.சோமசேகரம் 07798 780 118 |
| செயலாளர் : | இராஜராஜேஸ்வரி அம்மன் ஆலய தர்மகர்த்தா<br>டாக்டர் கணன் சிறீதரன் 07595 733 330 |
| உபசெயலாளர் : | இலண்டன் சிவன் கோயில் ஸ்தாபகர்<br>திரு. ந.சச்சிதானந்தன் 07788 196 426 |
| பொருளாளர் : | வெஸ்ரேன் ஜுவல்லர்ஸ் உரிமையாளர்<br>திரு. வே.சிவசுந்தரம் 07725 567 077 |
| உப பொருளாளர் : | இலண்டன் இல்போட் செல்விநாயகர் ஆலய தர்மகர்த்தா<br>திரு. செ.செல்வராசா 07956 301 559 |
| ஒருங்கிணைப்பாளர்கள் : | ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் ஆலய இணை ஸ்தாபகர்<br>கலாநிதி அ.தேவசகாயம் 07780 975 142<br>ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் ஆலய பொருளாளர்<br>தா.யோகநாதன் 07950 180 312 |

இக்கூட்டத்திற்கு வருகை தந்திருந்த அகில இலங்கை இந்து மாமன்ற நிர்வாக உறுப்பினர் திரு.சி.தனபாலா அவர்களின் ஆலோசனைப்படி புனருத்தாரண வேலைகளை மேற்பார்வை யிடுவதற்கும் மேலதிக வேலைகளைச் செய்வதற்கும் அகில இலங்கை இந்து மாமன்றத்தின் ஒத்துழைப்புடனும் இப்பணியைப் பூர்த்தி செய்வதெனவும் தீர்மானிக்கப்பட்டது. அதற்கிணங்க இந்து மாமன்றம் கட்டிட ஒப்பந்தக்காரராக திரு. சண்முகநாதனை நியமிக்க ஆலோசனை வழங்கினார்.

இக்குழு வெகுமுன்னோடியாகச் செயற்பட்டு பல ஆலயங்களிடமிருந்தும் தனியார்களிட மிருந்தும் **£60,000 பவுண்கள்** வரை திரட்டி அனுப்பி வைத்துள்ளனர். இத்திருப் பணியை இவ்வாண்டு ஆவணி மாதத்தில் பூர்த்தி செய்வதற்கு மேலும் **£90,000 பவுண்கள்** தேவைப் படுகின்றன.

இச்சந்தர்ப்பத்தில் சைவப் பெரியோர்களாகிய நீங்கள் அனைவரும் இப்பணியில் பங்குகொண்டு குறிப்பிட்ட காலத்தில் இத்திட்டத்தைப் பூர்த்தி செய்யவேண்டுமென கட்டிடக் குழு தாழ்மையாக வேண்டிக் கொள்கின்றது. நீங்கள் அளிக்கும் பணத்தை தங்களுக்கு அருகாமையிலுள்ள ஆலயத்தில் கொடுத்து பற்றுச்சீட்டுப் பெற்றுக்கொள்ளலாம். அல்லது கீழுள்ள வங்கிக் கணக்கில் பணத்தைச் செலுத்தி நிர்வாகத்தினருக்கு அறிவியுங்கள்.

வங்கிக் கணக்கு விவரம்:

**<u>LONDON</u>**

**NALLAI ADHEENAM BUILDING FUND**
Baryclays Bank, Epsom Branch
Account No : 40097861, Sort Code : 20-29-90

# இலண்டன் நல்லை ஆதீனத் திருப்பணி நிதிக் குழுத் தோற்றம்

முதலாவது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்தர் 08.02.1918 இல் சிவபூமி என்று அழைக்கப்படுகின்ற யாழ்ப்பாண நகரில் அமைந்துள்ள வண்ணார் பண்ணையில் செல்லையா ஐயருக்கும் கனகாம்பாள் என்பவருக்கும் சிரேஷ்ட புத்திரனாக அவரித்தார். உரிய பருவத்தில் ஏடு துவக்கி பாடசாலைக்குச் சென்று கல்வி கற்க ஆரம்பித்தார். இளமையில் ஆலயங்களுக்குச் சென்று சிவன் அருளைப் பெற்று சங்கீதத்தில் நாட்டமுள்ள வராக வளர்ந்து வந்தார். அத்துடன் வைத்தீஸ்வரன் ஆலயத்திற்கு அருகில் வாழ்ந்து வந்ததால் ஆலயத்தில் நடைபெறும் கதாப்பிரசங்கத்தில் நாட்டங்கொண்டு அதுபோல் தானும் கதாப் பிரசங்கம் செய்யவேண்டுமென்ற ஆவல் அவர் மனதில் எழுந்தது. கல்வி கற்றுக் கொண்டிருக்கும் காலத்தில் ஓய்வு நேரங்களில் தனது நண்பர்களுக்கு கதாப் பிரசங்கம் செய்து காட்டுவார். மேலும் சங்கீதத்திலும் நடிப்பிலும் சிறந்து விளங்கினார். ஆலயங்களில் மிக இனிமையாக பண்ணோடு தோவாரங்கள் பாடுவார். மேடை ஏறி பல நாடகங்கள் நடித்தார். இவருக்கு பலதுறைகளில் நாட்டம் இருந்தாலும் முதலாவது சங்கீத கதாப் பிரசங்கத்தை யாழ்ப்பாண வண்ணார் பண்ணை வைத்தீஸ்வரன் ஆலய மண்டபத்தில் அரங்கேற்றினார். இவரது கதாப்பிரசங்க திறமையைக் கண்ணுற்ற பெரியோர்கள் இவரை மணிபாகவதர் என்று செல்லமாக அழைக்கத் தொடங்கினர். 1940 இல் தனது தாய்மாமன் மகன் யோகம்மாளை திருமணம் செய்து கொண்டார். தம்பதிகள் மிக சந்தோசமாகவும் மலரும் மணமும் போல இணைந்து வாழ்ந்து வரும் வேளை 1958 இல் முருகன் அருளால் ஓர் ஆண் குழந்தை கிடைக்கப் பெற்று முருகானந்த சர்மா என்று நாமம் சூட்டி அன்புடன் வாழ்ந்து வந்தனர். ஆலயங்களில் பிரசங்கம் நடைபெறப் போகின்றது என மக்கள் அறிந்தவுடன் நமது மணி ஐயர் தானே செய்யப் போகின்றார் என ஆவலுடன் கேட்பார்கள்.

பல ஆலயங்களில் மணி ஐயர் பிரசங்கம் செய்து வந்த காலத்தில் நல்லூர் கந்தசுவாமி கோயில் திருவிழாவின் போது ஆலயத்திற்கு முன்னாள் உள்ள தண்ணீர்ப் பந்தலில் இருபத்தைந்து நாட்களும் இரவு 9.30 முதல் 10.30 வரை மகாபாரதக் கதை, இராமாயணக் கதை முதலியன தொடாந்து செய்வார். பல வருடங்கள் நானும் இப்பிரசங்கத்தை இருபத்தைந்து தினங்களும் தொடர்ந்து கேட்டு வந்துள்ளேன். இவரின் அழகான, மனதைக் கவரும் வகையில் செய்யும் பிரசங்கத்தை இப்பொழுது நினைத்தாலும் எமதுள்ளம் உவகை கொள்கின்றது. மணி ஐயரின் பிரசங்கம் இலங்கையைக் கடந்து இந்தியா, மலேசியா, சிங்கப்பூர் என பல நாடுகளிலும் பிரசங்கம் செய்து இறை அருள் பெற்று வரும் வேளையில் இந்த மனித உடம்பு இருக்கும் போதே இறை தொண்டாற்றி இறைவனடி சேர வேண்டும் என்ற எண்ணம் மனதில் தோன்ற இல்லற வாழ்க்கையைத் துறந்து துறவறம் மேற்கொள்ள வேண்டுமென்ற எண்ணம் மனதில் தோன்ற 1966 ஆம் ஆண்டு கார்த்திகை நன்னாளில் மதுரை ஆதீனத்தில் காவியுடை தரித்து உருத்திராட்சம் அணிந்து ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தம்பிரான் சுவாமிகள் என்ற நாமம் பூண்டு துறவியாகினார். இலங்கைக்கு வந்த சுவாமிகள் நல்லூர் கந்தன் ஆலயத்திற்கு மேற்கே அருகில் உள்ள ஒரு காணியில் ஓர் ஆதீனத்தை நிறுவினார். 1972 இல் தற்போதுள்ள ஆதீனம் இடம்பெற்றது. இதற்கு புத்தூர் மழவராயர் இடம் வழங்கியிருந்தார். ஸ்ரீலஸ்ரீ சுவாமி நாத தம்பிரான் நாளடைவில் தனது தோற்றத்தில் சில மாறுதல்களைச் செய்தார். தலையிலும் கழுத்திலும் உருத்திராட்ச மாலையும் காதில் குண்டலமும், இடையிலும் தோலிலும் காவி வஸ்திரமும் நெற்றியில் திரிபுண்டரமாக வீபூதியும் உடம்பு முழுக்க விபூதியும் பூசி பார்ப்பவர்களுக்கு ஒரு சைவப் பழம் போல சிவனடியார் தோற்றமாகக் காட்சியளித்தார்.

இவ்வுலகில் தாம் செய்யவேண்டிய சைவப் பணிகள் நிறைவு பெற்றதென உணர்ந்த சுவாமிகள் 10.04.1981 இல் இறையடி சேர்ந்தார்.

அக்காலத்தில் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தம்பிரான் சுவாமிகளின் அன்புக்குரிய இன்றைய ஆதீன முதல்வராக இருக்கின்ற இண்டாவது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் அன்னாரின் பணியைத் தொடர்ந்து செய்து வருகின்றார். அருள் வடிவான இவரும் பணிவு, அடக்கம், பொறுமை ஆகியவற்றின் சின்ன மாக விளங்கும் இவரது தோற்றமும் மக்களைக் கவர்ந்துள்ளன. இவர் முதலாவது குரு மகா சந்திதானத்திற்கு தமது ஆதீனத்திற்கு அருகிலேயே விபூதியிட்டுச் சமாதி அமைத் துள்ளார். இந்த இடத்தில் ஒரு சிறு கட்டிடம் கட்டி அதில் சிவலிங்கம் பிரதிட்சை செய்யப் பட்டுள்ளது.

சைவ மக்களாகிய எமக்கு இலங்கையில் உள்ள ஒரே ஒரு சைவ ஆதீனம் நல்லூரில் அமைந்துள்ள நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனமாகும். இங்கு சைவ சமயக் கல்வியும், சிவதீட்சைகளும், நாயன்மார் குருபூசைகளும், சமயற் சொற்பொலிவுகளும் நன்கு நடைபெற்று வந்தன. எமது தாயகத்தில் ஏற்பட்ட போர் சூழலில் யாழ். நகரில் உள்ள பல கட்டிடடங்கள் அழிக்கப்பட்டன. எமது ஆதீனமும் நலிவுற்றது. இங்கு சைவ சமயம் மேல் ஓங்கி வளர ஒரு நிரந்தர கட்டிடம் தேவைபட்டது. இரண்டாவது குரு மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சரிய சுவாமிகள் ஐரோப்பிய நாடுகளுக்கு வருகை தரும் போதெல்லாம் தமக்கு நல்லூரில ஒரு நிரந்தர ஆதீனக் கட்டிடம் அமைத்துத் தரும்படி பலமுறை விண்ணப்பித் திருந்தார். லண்டன் திருக்கோயில் ஒன்றிய மாநாட்டிற்கு 2005 ஆம் ஆண்டின் வருகையின் போது ஆர்ச்வே முருகன் ஆலயத்தில் நடைபெற்ற மகாநாட்டிலும் நல்லை ஆதீனம் பற்றி கலந்துரையாடப்பட்டு அன்றைய திருக்கோயில் ஒன்றிய நிர்வாகிகள் செயற்பட்டு பின் அது மந்த நிலை அடைந்தது.

2007 ஆம் ஆண்டு மே மாதம் உலக சைவப் பேரவையின் 11 ஆவது மகாநாடு சுவிஸ் நாட்டில் நடைபெற்றது. இம்மாநாட்டிற்கும் வருகை தந்த ஆதீன சுவாமிகள் தமது நல்லை ஆதீனம் பற்றி தயவு செய்து அக்கறை கொள்ளுமாறு அன்புடன் வேண்டிக் கொண்டார். இம் மகாநாட்டில் ஆதீனக் கட்டிடம் பற்றி தீர்மானம் ஒன்று எடுக்கப்பட்டது. இதன் பயனாக நல்லை ஆதீன கட்டிட நிதி சேகரிப்புக்கு ஆதீனத்தின் சார்பாக கலாநிதி அப்பையா தேவசகாயம் அவர்கட்கு அனுமதி அளித்திருந்தார். இதன் பயனாக 2007 ஆம் ஆண்டு நல்லை ஆதீன கடடிட வைப்புக் கணக்கு ஒன்று லண்டனில் ஆரம்பிக்கப்பட்டது. ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் ஆலயத் தேர்த் திருவிழாவுக்கு வருகை தந்துள்ள ஆதீன சுவாமிகள் முன் முதன்முதலாக நிதி சேகரிப்பு ஆரம்பிக்கப்பட்டது. இந்நிதிக்கு முதன்முதலாக திரு.வே.சிவசுந்தரம் அவாகள் 1001 பவுண் கொடுத்து நிதி சேகரிப்பை ஆரம்பித்து வைத்தார். இதற்கு முழு ஆர்வமாக கலாநிதி அ.தேவசகாயம் அவர்களும், திரு.சச்சிதானந்தன் அவர்களும் மற்றும் சைவப் பெரியோர்கள் பலரும் செயற்பட்டார்கள். தேர்திருவிழாவின் போது பக்தர்கள், அடியார்களிடம் பணம் வசூலிக்கப்பட்டது. நானும் அன்றைய தினம் முழுமூச்சுடன் செயற்பட்டு நிதி சேகரித்தோம். தேர் உலா வரும் வீதியில் ஒரு மண்டபம் அமைத்து அதில் ஆதீன சுவாமிகள் வீற்றிருக்கவும் நானும். திருவாளர்கள் தேவசகாயம், சச்சிதானந்தன் முதலியோரும் பண வசூலிப்பு செய்து வந்தோம்.

இக்காலகட்டத்தில் யாழ்ப்பாணத்தில் போர்ச்சூழல் அதிகரிக்க யாழ். நகரில் உள்ள பலகட்டடங்கள் சேதமாக்கப்பட்டன. இவ்வேளை நாம் கட்டடத்திற்கான பண சேகரிப்புக்குச்

சென்றபோது பலபெரியோர்கள் இக்கால நிலையில் கட்டிடம் புதிதாகக் கட்டுவது நல்லதல்ல என அறிவுரை வழங்கினர். நாம் இதைப் புரிந்துகொண்டு பண சேகரிப்பை பின்போட்டோம். சேகரித்த பணத்தை எமது கட்டிட வைப்புக் கணக்கில் சேமிப்பில் போட்டு வைத்தோம் காலம் விரைவாக ஒடியது. இலங்கையில் போர்சூழல் முடிவுக்கு வந்தது. 2010ஆம் ஆண்டு திருக்கோயிலில் ஒன்றிய மாநாட்டுக்க வருகை தந்த ஆதின சுவாமிகள் ஆதின கட்டட வேலையைத் தொடங்குமாறு வற்புறுத்தினார். இதன் பிரகாரம் ஆதீன கட்டிட நிதி சேகரிக்கு முகமாக 19.06.2011 இல் ஸ்ரீ கனகதுர்க்கை ஆம்மன் ஆலயத்தில் பல சைவப்பெரியார்கள் ஒன்று கூடி நல்லை ஆதீன கட்டட புனருத்தாரண நிர்வாகக் குழு ஒன்று தெரிவு செய்யப்பட்டது.

தலைவர் : திரு.சூ.பாலசிங்கம்
உப தலைவர் : டாக்டர் எஸ்.சோமசேகரம்
செயலாளர் : டாக்டர் ச.மகேஸ்வரன்
உப செயலாளர் : டாக்டர் கணன் ஸ்ரீதரன்
பொருளாளர் : திரு.வே.சிவசுந்தரம்
உப பொருளாளர் : திரு.செல்வராசா

ஒருங்கிணைப்பாளர்கள்
திரு. அ.தேவசகாயம்
திரு. தா.யோகநாதன் ஆகியோர் நியமிக்கப்பட்டனர்.
பின்னர் திரு. தேவசகாயம் அவர்கள் முயற்சியால் நிர்வாக உறுப்பினர்களாக
திரு. அ.ஸ்ரீசற்குணம்
திரு. க.ரங்கநாதன்
திரு. லோகேஸ்வரன் ஆகியோர் சேர்த்துக்கொள்ளப்பட்டனர்.

19.06.2011 ஆம் திகதி நடந்த கூட்டத்திற்கு வைத்தியகலாநிதி ச.மகேஸ்வரன் அவர்கள் சமுகமளிக்கவில்லை. அவருடைய ஒப்புதல் இல்லாமைலேயே அவரைச் செயலாளராக நியமித்தார்கள். பின்னர் அவர் அப்பதவியை ஏற்காத காரணத்தினால் உப செயலாளராக டாக்டர் கணன் ஸ்ரீதரன் அவர்களை அவருடைய ஒப்புதல் இல்லாமல் செயலாளர் பதவிக்கும், திரு.நடராசா சச்சிதானந்தனை உபசெயலாளராகவும் நியமித்தனர். டாக்டர் கணன் ஸ்ரீதரன் அவர்கள் முதலாவது கூட்டத்தைத் தவிர வேறு எந்தக் கூட்டத்திற்கும் சமுகம் அளிக்கவில்லை. அவர் தன்னால் இப்பணியை சரிவரச் செய்வதற்கு நேர அவகாசம் இல்லாததினால் நடராசா சச்சிதானந்தன் அவர்களைச் செயலாளர் பணியைச் செய்வதற்கு இசைந்ததுடன், தான் உபசெயலாளராகப் பணி புரிவதாகவும் அறிவித்ததைத் தொடர்ந்து திரு.நடராசா சச்சிதானந்தன் அவர்கள் செயலாளர் பணியை ஏற்றுக்கொண்டார்.


இக்குழுவின் அயராத உழைப்பாலும், லண்டணில் உள்ள சில ஆலயங்கள், சைவப் பெரியோர்கள், சில தனவந்தர்கள் ஆகியோரின் மனமுவந்த அன்பளிப்பாலும் கட்டிட வேலை ஆரம்பிப்பதற்கான பணம் இலகுவில் சேர்ந்தது. இவ்வேளை ஆதீனத்தின் கட்டிடத்திற்கான அத்திவாரக்கல் நவம்பர் 2011 இல் போடப்பட்டது. இவ்விழாவில் எமது நிர்வாகக் குழுவில் சிலரும், யாழ். ஆதீனத் தலைவர், சிவாச்சாரியார்கள், சைவப்பெரியோர்கள் யாழ். மாநகராட்சி மேயர் இன்னும் பலரும் கலந்து அடிக்கல் நாட்டு விழாவை சிறப்பித்தனர். தொடர்ந்து லண்டன் கட்டிட நிர்வாகக் குழு பலமுறை சந்தித்து அரும்பணியாற்றியும், நல்லூர்க் கந்தன் அருளாலும், சைவப் பெரியோர்கள் உதவியானாலும் கட்டிடத்திற்குத் தேவையான பணம்

கிடைக்கப்பெற்று கட்டிட வேலை எவ்வித தடங்களுமின்றி இனிதே நிறைவேறியது. கூடிய விரைவில் கட்டிட திறப்பு விழா நடைபெற இறை அருள் கூடிவரும். இருமாடிக் கட்டிடம் கொண்ட ஆதீனம் கீழ்ப்பகுதியில் ஆதீன குருமகாசந்நிதானம் அவர்களின் பாவிப்பதற்கும், மேல்மாடி சைவ சமய வளர்ச்சிக்காக நிகழ்ச்சிகளும் நடைபெற ஒழுங்குகள் செய்யப்படும். ஆதீன கட்டிட அமைப்பாளர் முதல் இரண்டு வருடங்களுக்கு கட்டிட உத்தரவாதம் தந்துள்ளார். இக்காலத்தில் ஏற்படும் கட்டிட பிழைகளை அவரே திருத்தித் தருவார். இவை யாவும் இனிதே நடைபெற எமது சைவ சமயத்தின் முழுமுதற் கடவுளாகிய சிவபெருமான் அருள்பாலிப்பார் என மனப்பூர்வமாக நம்புகின்றோம்.

**மேன்கொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்.**

**சிவநெறிச் செல்வர் செ.மனோகரன்**

---


நல்லை ஞானசம்பந்தர் ஆதீனம்
இரண்டாவது குருமகா சந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக
ஞானசம்பந்த பரமாசார்ய ஸ்வாமிகள்

# எழில்மிகு தோற்றத்தில் அருள் மிகு நல்லை ஆதீனம்



இந்தியாவில் பல சைவ ஆதீனங்கள் அமைந்திருக்கும் நிலையில், இலங்கையிலுள்ள ஒரேயொரு சைவ ஆதீனமாகத் திகழும் நல்லை ஆதீனம், யாழ். நல்லூரில் அமைந்திருப்பது நல்லூர் பிரதேச மக்களுக்கு மட்டுமல்ல. வடபகுதி மக்களுக்கே பெருமை தருவதாக இருக்கிறது.

நல்லூர் பலவகையிலும் சிறப்பு பெறும் பிரதேசமாகும். யாழ்ப்பாணத்து தமிழ் மன்னர்களது ஆட்சிக் காலத்தில் இராசதானியாக விளங்கிய பெருமைக்குரியது. வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த கந்தசுவாமி கோயில் உட்பட பல ஆலயங்களை தன்னகத்தே கொண்டது நல்லூர். எந்நேரமும் ஆலய மணியோசைக்கு மத்தியில், இறை சிந்தனையை தோற்றுவித்துக் கொண்டிருக்கும் புனித பிரதேசமாக விளங்கும் நல்லூருக்கு மற்றுமொரு சிறப்பாக நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம் அமைந்திருப்பதும் குறிப்பிடத்தக்க விடயமாகும்.

இங்கிலாந்து தேசத்தில் புலம்பெயர் மக்களுள் ஒருவனாக வாழ்ந்து கொண்டிருந்தாலும், நல்லூரைச் சொந்த இடமாகக் கொண்டவன் என்பதாலும், பிறந்த நாளிலிருந்து இங்கு வாழ்ந்து வந்த பல வருட காலத்திலும் நல்லூரில் கால்பதித்து, நடமாடித் திரிந்தவன் என்பதாலும், அன்றைய பசுமையான நிகழ்வுகளை நினைத்துப் பார்க்கும்போது அது மகிழ்ச்சியளிப்பதாகவே இருக்கிறது. நல்லைக் கந்தனை தரிசனம் செய்து, ஆலய வீதியை வலம் வந்த நாட்களை மறக்க முடியாது. மகோற்சவ காலம் என்றென்றும் நினைவில் இருக்கும். நல்லை ஆதீனம் தோற்றம் பெற்ற நாளிலிருந்து பல தடவைகள் அங்கு சென்று வந்தது, நிகழ்ச்சிகளில் பங்குகொண்டது என்பன என் நினைவலைகளில் தொடருகின்றன. ஆதீனத்தின் முதலாவது குருமகாசந்நிதானமாகவிருந்த சுவாமிகளது கதாப் பிரசங்கம் நிகழ்ச்சிகளையும் அவரது சொற்பொழிவுகளையும் அந்நாளில் நான் விரும்பிக் கேட்பது வழக்கம்.

இங்கிலாந்து வந்ததன் பின்னரும், அவ்வப்போது யாழ்ப்பாணம் சென்று ஆலய வழிபாடுகளிலும், ஆதீன நிகழ்ச்சிகளிலும் கலந்து கொள்வதை நான் தவறவிடவில்லை. இப்போது இரண்டாவது குருமகாசந்நிதானமாக இருக்கும் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த பரமாசார்ய சுவாமிகள் இங்கிலாந்து வரும்போதெல்லாம் நல்லை ஆதீனக் கட்டிடத்தின் வசதிக் குறைபாடுகள் பற்றி எடுத்துச் சொல்லுவார். அவரது வேண்டுகோளை நிறைவேற்றும் வகையிலேயே, இங்குள்ள என்போன்ற புலம்பெயர்ந்தோர், அது விடயத்தில் தேவையான உதவிகளை வழங்குவது எனத் தீர்மானத்து செயற்பட்டதன் முழுமையான வெற்றியே புதுப்பொலிவுடன் காட்சியளிக்கும் ஆதீனத்தின எழில்மிகு தோற்றமாகும். இதுவிடயத்தில் இங்கிலாந்து வாழ். புலம்பெயர் மக்கள் மகிழ்ச்சியும் பெருமையும் அடையும் அதே வேளை, நல்லூர் பிரதேசத்தை சொந்த இடமாகக் கொண்டவன் என்பதால், இது எனக்கு இரட்டிப்பு மகிழ்ச்சியைத் தருகிறது.

சைவ மக்களின் ஆன்மீகத் தேவைக்கும், அவர்களது இறை சிந்தனையை வளர்த்துக் கொள்ளவும், சைவப் பாரம்பரிய நெறி முறையிலான வாழ்க்கையை அமைத்துக் கொள்ளவும் நல்லை ஆதீனம் என்றென்றும் துணையாக இருக்கும். ஆதீன முதல்வர் அவர்களது சிறப்பான வழிநடத்தலினாலும், இறையருளாலும் தொடர்ந்து ஆதீனப் பணிகள் நல்ல வகையில் அமையவேண்டும் என நல்லைக் கந்தன் திருவருள் துணைக் கொண்டு வாழ்த்துகிறேன்.

லண்டன் **- அ.சற்குணம்.**

# யாழ். நல்லை ஆதீன திருப்பணி நிதி

இலங்கையிலுள்ள பிரசித்திபெற்ற முதன்மையான சைவ ஆதீனம் நல்லை ஆதீனமாகும்.

கடந்த முப்பது வருட நாட்டுச் சூழலினால் இலங்கையிலுள்ள சைவத் தமிழ் மக்களுடைய வாழ்வாதாரங்கள் சீரழிந்ததுபோல் சைவப் பாரம்பரியங்களும் சிதைந்துவிட்டன. இவற்றைச் சீராக்க வேண்டியது சைவர்களாகிய நமது கடமையாகும்.

கோயில்கள், இராஜகோபுரங்கள், கண்டாமணிக் கோபுரங்கள், திருத்தேர்கள் ஆகியனவற்றைப் புனரமைப்பது போன்றவை யாவும் நமது தலையாய கடமையாகும். அதேபோன்று பாடசாலைகளும், நூலகங்களும் சைவ நிறுவனங்களும் சீரமைக்கப்படவேண்டியதும் நமது கடமையாகும்.

இந்த வகையில் தவத்திரு. சோமசுந்தர பரமாசாரிய சுவாமிகள் தலைமையில் செயற்படும் நல்லை ஆதீனம் முழுமையான வசதிகளுடன் இயங்குவது முக்கியமானது. இதற்கு இன்றைய ஆதீனக் கட்டிடங்களை புனரமைப்பது கட்டாயமான தேவையாகும்.

இதற்கமைய சுவாமிகளின் தலைமையில் யாழ்ப்பாணத்தில் ஒரு குழு சேவையில் ஈடுபட்டுள்ளது. இக்குழு தேவார வகுப்புகள், வேதாகம வகுப்புகள், யோகாசன வகுப்புகள் உட்பட மற்றும் சைவசமயப் பிரச்சாரப் பணிகளிலும் ஈடுபடத் தீர்மானித்துள்ளது. ஆதீன முதல்வரின் தலைமையில் செயற்படும் இக்குழுவினர் இலங்கையிலுள்ள சைவ நிறுவனங்களையும், ஆலயங்களையும் சைவப் பிரமுகர்களையும் அணுகி வேண்டிய ஆலோசனைகளையும் உதவிகளையும் பெற்றுக்கொள்வார்கள்.

இந்தச் சேவைகளுக்கு எல்லாம் ஆதீனத்திலுள்ள இடவசதி போதாமையினால் வசதிகள் நிறைந்த புதிய ஒரு கட்டிடத்தை அமைக்கும் திருப்பணியில் இலண்டனில் ஒரு குழு சமீபத்தில் அமைக்கப்பட்டுள்ளது. ஆதீன முதல்வர் சமீபத்தில் இலண்டன் வந்திருந்தபோது கட்டிட அமைப்புச் சம்பந்தமாகப் பலருடனும் ஆலோசனை மேற்கொண்டு இக்குழு அமைக்கப்பட்டது. இக்குழு கட்டிடத் திருப்பணிக்கு வேண்டிய நிதியைத் திரட்டும் பொறுப்பையும், கட்டிடத்தை நிர்மாணிக்கும் பொறுப்பையும் ஏற்றுக்கொண்டுள்ளது.

இலண்டனிலுள்ள நல்லை ஆதீனக் குழுவினர் உலகத்தின் பல நாடுகளிலுமுள்ள சைவ நிறுவனங்களையும் ஆலயங்களையும், சைவப் பிரமுகர்களையும் அணுகி நிதி திரட்டும் முயற்சியில் ஈடுபட உள்ளனர்.

அகில இலங்கை இந்து மாமன்றத்தினரிடம் பின்வரும் பொறுப்புக்களை ஒப்படைப்பதாக இலண்டன் குழு தீர்மானித்துள்ளது.

1) புதிய கட்டிடத்தைக் கட்டும் திட்டத்தை வகுத்தல்
2) ஆதீனத்தின் அனுசரணையுடன் கட்டுமானப் படங்களை வரைதல்
3) உருவாக்கப்பட்ட திட்டத்திற்கான ஒப்புதலை இலண்டன் குழுவினரினரிடம் பெறுதல்
4) மேற்படி திட்டத்திற்கான சகல அனுமதிகளையும் பெறுதல்.
5) கட்டுவதற்கான மேற்பார்வையையும் அதனைக் கவனிக்கும் பொறுப்புக்களையும் ஏற்றுக்கொளளுதல்.

**நல்லை ஆதீனத் திருப்பணிக் குழு.**
5 Chappal Road West Ealing
London w 13 9AE
**சு.பாலசிங்கம், தலைவர்**

(நன்றி : 'புதினம்' 01.08.2011)

# யாழ்ப்பாண நல்லை ஆதீன
# புதிய கட்டிடம் நிர்மாணம்

நல்லைக் கந்தன் ஆலயத்திற்குப் பின்புறமாக மேற்கு வீதியில் அமைந்திருக்கிறது நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனம். இலங்கையிலுள்ள ஒரேயொரு சைவ ஆதீனமாகப் பெருமைபெற்றுத் திகழும் நல்லை ஆதீனம், அறுபதுகளின் ஆரம்பத்தில் ஆரம்பித்து இன்றுவரை செயற்பட்டு வருகின்றது. ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் ஆதீனத்தின் ஸ்தாபகராகவும் முதலாவது குருமகா சந்நிதானமாக இருந்து ஆதீன செயற்பாடுகளை முன்னெடுத்தார்.

1981 ஆம் ஆண்டில் முதலாவது குருமகா சந்நிதான சுவாமிகள் சமாதியடைந்ததும் அப்பொழுது ஆதீனத்தின் இளவரசராகவிருந்த சின்ன சுவாமிகள் இரண்டாவது குருமகா சந்நிதான மாக பட்டாபிஷேகம் செய்யப்பட்டு பதவி ஏற்றார். இவரே இப்போது ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பராமாசாரிய சுவாமிகளாக ஆதீனத்தை வழிநடத்தி வருகிறார். நல்லை ஆதீனக் கட்டிடம் பழமையானதாகவும் வசதிகள் குறைந்த நிலையிலும் இருந்ததால் அதனைப் புனர்நிர்மாணம் செய்யவேண்டிய நிலை உணரப்பட்டது. ஆதீன சுவாமிகள் சமய நிகழ்வுகளில் கலந்துகொள்வதற்காக வெளிநாடுகளுக்குச் செல்லும் வேளைகளில் அங்குள்ள புலம்பெயர் சைவ மக்களிடம் ஆதீனத்தின் கட்டிடக் குறைபாடுகளைப் பற்றி எடுத்துக்கூறி வந்துள்ளார். ஆதீன சுவாமிகளின் வேண்டுகோளை ஏற்று பெரிய பிரித்தானியாவில் வாழுகின்ற சைவப் பெருமக்கள் இக்கைங்கரியத்தை நிறைவேற்ற முன்வந்தார்கள். இதற்காகப் பெரிய பிரித்தானியாவில் ஆதீனக் கட்டிட புனருத்தாரண நிர்வாகக் குழு அமைக்கப்பட்டது.

இக்குழுவினர் அங்கிருந்து யாழ்ப்பாணம் வந்து 07.11.2011 அன்று ஆதீனத்தின் புதிய கட்டிடத்துக்கான அடிக்கல் நாட்டும் வைபவத்தில் பங்குகொண்டு சிறப்பித்தனர். பெரிய பிரித்தானியா புனருத்தாரண நிர்வாகக் குழுவின் தலைவராக எஸ்.பாலசிங்கம், உபதலைவராக வைத்திய கலாநிதி எஸ்.சோமசேகரம், செயலாளராக ந.சச்சிதானந்தன், பொருளாளராக வே.சிவசுந்தரம், உப பொருளாளராக செ.செல்வராசாவும், ஒருங்கிணைப்பாளர்களாக கலாநிதி அ.தேவசாயகம், தா.யோகநாதன் மற்றும் நிர்வாகக் குழு உறுப்பினர்களும் இணைந்து நல்லை ஆதீனத்தின் புதிய கட்டிடத்தை உருவாக்கி வருகின்றனர். பெரிய பிரித்தானியாவில் வாழுகின்ற சைவ அன்பர்களின் முழுமையான நிதியுதவியுடனேயே இக்கட்டிடம் கட்டப்படுவதாக புனருத்தாரண நிர்வாகக் குழுச் செயலாளர், ந.சச்சிதானந்தன் தெரிவித்துள்ளார். மேலும் பெரிய பிரித்தானியா வாழ் சைவப் பெருமக்களின் பூரண ஆதரவு கிடைத்திருக்காவிட்டால் இந்தக் கைங்கரியம் துரிதமாக நிறைவுபெற்றிருக்க முடியாது.

ஆதீனக் கட்டிட வேலைகள் நிறைவுபெற்ற நிலையில் கட்டிடத் திறப்புவிழா இலண்டன் நிர்வாகக் குழுவினரால் ஏற்பாடு செய்யப்படவேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டிருக்கின்றது. வெகுவிரையில் திறப்பு விழா காணவிருக்கும் நல்லை ஆதீனம் தொடர்ந்தும் சைவசமயத்திற்கும், தமிழ்மொழிக்கும் அளப்பரிய சேவையை ஆற்றவேண்டும் என்று தமிழ்கூறும் நல்லுலகம் எதிர்பார்த்து நிற்கின்றது.

**- த.சிவநித்திலன்.**

(நன்றி : 'தினக்குரல்' 17.12.2012)

# Nallai Adheenam Building Fund- Receipts as at 16/06/2013

| | Date | | SL Rupees |
|---|---|---|---|
| 1 | 9/8/2012 | Sri Kanaga Thurgai Amman Temple | 1,920,200.00 |
| 2 | 9/8/2012 | Dr. Somasekaram | 1,920,200.00 |
| 3 | | All Ceylon Hindu Congress | 1,714,190.00 |
| 4 | 8/16/2007 | Mr. V. Sivasundaram | 1,249,666.16 |
| 5 | 9/8/2012 | Mr. Soorippillai Balasingam | 1,152,120.00 |
| 6 | 8/20/2011 | Sri Selvavinagagar Temple | 1,017,706.00 |
| 7 | 9/1/2011 | High Gate Murugan Temple | 960,100.00 |
| 8 | 12/5/2011 | Stoneleigh Amman Temple | 960,100.00 |
| 9 | 1/26/2012 | Wimbledon Pilliyar Temple | 960,100.00 |
| 10 | 10/7/2011 | Ticket Books sale | 865,403.42 |
| 11 | 11/30/2011 | Shri Varasiththi Vinayagar Temple-Canada | 465,567.85 |
| 12 | | Nagapoosani Amman Temple | 395,710.00 |
| 13 | 12/16/2011 | Shri Sakthi Vinayagar Temple-Harrow | 384,040.00 |
| 14 | | World Saiva Council | 300,000.00 |
| 15 | 6/5/2013 | Kanaga Thurgai Amman Temple Deevotees | 278,813.04 |
| 16 | 9/1/2011 | Mrs. N. Yoganathan | 240,217.02 |
| 17 | 1/30/2012 | London Sri Murugan Temple | 211,222.00 |
| 18 | 7/2/2011 | Dr. Mrs. Sritharan | 193,556.16 |
| 19 | 8/17/2007 | Dr. Mrs. Radhakrishnan | 192,020.00 |
| 20 | 8/30/2011 | Mr. Paramanathan | 192,020.00 |
| 21 | 9/8/2012 | Pathiragali Amman Temple-Walthamstore | 192,020.00 |
| 22 | 1/28/2012 | Well wisher | 192,020.00 |
| 23 | 5/8/2012 | Mr. V. Anantha thiyagar | 192,020.00 |
| 24 | 5/8/2012 | Mr. V. R. Pathmanathan | 192,020.00 |
| 25 | 5/8/2012 | Mr. V. R. Ramanathan | 192,020.00 |
| 26 | 5/14/2012 | Dr. A. Devasagayam | 192,020.00 |
| 27 | 5/15/2012 | Mr. Logeswaran | 192,020.00 |
| 28 | 5/21/2012 | Mr. Shan Navaratnam | 192,020.00 |
| 29 | 5/22/2012 | Dr. Sivathasan | 192,020.00 |
| 30 | 5/22/2012 | Mr. Jeyaseelan- Tooting | 192,020.00 |
| 31 | 5/30/2012 | Dr. Rajasundaram | 192,020.00 |
| 32 | 7/16/2012 | Sagana Jewllers | 192,020.00 |
| 33 | 7/17/2012 | Mr. M. Thangarajah Global Exchange Ltd | 192,020.00 |
| 34 | 8/20/2012 | Mrs. Karuna Ratnarajah | 192,020.00 |
| 35 | 2/21/2013 | Mr. R. T. Ratnasingham | 192,020.00 |
| 36 | 4/23/2013 | Mr. N. Kugadason | 192,020.00 |
| 37 | 5/17/2013 | Mr. Parameswaran | 192,020.00 |
| 38 | 5/24/2013 | Mr. Ariyaratnam Easwaramohan | 192,020.00 |
| 39 | 5/28/2013 | Mr. R. Kugavarathan | 192,020.00 |
| 40 | 6/5/2013 | Mr. S. Puthirasigamany | 192,020.00 |
| 41 | 6/14/2013 | Mr. S. Srikantha | 192,020.00 |
| 42 | 10/7/2011 | Mr. S Senthilselvan | 115,212.00 |
| 43 | | Mr. C. Sithamparapillai | 100,000.00 |
| 44 | | Mr. Sambandamoorthy Murugamoothy | 100,000.00 |
| 45 | 2/19/2013 | Mr. N. Balasubramaniam | 96,202.02 |
| 46 | 9/8/2012 | Mr. N. Satchithananthan | 96,010.00 |
| 47 | 5/7/2012 | Mr. S. Premananthan-Spice Land | 96,010.00 |


| | | | |
|---|---|---|---|
| 48 | 5/9/2012 | Mr. M. Kethiswaran | 96,010.00 |
| 49 | 5/18/2012 | Mr. K. Sabaratnam | 96,010.00 |
| 50 | 5/30/2012 | Mr. S. Jeyananthan | 96,010.00 |
| 51 | 7/11/2012 | Rathi Jewellers | 96,010.00 |
| 52 | 7/17/2012 | Seerisa Recruitment Ltd | 96,010.00 |
| 53 | 8/13/2012 | Dr. Balachandran | 96,010.00 |
| 54 | 5/13/2013 | Mr. K. Ranganathan | 96,010.00 |
| 55 | 5/16/2013 | Mr. Ramachandran | 96,010.00 |
| 56 | 5/31/2013 | Mr. A. Pathmanathan | 96,010.00 |
| 57 | 6/3/2013 | Mr. P. Thavanathan | 86,409.00 |
| 58 | 6/7/2012 | Mr. Kanagasundram | 76,808.00 |
| 59 | 5/8/2012 | Mr. V. R. Loganathan | 57,606.00 |
| 60 | 5/31/2013 | Mr. R. Paramakumar | 57,606.00 |
| 61 | 9/1/2011 | Mr. Kanagasabai Nadarajah | 48,005.00 |
| 62 | 5/6/2012 | Mr. S. Thamboo | 48,005.00 |
| 63 | 5/22/2012 | Mr. Ganeshamoorthy | 48,005.00 |
| 64 | 11/7/2011 | SKTA Temple Preists | 39,364.10 |
| 65 | 7/17/2012 | Mr. N. G. Mahesh Jewellery | 38,596.02 |
| 66 | 7/9/2012 | Dr. V. Balasegaram | 38,404.00 |
| 67 | 8/20/2012 | Mr. K. Manoharan | 38,404.00 |
| 68 | 4/29/2013 | Well wisher | 38,404.00 |
| 69 | 5/24/2013 | Mr. G & A Natgunan | 38,404.00 |
| 70 | 5/31/2013 | Mr. P. Thavanathan | 38,404.00 |
| 71 | 1/30/2012 | Mr. Kanagasabai Global | 28,803.00 |
| 72 | 7/9/2012 | Mr. Thanigaivelan | 19,202.00 |
| 73 | 7/9/2012 | Station Super Stores | 19,202.00 |
| 74 | 7/9/2012 | Dr. Sivakumar | 19,202.00 |
| 75 | 7/17/2012 | Duch Flowem Ltd | 19,202.00 |
| 76 | 8/24/2012 | Mr. E. Sudaralingam (Crawley Amman) | 19,202.00 |
| 77 | 4/29/2013 | Mr. Velayuthapillai | 19,202.00 |
| 78 | 5/17/2013 | Mr. Arulthas | 19,202.00 |
| 79 | 7/9/2012 | Gayathiri Silk- Eastham | 9,601.00 |
| 80 | 7/9/2012 | Mr. P. Chandrakumar (6 kumar) | 9,601.00 |
| | | Total | 21,947,738.79 |




நல்லை ஆதீன மடாலயம் புனருத்தாரணம் செய்து இன்று இந்து மக்கள் பெருமைப்படும் வகையில் ஒரு புதிய கட்டிடம் நிறைவு பெற்றதை யிட்டு நாங்கள் நிம்மதியடைகிறோம்.

இந்த முயற்சியில் ஈடுபட்ட எல்லோரும் சேர்ந்து செய்த கூட்டுமுயற்சியின் விளைவுதான் இக்கட்டிடம். இதற்குப் பண உதவி தந்த யாவருக்கும், இக்கட்டிட அமைப்பை பொறுப்பேற்று வழி நடத்திய அகில இலங்கை இந்து மாமன்றம், கட்டிட ஒப்பந் தக்காரர் திரு சண்முகநாதன், லண்டன் நல்லை ஆதீன கட்டடக்குழுவினர் சகலருக்கும் நன்றி கூற விரும்புகிறேன்.

**வேலுப்பிள்ளை சிவசுந்தரம்**
**பொருளாளர்,**
**இலண்டன் நல்லை ஆதீன நிதிக்குழு.**



## நன்றி



நல்லை ஆதீன மடாலயத் திருப்பணி செவ்வனே நிறைவேற உதவிய அனைத்து உள்ளங்களுக்கும் எமது உளப்பூர்வ நன்றிகள்.

- மடலாயம் அமைவதற்கான காணியைத் தந்துதவிய புத்தூர் மழவராயர் குடும்பத்தினர்.
- யாழ்ப்பாண மாநகர சபை நிர்வாகத்தினர்.
- பிரித்தானிய சைவப் பெருமக்கள்.
- பிரித்தானிய சைவத் திருக்கோவில்களின் நிர்வாகத்தினர்.
- திருப்பணியை ஒட்டிய மேற்பார்வை மற்றும் ஆலோசனைகளை தகுந்த முறையாகத் தந்துதவிய அகில இலங்கை இந்து மாமன்றத்தினர்.
- கட்டிடத் திருப்பணியை நேர்த்தியாக நிறைவு செய்து தந்த Jeyasunjan Construction நிறுவத்தினரும், அவர்களது பணியாளர்களும்.
- இந்த மலருக்கு ஆசிச் செய்திகளும், வாழ்த்துரைகளும், ஆக்கங்களும் தந்த பெரியோர் களும், இம்மலரை குறுகிய காலத்தில் அச்சிட்டு உதவிய அச்சகத்தினரும்

மற்றும்

பலவழிகளிலும் ஒத்துழைத்து, ஆக்கபூர்வமான உதவிகளை வழங்கிய அனைத்து நன் நெஞ்சங்களுக்கும்,

இலண்டன் நல்லை ஆதீன நிதிக்குழு உளமார தனது நன்றிகளைத் திருப்தியுடன் கரம் குவித்து தெரிவித்துக் கொள்கிறது.

**நடராசா சச்சிதானந்தன்**
**செயலாளர்,**
**இலண்டன் நல்லை ஆதீன நிதிக்குழு.**



Sivaram Printers 20(32), College Road, Jaffna. T.P. 021 221 9440